

# குறள் கண்ட வாழ்வு

அ. ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# குறள் கண்ட வாழ்வு

அ. ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-600 017

கங்கை முதற் பதிப்பு : டிசம்பர், 1994

கங்கை புத்தக நிலைய வெளியீடு

விலை: ரூ. 22-00

அச்சிட்டோர் :

ஸ்ரீ பரமேஸ்வரி பிரஸ்

49, காரணீஸ்வரர் கோயில் தெரு

மயிலாப்பூர், சென்னை-600 004

# முன்னுரை

அற நூலுள் கூறப்பெற்ற அருங்கருத்துக்களை வாழ்க்கையில் கொண்டு செலுத்திய பெரியார்கள் எல்லா நாட்டிலும் உண்டு. பழந்தமிழ் இலக்கியங் களில் காணப்பெறும் பெரியார்களின் வாழ்க்கையைக் குறளின் அடிப்படையில் காண வேண்டும் என்ற முறையில் தோன்றியவைகளே இக்கட்டுரைகள்.

இந்நூலுள் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் 'ஆனந்த விகட'னில் வெளியானவை. எனவே, 'ஆனந்த விகடன்' ஆசிரியர் அவர்கட்கு என்னுடைய நன்றி முதற்கண் உரியதாகுக.

என்னுடைய கட்டுரைகளை நூல் வடிவில் ஆக்கியமைக்காக கங்கை புத்தக நிலையத்தாருக்கு என் நன்றியைத் தெரிவிப்பதோடு, அந்நிலையம் ஆல்போல் தழைக்க வாழ்த்துகிறேன்.

அ. ச. ஞானசம்பந்தன்

# உள்ளுறை


| கட்டுரை | | பக்கம் |
|---|---|---|
| 1. | எது சால்பு? | 1 |
| 2. | கவரிமா(ன்) அன்னார் | 6 |
| 3. | வேண்டாமை | 11 |
| 4. | வெல்லும் சொல் | 17 |
| 5. | எது அறம்? | 24 |
| 6. | பழிக்கு அச்சம்! | 29 |
| 7. | கொடைக் கலை | 35 |
| 8. | பலாவும் எட்டியும் | 41 |
| 9. | இதுதான் நட்பு! | 47 |
| 10. | நுணங்கிய கேள்வி | 53 |
| 11. | நன்றி நினைத்தல் | 61 |
| 12. | அறிவின் பயன் | 68 |
| 13. | வாழ்க்கைக்கு ஒரு பற்று | 74 |
| 14. | செயற்கு அருஞ்செயல் | 80 |
| 15. | உயர்வு உள்ளல்! | 86 |
| 16. | உயிரையும் தருவர் | 92 |
| 17. | மாறுபடும் நீதி | 98 |
| 18. | சோர்வு இலாள் பெண் | 104 |
| 19. | உலகத்தார் உள்ளத்தில்! | 110 |
| 20. | கண்ணுக்கு அணிகலம் | 116 |
| 21. | பயன் மரம் | 122 |
| 22. | சென்ற இடம் எல்லாம் சிறப்பு | 128 |
| 23. | வழியிலும் தூய்மை! | 134 |
| 24. | சொல்லேர் உழவர் | 140 |
| 25. | வித்தில்லாத விளைச்சல்! | 147 |
| 26. | எல்லா உயிரும் தொழும் | 153 |
| 27. | நுனிக் கொம்பு | 159 |

# குறள் கண்ட வாழ்வு

## 1. எது சால்பு?

நல்ல குணங்கள் அனைத்தையும் சேர்த்து ஒரு பெயரால் கூற முடியுமா? நம்மவர்கள் முற்காலத்தில் 'சால்பு' என்ற சொல்லை இப்பொருளில் வழங்கினர். இந்நாடு முழுவதும்— ஏன்— உலகத்தார் அனைவருமே ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையிலும் அறத்தைச் சுருக்கிக் கூறிய பெருமை, திருவள்ளுவருக்கே உரியது. இதை நன்குணர்ந்த பாரதியார் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று கூறிப்போனார்.

உலகின் பல பாகங்களில் அவ்வப்பொழுது அற நூல்கள் தோன்றியதுண்டு. திருக்குறளும் அப்படி ஒரு நூல்தானே? இதற்கென்று தனி மதிப்பு ஏன்? ஏனைய அற நூல்கள், தம் சட்டங்களை மக்கள் எவ்வளவு தூரம் பின்பற்ற முடியும் என்பதுபற்றி அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், திருக்குறள் மக்களின் பின்பற்றும் சக்தியை அடிப்படையில் கொண்டே எழுதப் பெற்றுள்ளது. பெரும்பாலும் அதில் கூறப்பெற்றுள்ள

அறச்சட்டங்கள், பலரால் பல காலத்தில் கடைப்பிடிக்கப் பெற்றவைகளே. சாதாரண மக்களும் கடைப்பிடிக்கக் கூடிய பல சட்டங்களையும் அந்நூல் பேசுகின்றது. ஒருசிலரால் மட்டுமே கடைப்பிடிக்கக்கூடிய சில கடின மான சட்டங்களும் அதில் இடம் பெற்றுள்ளன. தமிழ் இலக்கியங்களைப் புரட்டினால், எத்தனை பெருமக்க ளுடைய வாழ்வு எத்தனை திருக்குறள்கட்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன என்பது புலப்படும்.

திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள பகுதி 'சேதி நாடு' என்று வழங்கப் பெற்றது ஒரு காலத்தில் அப்பகுதி யைத் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு, 'மெய்ப்பொருள்' என்ற மன்னர் ஆட்சி செய்து வந்தார்.

''குறிக்கோள் இல்லாது கெட்டேன்!'' என்று திருநாவுக்கரசரே பாடுவாரானால், மனித வாழ்வில் குறிக்கோள் எத்துணைச் சிறந்தது என்று எடுத்துக் கூறத் தேவை இல்லை. பலருக்குத் தலைவனாய் அமைந்துள்ள அரசனுக்குக் குறிக்கோள் என்பது எவ்வளவு இன்றி யமையாதது! தம் உயிருக்குத் தீமை நேர்வதாயினும், அது பற்றிக் கவலையுறாமல், குறிக்கோளைக் கொண்டு செலுத்துபவரையே உலகம் 'மகாத்மா' என்று போற்று கிறது.

சேதி நாட்டை ஆட்சி செய்து வந்த மெய்ப்பொருளும், ஒரு குறிக்கோளுடன் வாழ்ந்தார். சிவபெருமானுடைய அடியார்கள் தாங்கும் வேடத்தை யார் தாங்கி வந்தாலும், அவரைப் போற்றி உபசரித்து அவர் விரும்பியவற்றைக் கொடுக்க வேண்டும் என்பதே மெய்ப்பொருள் மேற் கொண்ட குறிக்கோளாகும். இந்தக் குறிக்கோள் சரியானதா, தவறானதா என்பது பற்றி ஆராய நமக்கு உரிமை இல்லை. எதுவரை இதனை அவர் கொண்டு செலுத்துகிறார் என்பதை மட்டுமே நாம் காண்டல் வேண்டும்.

சிற்றரசர் ஆயினும், பண்பாடுடையவராயினும், மெய்ப்பொருளுக்கும் பகைவர் இல்லாமல் போகவில்லை. பக்கத்து நாட்டை ஆட்சி செய்த முத்தநாதன் என்பவன், அவருக்கு முழுப் பகைவனானான்; பல முறை மெய்ப் பொருளுடன் போர் தொடுத்துத் தோல்வியே அடைந் தான். பொருள் நட்டத்தோடு மானத்தையும் இழந்த முத்தநாதன், நல்லதொரு யோசனை செய்தான்; 'நேரடி யாகப் போர் செய்து மெய்ப்பொருளை வெல்ல முடியாது எனில், வேறு வழியில் அவரை ஒழித்துவிட முடியாதா?' என ஆராய்ந்தான். திருநீற்றுக்கும், அக்கமணிக்கும் (உருத்திராட்சம்) பெருமதிப்புத் தருபவர் மெய்ப்பொருள் என்பதை அறிந்த முத்தநாதன், உடனே அந்த வேடந் தாங்கிப் புறப்பட்டான்;

மெய் எலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்த்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்

உடம்பெல்லாம் திருநீற்றைப் பூசி, தலைமயிரைச் சடா முடியாகத் தூக்கிக் கட்டி, கையினில் கத்தியை மறைத்து வைத்துள்ள சுவடிக்கட்டு ஒன்றை ஏந்திக்கொண்டு புறப்பட்டான். அவன் புறப்பட்டது எவ்வாறு இருந்தது எனில், எரியும் திரி கறுப்பாய் இருந்தாலும் புறத்தே ஒளி காட்டுகின்ற விளக்கைப்போல, வெளியே திருநீறு முதலிய உயர்ந்த வேடத்தைத் தாங்கி, மனத்துள் மட்டும் தீய எண்ணத்தைக் கொண்டு புறப்பட்டான் என்று அழகாகக் கூறுகிறார் சேக்கிழார், தம்முடைய பெரிய புராணத்தில்.

அடியார் வேடந்தாங்கிப் பல வாயில்களையுங் கடந்து உள்ளே வந்துவிட்ட முத்தநாதனை, அரசனுடைய அந்தப்புரக் காவலாளனான தத்தன் என்பவன் கண்டு, அவனைச் சந்தேகித்து விட்டான். தன் ஐயத்தை

அடிப்படையாகக்கொண்டு முத்தநாதனை உள்ளே விட மறுத்தால், அரசர் கோபிப்பார் என்பதை அறிவான் தத்தன். உண்மை ஊழியனாகிய அவன் மிகவும் சாமர்த்தியமாக, 'இப்பொழுது சந்தர்ப்பம் சரியாய் இல்லை, அரசர் உறங்குகின்றார்,' என்று கூறினான். இத்தகைய அறிவாளியாகிய ஒருவனைத் தான் மெய்க் காவலனாகக் கொள்ளவேண்டும் என்பதையும் வள்ளுவர், 'குறிப்பில் குறிப்பு உணர்வாரை உறுப்பினுள் யாது கொடுத்துங் கொளல்,' என்று அழகாகக் குறிப்பிடுகிறார்.

தத்தன் தடுத்ததைக் கவலைப்படாமல் உள் நுழைந்த முத்தநாதன், அரசர் கட்டிலில் படுத்து உறங்குவதையும், அவருடைய மனைவியார் அருகே அமர்ந்திருப்பதையுங் கண்டான். அரசர் எழுந்தார்; வரவேற்றார் இந்தப் போலி அடியாரை. அவருக்கு உபதேசஞ் செய்யப் போவதாகக் கூறினான் முத்தநாதன். அவனை உயர்ந்த பீடத்தில் அமரச் செய்து, தாம் கீழே நின்று தலை தாழ்த்தி வணங்கி உபதேசத்தைக் கேட்கச் சித்தமானார் மெய்ப் பொருள். முத்தநாதன், சுவடிக்குள் இருந்த கத்தியை எடுத்து அவரைக் குத்திவிட்டான்.

இத்தகைய ஒரு சூழ்ச்சியை எதிர்பார்த்துக்கொண்டு அச்சத்துடன் வாயிலில் நின்றவனாகிய தத்தன், கண் இமைக்கு முன் வாளை உருவிக்கொண்டு முத்தநாதனைக் கொன்றுவிட உள்ளே ஓடி வந்துவிட்டான். குத்துப் பட்ட காயத்துடன் கீழே விழப்போகின்ற மெய்ப்பொருள், தத்தன் வருவதையும் அவன் மனக் கருத்தையும் கண்டு விட்டார்; இரத்த நஷ்டத்தினால் பேச முடியவில்லை யாயினும், தம் பலத்தையெல்லாம் ஒருங்கு திரட்டி இரண்டே வார்த்தைகள் பேசினார். என்ன வார்த்தைகள்? "தத்தா, நமர்!" என்று கூறினாராம். 'தத்தா, அவரை ஒன்றுஞ் செய்யாதே! அவர் நம்முடைய உறவினர்!' என்பதே இச் சொற்களின் பொருள்.

இச் சொற்களைக் கூறியதோடு அமைந்து விடவில்லை அவர். தன்னை மறந்த நிலையில் வேகமாக வரும் தத்தன், எங்கே தம்முடைய சொற்களைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் பழி வாங்கி விடுவானோ என்று அஞ்சிய மெய்ப்பொருள், நீண்ட தம்முடைய கையையும் நீட்டி, "அவரை ஒன்றுஞ் செய்யாதே!" என்று தடுத்தாராம்.

இத்தகைய ஒரு நிகழ்ச்சியை முழுவதும் மனத்தில் வாங்கிக்கொண்டு பார்த்தால்தான், ஒரு குறளுக்கு உண்மையான பொருளை அறிய முடிகின்றது.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?"

'தீமை செய்தவர்க்கும் நன்மை செய்யாவிடின், சால்பு என்ற ஒன்றைப் பெற்றதன் பயன் யாது?'

மெய்ப்பொருள், குறளின் மெய்ப்பொருள் கண்டு வாழ்ந்தார். தமிழ் மக்கள் இதயத்தில் அழியா இடம் பெற்றார்.

# 2. 'கவரி மா(ன்) அன்னார்'

பிறப்பது பற்றியும் இறப்பது பற்றியும் கவலைப் படாமல் வாழ்கின்றவர் பலருண்டு. 'ஏன் பிறந்தோம்?' என்ற கேள்வியைக் கேளாத வரை, தொல்லை ஒன்றும் இல்லை. 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்,' என்று இருப்பவர்களை எவ்விதமான துன்பமும் இலேசில் வந்து அடைவதில்லை. பையன் பள்ளிக்கூடம் போகாமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தால், மார்ச்சு மாதத்தில் எவ்விதக் கவலையும் படவேண்டுவதில்லை. ஆனால், நல்ல முறையில் பள்ளிக்கூடம் சென்று படிக்கவும் தொடங்கி விட்டால் பரீட்சை முதலிய கவலைகள் வந்து விடுகின்றன.

பிறந்துவிட்ட நாம், ஏதோ இறப்பு வருகின்றவரை இருந்துவிட்டு, போகின்ற நாளில் போய்விடலாம் என்று வாழ்ந்தால் கவலை இல்லைதான். வினாத்தாள் கடினமாக வரும் என்பதற்காக யாரேனும் பரீட்சைக்கே போகாமல் இருந்துவிட நினைப்பது உண்டா? கவலை இல்லாமல் வாழலாம் என்பதற்காக, வாழ்வில் மேற்கொள்ள வேண்டியவற்றை விட்டுவிட்டு வாழ முடியுமா?

மனிதனாய்ப் பிறந்த ஒருவனுக்கும், விலங்காய்ப் பிறந்த ஒன்றுக்கும் வேறுபாடு யாது? மனிதனுக்கு மனம் என்ற ஒன்று அதிகமாகத் தரப்பட்டுள்ளதே! அதை நன்கு பயன்படுத்தி வாழ வேண்டாவா? மனத்தைப்

பயன்படுத்தி வாழ்வது என்பது என்ன? அறிவு, சிந்தனை, கொள்கை, குறிக்கோள் (லட்சியம்) முதலியவற்றோடு வாழ்பவனே மனிதனாய் வாழ்பவன் என்று பெரியோர்களால் மதிக்கப்படுவான். அனைத்தையும் சேர்த்துக் கூற வேண்டுமாயின், மானத்துடன் வாழும் வாழ்க்கையே மனித வாழ்க்கையாம் என்று கூறலாம்.

மானம் என்ற சொல்லின் பொருள் யாது? இன்று நம்மில் பலரும் இச் சொல்லை எளிதாகப் பயன்படுத்துகின்றோம். ஒருவனை மற்றொருவன் நாய் என்று கூறிவிட்டால், கூறப்பட்டவன் தன்னுடைய மானம் போய்விட்டதாகக் கருதுகிறான்; அதனைப் போக்கிக்கொள்ள ஒரு போராட்டமே நடத்தத் தயாராகிவிடுகிறான். நாய் என்று மற்றவனைப் பேசியவனும், மற்றவனுடைய மானத்தைப் போக்கிவிட்டதாகக் கருதிக்கொண்டு மகிழ்ச்சி அடைகின்றான்.

ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், ஒருவனை 'நாய்' என்று கூறுதல் இழிவுபடுத்துவதாகுமா? நாயின் பெருமையை நாலடியார் விரிவாகப் பேசுகின்றது. நாயினுடைய நன்றி அறியும் சிறப்பைக் கூற வந்த நாலடியார், 'நாய் அனையார் கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்' என்று கூறிவிட்டு, அதற்குக் காரணமும் கூறுகின்றது. நாய் போன்றவர் நட்பு வேண்டுமாம். ஏன் தெரியுமா? 'எறித்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்' என்கிறது நாலடியார். அதாவது, தன்னை வளர்த்தவன் கோபத்தால் வேலாயுதத்தைத் தன்மேலே எறிந்தாலும் அதற்காகக் கோபிக்காமல் வாலைக் குழைத்துக்கொண்டு தன் அன்பை வெளியிடுமாம். அப்படி இருக்க, 'நாய்' என்று கூறினால், மானம் போய்விட்டதாக நினைப்பது எவ்வளவு தவறு?

உண்மையில் 'மானம்' என்பது யாது? குறளும் இச் சொல்லை நன்கு பயன்படுத்துகின்றது. இச் சொல்லுக்கு

அழகான பொருளைக் கண்டு எழுதுகிறார் திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர். 'மனிதன் தன்னுடைய நிலையினின்று தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு நேர்ந்துழி உயிர் வாழாமையும்' மானமாம். எனவே, பிறன் ஒருவன், நாய் என்று ஏசியபொழுது உண்மையில் மானம் போய்விடவில்லை. ஆனால், அவ்வாறு சொன்ன மனிதனுடன், சொல்லப் பெற்றவன் சண்டைக்குப் போகும் பொழுதுதான், தன்னுடைய மானத்தை இழக்கின்றான். பிறன் ஒருவனுடன் சண்டையிடும் பொழுது மனிதன் மனிதத் தன்மையிலிருந்து தாழ்ந்துவிடுகின்றான். அதனாலேதான் மானத்தை இழப்பதாகக் கூறுகின்றோம்.

குறள் கூறுகின்ற முறையில் மானத்தை இழக்காமல் வாழ்ந்தவர்கள் நிரம்ப உண்டு— இந் நாட்டிலும் பிற நாட்டிலுங் கூட.

சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பவன் சேர மன்னன். தமிழ் வளர்ப்பதிலும் வீரத்துடன் வாழ்ந்த நிலையிலும் தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவரும் சம மதிப்பு உடையவர். இன்று 'கேரளம்' என்ற தனிப் பெயர் தாங்கி நிற்கும் அந் நிலப்பகுதி, ஒரு காலத்துத் தமிழ்நாடாய் இருந்தது. அப்பொழுது 'மலையாளம்' என்றதொரு தனி மொழி இல்லை. 'கேரளம்' என்ற மலையாளச் சொல்கூடச் 'சேரன்' 'சேரலன்' என்ற தமிழ்ச் சொற்களின் சிதைவேயாகும்.

இச் சேரமான் இரும்பொறை சிறந்த தமிழ்ப் புலவன், கவிஞனுங் கூட. சேரர் பரம்பரையில் கவிஞராய் இருந்த அரசர் பலர். சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள், இவ்வரசக் கவிஞருள் முடி மணி போன்றவர். சேரமான் இரும்பொறை ஒரு முறை சோழன் செங்கணான் என்பவனோடு அறப்போர் தொடுத்தான்.

அரசனாய் இருக்கும் ஒருவன், பல காரணங்களால் போர் புரிதல் அறம் எனக் கருதப்பெற்றது அந்த நாளில்.

இவர் இருவர் இடையே மூண்ட போரில் சேரமான் கணைக்கால் இரும்பொறை தோற்றுவிட்டான்; போரிட்டு உயிரை விடாமல், சோழனால் சிறை பிடிக்கப்பட்டான். தோல்விக்காக வருந்தவில்லை சேரன்; ஆனால், பகைவனுடைய சிறையில் இருப்பதைப் பெருத்த அவமானமாகக் கருதினான். இந்த நிலையில் தண்ணீர் வேண்டி இருந்தது அவனுக்கு. காவலாளனைப் பார்த்துத் தாகம் தீரத் தண்ணீர் கேட்டான். அவன் உடனே தண்ணீரைக் கொணர்ந்து தாராமல், இவனைக் கொஞ்சம் எள்ளி நகையாடிவிட்டுக் கடைசியில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் தந்தனன். ஏற்கெனவே சிறைப்பட்டுக் கிடப்பதை மானம் அழிந்த செயலாகக் கருதி வருந்தும் சேரனுக்கு, காவலாளி செய்த செயல் கட்டோடு பிடிக்கவில்லை. எவ்வளவுதான் தண்ணீர் விடாய் இருப்பினும், மானத்தை இழந்து பகைவன் ஏவலனிடம் கேட்டு வாங்கிய தண்ணீரைக் குடிக்க மனம் வரவில்லை சேரனுக்கு. அவனுடைய கவி உள்ளம் வேலை செய்யத் தொடங்கியது.

''குழந்தையாகப் பிறந்து இறக்காமல், இறந்தே பிறக்கும் குழந்தையாயினும், குறைப் பிரசவமாகப் பிறப்பினும், போரில் இறவாமல் இவ்வாறு இறத்தல் அவமானம் என்று கருதி, அந்த இறந்த குழந்தையையும், குறையாகப் பிறந்த தசைப் பிண்டத்தையும் வாளால் வெட்டிப் புதைப்பார்கள்.

''சங்கிலியால் கட்டுண்ட நாயைப் போலப் பகைவன் சிறையில் அகப்பட்டு, அப் பகைவனின் காவலாளனைப் பிச்சை கேட்டுத் தண்ணீரைப் பெற்று மானத்தை இழந்து, குடித்து உயிரை வைத்திருக்க விரும்பும் என் போன்றவர்களை இவ்வுலகத்தார் பெறாமல் இருப்பார்களாக!'' என்ற பொருளில் ஒரு கவிதையைப் பாடினான்:

''குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளில் தப்பார்;

தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீய
கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம்இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ இவ் வுலகத்தானே !''

தண்ணீரைக் குடிக்காமல் உயிரையே விட்டுவிட்டான் சேரமான் இரும்பொறை என்ற தமிழன்.

காட்டில் கவரிமான் என்று ஒருவகை மான் உண்டாம். உடல் நிறையச் சடை நாய் போன்று நீண்டு வளர்ந்த மயிர் இருக்குமாம் அந்த மானுக்கு. இவ்வளவு மயிர் உடல் முழுவதும் இருந்தும், ஒரு மயிர் எங்காவது சிக்கி உதிர்ந்து போனால், அந்த மான் உயிர் வாழாமல் இறந்து விடுமாம். அந்த மானைத்தான் உதாரணம் காட்டு கின்றது குறள், மானத்தோடு வாழும் பெரியோர்க்கு.

'' மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்''

என்னும் குறள் கண்ட வாழ்வை வாழ்ந்து காட்டியவன் சேரமான் இரும்பொறை.

# 3. வேண்டாமை!

இந்தப் பரந்த உலகில் யாரைக் கேட்டாலும் வேண்டும் என்று சொல்கிறவரே பலராவர். 'எது வேண்டும்?' என்று மீண்டும் கேட்டால் ஒரு கண நேரம் விழித்துவிட்டு, 'எதுவானாலும் சரி, வேண்டும்,' என்று தான் கூறுவர். ஆறு மாதக் குழந்தையைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். அழகிய நிறமுடைய ஒரு பொருளை அக் குழந்தையிடம் காட்டிப் பாருங்கள். அந்தப் பொருளால் தனக்கு ஏதேனும் பயன் உண்டா, இல்லையா என்பது பற்றிக் குழந்தை கவலைப்படுவதில்லை. பயன் உடையதானாலும் இல்லாததானாலும் அதைப் பெற்று வைத்துக் கொள்ளவே குழந்தை ஆசைப்படுகிறது; கையை நீட்டிப் பெறப் பார்க்கிறது; கிடைக்கவில்லையானால், அழுது அடம் பிடித்து எப்படியாவது பெற முயல்கின்றது.

இன்று குழந்தைகளாக இருப்பவர் நாளைப் பெரியவர்களாகின்றனர். பெரியவர்களாகும்பொழுது, குழந்தைப் பருவத்தில் காணப்பெற்ற பல இயல்புகள் மறைந்து விடுகின்றன; ஆனால் சில இயல்புகள் மறைவதில்லை. அங்ஙனம் மறையாமல் கடைசிவரை ஒட்டிக் கொண்டிருக்கும் பண்புகளில் ஒன்றுதான் 'வேண்டும்' என்னும் பண்பு. எதைக் கண்டாலும் வேண்டும் என்று நினைக்கும் இயல்பு. எக்காலத்திலும், எல்லா நாட்டிலும்,

எல்லாப் பருவ மக்களிடமும் இருந்த இருக்கின்ற, இருக்கப் போகும் பண்புதான்.

ஆனால், 'வேண்டும்' என்ற இந்தப் பண்பினால் மனிதன் என்றாவது நன்மை அடைந்தது உண்டா? இல்லை! இல்லை!! என்றுமே இப் பண்பு மனிதனுக்குத் தீமையைத் தவிர, நன்மை புரிந்ததே இல்லை. 'தீயன வற்றைத்தானே விரும்பக் கூடாது? நல்லனவற்றை வேண்டும் என்று விரும்பினால் என்ன?' என்று சிலர் கேட்கலாம். அவர்களை நோக்கித் திருமூலர் இதோ விடை கூறுகிறார்:

"ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்!
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்!"

ஆண்டவனை அடைய வேண்டும் என்றுகூட ஆசைப்பட வேண்டா என்பது திருமூலர் கட்டளை.

வேண்டும் என்ற ஆசை அவ்வளவு தூரம் மனித னுக்குத் தீமை விளைக்கும் என்பதை நம் முன்னோர் கண்டனர். 'மனிதன் பொருள்களைக் கருதும்போது அவற்றில் பற்றுதலடைகின்றான். பற்றுதல் பின்னர் விருப்பத்தை விளைவிக்கின்றது. விருப்பம் கை கூடாத பொழுது சினம் பிறக்கின்றது. சினத்தால் மயக்கமும், மயக்கத்தால் நினைவு தவறுதலும், நினைவு தவறுதலால் புத்தி அழிவும் ஏற்படுகின்றன. புத்தி அழிவதால் மனிதனே அழிகின்றான்.' (பகவத் கீதை அத். 2, பாடல் 62, 63) இங்ஙனம் கீதை விரிவாகப் பேசும் ஒன்றைக் குறள் இன்னும் சுருக்கிப் பேசுகின்றது. 'வேண்டும்' என்னும் பண்பின் அடிப்படையில் நிற்கும் ஆசை அல்லது அவா என்பதைக் குறள் அழகாக எடுத்துக் கூறுகிறது. 'ஆசை' என்பது எல்லா உயிர்கட்கும் எக் காலத்தும் தவறாமல் பிறப்பு என்னும் துன்பத்தைத் தருவதாகும்,' என்னும் பொருளில்,

"அவா என்பது எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பு ஈனும் வித்து"

என்று கூறுகின்றது.

வேண்டும் என்பது இவ்வளவு துன்பந்தரும் ஒன்று என்றால், இதன் எதிராக உள்ள 'வேண்டாமை' உறுதியாக எதிர்ப் பலனைத் தர வேண்டுமே! ஆம்! அவ்வாறு தான் குறள் கூறுகின்றது.

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டுஇல்லை;
யாண்டும் அஃது ஒப்பதுஇல்"

என்பது குறள்.

'வேண்டாமை என்பதைப் போன்ற மிகப் பெரிய தூய்மையானதும் உயர்ந்ததுமான செல்வம் இவ்வுலகில் இல்லை. ஏன்? வேறு எந்த உலகிலும் இல்லை,' என்பதே இக் குறளின் பொருள்.

இப்பொழுது வேறு ஒரு வகையில் பார்ப்போம். எதுவும் 'வேண்டா' என்று ஒருவன் கூறத் தொடங்கினால் அவனுக்கு ஏதேனும் கவலை உண்டா? வேண்டும் என்றால் வேண்டியது கிடைக்காதபொழுது கவலை, அறிவை இழத்தல் முதலிய தொல்லைகள் ஏற்படும். வேண்டா என்று தொடக்கத்திலேயே கூறிவிட்டால், அவனுக்கு எவ்வகையான துயரமும் இல்லை.

வேண்டாமையை அணிகலனாகக் கொண்டு ஒருவன் வாழத் தொடங்கிவிட்டால் கடவுளும் அவனை அசைக்க முடியாது. 'கம்ப மத யானை கழுத்து அகத்தின் மேல் இருந்து இன்பு அமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்; ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ வானாளும் மண்ணரசும் யான் வேண்டேன்; இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்,' என்று ஆழ்வார்கள் பாடுகின்றார்களே, அதன் பயன் என்ன

தெரியுமா? ஆண்டவன் அவர்கள் இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு ஓடி வருகிறான்.

ஏயர்கோன் கலிக்காமர் என்ற ஒரு பெரியார் சுந்தர மூர்த்தி சுவாமிகள் காலத்தில் வாழ்ந்தார். சிவபெருமானிடம் மிகவும் அன்பு பூண்ட தொண்டர் அவர். பரவையின் சினத்தைத் தணிக்கவேண்டித் தியாகேசனைச் சுந்தரர் தூதாக அனுப்பினார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டார் ஏயர்கோன். பெருங்கோபம் மூண்டுவிட்டது அவருக்கு. 'நாம் இறைவனுடைய அடிமைகள். எசமானை, அடிமை, வேலையில் ஏவலாமா? எசமான் அன்புடையவனாக இருந்து, அடிமைக்கு எதுவும் செய்யச் சித்தமாக இருக்கலாம். அதற்காக அடிமையாய் உள்ளவன் நெஞ்சு உரத்துடன் எசமானை வேலையில் ஏவலாமா? இவ்வாறு ஏவின சுந்தரமூர்த்தியை, யான் நேரே கண்டால் அவனை என்ன செய்யப் போகிறேனோ!' என்று அவர் மனம் பொருமினார்.

இத்தகைய உறுதியுடைய ஒருவரை இறைவன் என்ன செய்ய முடியும்? தீராத வயிற்று வலியைத் தந்தான் ஏயர்கோனுக்கு. மருத்துவர் தீர்க்கும் நோயல்லவே அது! பொறுக்க முடியாத அத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு ஏயர்கோன் படுத்திருந்தார். இறைவன் அவருடைய கனவில் தோன்றினான். "அன்பனே, உனக்கு வந்திருக்கும் வயிற்று நோயைப் போக்க வேண்டுமானால், அதற்கு ஒரே வழிதான் உண்டு. சுந்தரமூர்த்தி வந்து இதனைப் போக்கினால் ஒழிய மற்றவர் யாரும் இதனைப் போக்க முடியாது!" என்று கூறிவிட்டான்.

ஏயர்கோனைப் பொறுத்தமட்டில் சுந்தரமூர்த்தியைத் தம் பகைவராகவே கருதிவிட்டார். அது சரியா தவறா என்பது கேள்வி அன்று. அங்ஙனம் கருதிய அவர், சமயம் நேர்ந்த பொழுது என்ன செய்யப் போகிறார் என்பது தான் வினா! ஆண்டவனே வந்து ஒன்றைக் கூறும்

பொழுது அதைக் கேளாமல் இருப்பதா என்று நினைத்து அவர் மனக் கருத்தை மாற்றிக் கொண்டிருந்தாலும் தவறு இல்லை. அவ்வாறு செய்திருந்தால் அவர் குறள் கண்ட வாழ்வை வாழ்ந்த பெரியவர் ஆகமாட்டார்.

'உழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
அழி எனப்படு வார்'

என்பது குறள்.

இறைவனுக்கு ஏயர்கோன் கூறிய விடை யாது? "ஐயரே, யானும் என் மூதாதையரும் நீரே தலைவர் என்று கருதி வாழ்ந்துவிட்டோம். உம் அடியவனாகிய எனக்கு வந்த இந்த வயிற்று வலியை, நேற்று உம்மாலே ஆட்கொள்ளப்பட்டவனாகிய சுந்தரமூர்த்தியா தீர்க்கப் போகிறான்? அப்படி அவன் வந்துதான் என்னுடைய நோய் தீருமென்றால், அந்நோய் தீர்வதைக் காட்டிலும் தீராது என்னை எவ்வளவு வேண்டுமாயினும் வருத்தட்டும்!" என்று கூறிவிடுகின்றார்.

நோய் தீரவேண்டும் என்று விரும்பி இருந்தால், இறைவன் கூறுகிறபடி செய்யவேண்டும். 'வேண்டா, நோய்கூடத் தீரவேண்டா,' என்று கருதும் ஒருவரை யார்தான் என்ன செய்ய முடியும்? இறைவனும் திரும்பித் தான் போக வேண்டி இருக்கின்றது.

அனைத்தையும் இழந்து, இறுதியில் மனைவியையும் வெட்டப் போகின்றான் அரிச்சந்திரன். அந்த நிலையில் ஓடிவந்த விசுவாமித்திரன், "இந்தக் கொடுமை ஏன் செய்கிறாய்? 'இல்லை' என்று ஒரு வார்த்தை கூறி விட்டால், நீ இழந்த அனைத்தையும் தந்து விடுகின்றேன்," என்கின்றான். இழந்த பொருளும், ஏன், மகனுங்கூட வேண்டும் என்று நினைத்தால்தானே அரிச்சந்திரன் முனிவன் கூறியபடி செய்யத் துணிவான்? 'வேண்டா' என்று கூறும் அரிச்சந்திரன் யாது கூறினான்?

'பதி இழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதி இழந்தனம் இனி எமக்கு உளது என நினைக்கும்
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றான்;
மதி இழந்து தன் வாய் இழந்து அருந்தவன் மறைந்தான்'

"நாட்டை இழந்தேன்; குழந்தையை இழந்தேன்; செல்வத்தை இழந்தேன். இத்துணையும் ஏன் இழந்தேன்? இனி வீடுபேற்றை (மோட்சத்தை) அடையலாம் என்று நினைத்தேன். அந்த மோட்சத்தையே (கதி) இழக்கினும் சரி! என் மொழி தவற மாட்டேன்!" என்றான். அறிவை யும், பின் சொல்லும் வகையையும் இழந்து முனிவன் மீண்டான்.

'வேண்டாமை' அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
யாண்டும் அஃதொப்பது இல்

என்பது இவற்றால் விளங்குகின்றதன்றோ?

# 4. 'வெல்லும் சொல்'

'சார்! அதோ வருகிறான் கண்ணன்! நான் விரைவில் ஓடிவிடுகிறேன்!' என்கின்றார் ஒருவர். ஒன்றும் புரியாத மற்றவர், 'ஏன் ஐயா, அவனிடம் அவ்வளவு அச்சமா உமக்கு?' என்கிறார். முன்னவர், 'அச்சமாவது ஒன்றாவது! அவன் பேசத் தொடங்கினால் நிறுத்த முடியாதே! சளசளவென்று பேசி உயிரை வாங்கி விடுவானே!' என்கின்றார். இவ்வகைப் பேச்சு அன்றாடம் நாம் கேட்பதுதான்.

ஒரு காலத்தில் மனிதன் பேசத் தெரியாமல் 'சைகை' மூலமே தன் கருத்தைப் பிறருக்கு அறிவித்து வாழ்ந்தான். அவன் உலகில் தோன்றியபின் நெடுங்காலம் கழித்தே பேசத் தொடங்கினான்; பேசுவதன் மூலமே விலங்கிலிருந்து தான் வேறுபட்டவன் என்று பெருமைப்பட்டுக் கொண்டான். இறைவன் மனிதனுக்குக் கொடுத்துள்ள ஒப்பற்ற சாதனங்களுள் மிகச் சிறந்தது பேச்சுக்கலை. பேச்சு இல்லாமல் இருந்தால் உலகம் இவ்வளவு விரைவாக முன்னேறவும் முடியாது. என்றாலும் என்ன! பல சமயங்களில் சிலர் பேசுவதைக் கேட்க நேரிடும்பொழுது, 'பேசும் சக்தியை மனிதனுக்குக் கடவுள் மறந்து போய்த் தந்து விட்டாரோ!' என்றுகூட ஐயுற வேண்டியுளது.

பேச்சுச் சில சமயங்களில் வெறுப்பைத் தந்தாலும், உண்மையை ஆராயுமிடத்து, 'சொல்' மிக மிக உயர்ந்த

ஒன்று. மனிதனை மகாத்துமாவாகச் செய்வதும் பேச்சுத் தான்; துராத்துமாவாக மாற்றுவதும் பேச்சுத்தான். ஒருவன் எவ்வளவு கற்றிருந்தாலும் பயன் இல்லை, தன் கல்வியைச் சொல் மூலம் வெளியிட முடியாதிருப்பின். ஒருவன் கருத்தைப் பிறர் அறியச் செய்வது சொல்லே யாதலின், அதன் பெருமை அளவிடற்கரியதாகும். நல்ல சொல்லைச் சந்தர்ப்பம் அறிந்து சொல்ல வல்லவர்களைச் 'சொற் செல்வம் உடையவர்' என நம்மவர் கூறினர்.

அனுமனைச் 'சொல்லின் செல்வன்' என இராமன் கூறுகிறான். அனுமனுக்கு இராமன் இப்பட்டத்தைச் சூட்டும்படி செய்கின்றவன் கம்பநாடன். கம்பன் எங்கிருந்து கற்றான் இதனை? ஏன், தமிழ்ப் பெருங் கவிஞர் அனைவருமே தேடிச் செல்லும் கருவூலமாகிய திருக்குறளிலிருந்துதான். திருக்குறளை அடியொற்றியும், சில குறள்களுக்கு விளக்கமாகவும் சிலருடைய வாழ்வு அமைந்தது, அந்த அழகிய வாழ்வைப் படம் பிடித்துக் காட்டின இலக்கியங்கள். இவற்றையெல்லாம் நன்கு கற்றுத்தெளிந்த கம்பநாடன் தன் பெருங்காப்பியத்தில் இவற்றை நன்கு பயன்படுத்தினான்.

குறள் கண்ட வாழ்வை வாழ்ந்தவர் நம் முன்னோருள் பலர். சிலர் குறள் எதனை ஆகாது என்று கூறிற்றோ, அவ்வாறு வாழ்ந்தனர். கூடாது என்று கூறியபடி வாழ்ந்தவர்களும் நமக்கு எடுத்துக்காட்டாக அமை கின்றனர். எவ்வாறு? இவ்வாறு வாழ்ந்தால் இந்த முடிவு தான் கிடைக்கும் என்பதை நமக்கு அறிவுறுத்துகின்றன அல்லவா இவர்களுடைய வாழ்வுகளும் தாழ்வுகளும்?

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கண்ணகி காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னன். பொற்கைப் பாண்டியன் மரபில் வந்த அப்பெருமகன் சிறந்த மன்னன்; பெருவீரன். செங்கோல் முறை தவறாதவன். சோமசுந்தரப் பெருமானே மருமகனாக வரக்கூடிய தவஞ் செய்த பெரு மரபில் தோன்றியவன்தான்

அவன். கல்வியில் குறைந்தவனா? அன்றிக் கேள்விச் செல்வத்தில்தான் குறைந்தவனா? இரண்டிலும் மேம்பட்டவனே அவன். என்றாலும், என்ன! ஒரு குறளை மறந்ததன் விளைவு என்ன ஆயிற்று?

அரசர்கட்கே உரிய முறையில் நாட்டிய மகளிரின் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் களித்துக் கொண்டிருந்தான் நெடுஞ்செழியன். உடன் அவனுடைய பட்டத்தரசியும் இருந்து நாட்டியத்தைக் கண்டு களித்தாள். கலையை அனுபவிப்பவர்களிலும் இரு வகையினர் உண்டல்லவா? கலையை மட்டும் அனுபவிக்கும் பண்பு உடையவர் சிலர்; கலைஞர்களைக் கண்டு அனுபவிக்கும் பண்புடையவர் பலர். பாண்டியன் இரண்டாம் வகையினரைச் சேரத் தலைப்பட்டான். ஓர் ஆடவன் மனம் வேறுபடுவதை அவன் அறிவதன் முன்னரே ஒரு பெண் அறிந்து கொள்வாள். அரசன் உறுதி ஆட்டங் கண்டு விட்டதை அரசி உடனே கண்டுகொண்டாள்; திடீரென்று தனக்குத் தலை நோவு வந்து விட்டதாகக் கூறிக் கொண்டே அந்தப்புரம் சென்றுவிட்டாள்.

அரசி தலை நோவு என்று கூறிக் கொண்டு சென்றாலும், அவள் கோபத்துடன் போய் விட்டாள் என்பதை அரசன் அறிந்து, அவள் கோபத்தை எவ்வாறாயினும் தணிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் அந்தப்புரத்திற்குப் புறப்பட்டான். அவன் செல்லும் வழியில் பொற்கொல்லன் எதிர்ப்பட்டுக் கீழே வீழ்ந்து வணங்கினான்; 'முன்னர் அரண்மனையில் களவு போன தேவியின் காற்சிலம்பு இப்பொழுது அகப்பட்டுவிட்டது! சிலம்பைத் திருடிய கள்வனை என் வீட்டில் வைத்திருக்கிறேன்!' என்றான்.. உடனே பாண்டியன், 'இந்தச் சிலம்பு இப்பொழுது கிடைத்தால் அரசியின் சினத்தைத் தணிக்க உதவுமே!' என்று நினைத்துவிட்டான்.

அரச பரம்பரையில் பிறந்து, அதிலேயே வளர்ந்து அரசனான அவன், ஒருவன் சொல்வதை அப்படியே

நம்புவது எவ்வளவு தீமை விளைக்குமென்பதை அறிந் திருக்கவேண்டும்! அதுதான் போகின்றது என்றாலும், வாய் திறந்து அந்த அவசரத்தில் ஒன்றுஞ் சொல்லி இருத்தல் கூடாது. 'எதைக் காவாமல் விட்டாலும் தவறு இல்லை; ஒருவன் நாவைக் காக்கவேண்டும். அல்லாவிடின் மிகுதியும் துன்பமடைவான்,' என்ற பொருளில்,

'யா காவாராயினும் நா காக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு'

என்றல்லவா குறள் கூறுகின்றது?

அதையாவது நினைத்துப் பார்த்தானா அவன்? சிறிதும் ஆராயாமல் வாய் திறந்துவிட்டான் மன்னவன். வாயைத் திறந்தாலும் எவ்வளவு கொடுமையான சொற்கள் வெளிப்பட்டன அவ்வாயிலிருந்து! அவன் ஊர் காப்பாளரைக் கூவி,

"ஈங்கு என்
தாழ் பூங்கோதை தன்-கால் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகில்
கொன்று, அச் சிலம்பு கொணர்க ஈங்கு"

என்றல்லவா கூறிவிட்டான்? சேவகர்களை அழைத்து, "சென்று, என் அரசியின் கால் சிலம்பு அக்கள்வன் கையில் இருக்குமானால் அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொண்டு வருக" என்றானாம். அரசன் நீதி வழங்கும் முறையா இது? உண்மையில் அரசன் கூற வந்தது இதுவன்று! 'கொல்ல வேண்டி அவனையும் சிலம்பையும் கொணர்க,' என்று கூற வந்தவன், சொல்லில் தடுமாற்றம் ஏற்பட்டுக் 'கொன்று' என்று கூறிவிட்டான். ஒன்றைச் சொல்லக் கருதிக்கொண்டு வேறு ஒரு வார்த்தையைக் கூறுவது அனைவருக்கும் இயல்புதான், இதனைத்தான் குறள் 'சொல் சோர்வு' என்று குறிப்பிடுகின்றது.

சொல்லில் ஏற்படும் சோர்வினால் கேடு உண்டாகும். ஆதலால் மிகவும் ஜாக்கிரதையாக ஒன்றைப் பேச வேண்டும் என்ற கருத்தையே குறள்,

‘ஆக்கமும் கேடும் அதனான் வருதலான்
காத்து ஓம்ப சொல்லின்கண் சோர்வு’

என்று கூறுகின்றது. பாண்டியன் சொல்லில் சோர்வு ஏற்பட்டதனால் அவன் மட்டுமா கேடுற்றான்? அவன் அரசி, மதுரை நகரம், அனைவருமே கேடுற்றனர். குறள் கண்ட வாழ்வை நடத்தாமையால் பாண்டியன் கேடுற்றான்.

பாண்டியன் எதிரே கண்ணகி நிற்கின்றாள். கண்ணீர் வழியும் கண்களுடனும் கையில் ஒற்றைச் சிலம்புடனும் நிற்கும் அவளைக் கண்ட உடனே பாண்டியன் சொல் சோர்வுடையவனாகலின், பாதி உயிரை இழந்துவிட்டான்; வேறு வழி இல்லாமல் ‘யார் அம்மா நீ?’ என்றும் கேட்டுவிட்டான்.

அவன் கேட்டது ஒரே கேள்விதான், என்றாலும் என்ன?

சொற்சோர்வுடைய பாண்டியன் கேட்ட ஒரு கேள்விக்குச் ‘சொல்லின் செல்வி’யாகிய கண்ணகியும் பதில் சொல்லுகின்றாள். என்ன வேற்றுமை? அவன் ஒரு குறளுக்கு இலக்கியமாய் அமைந்துவிட்டதைப் போலவே, அவளும் ஒரு குறளுக்கு இலக்கியமாய் அமைந்து விடுகின்றாள். ‘யார் நீ?’ என்றால், நான் இன்னான் என்று தானே நாம் விடை கூறுவோம்? ஆனால், அடுத்து எத்தனை கேள்விகள் பிறக்கும்? அத்தனைக்கும் சேர்த்து விடை கூறிவிடுகிறாள் கண்ணகி. “ஆராய்ச்சி இல்லாத மன்னனே, சொல்கின்றேன், கேள்: இகழ்ச்சி கூற முடியாதபடி, தேவர்களும் அஞ்சும் வண்ணம் புறாவுக்

காகத் தன் உடம்பைக் கொடுத்த சிபியும், தன் பிள்ளையைத் தேர்க்காலில் கிடத்தித் தேரை ஓட்டிப் பசுவின் துயரைப் போக்கிய மனுச்சோழனும் ஆட்சி செய்த புகார் (காவிரிப்பூம்பட்டினம்) என் ஊராகும். பிறர் மதிக்கும் பெருஞ் செல்வத்துடன் புகழும் பெற்று வாழும் மாசாத்துவான் மகனாகப் பிறந்தும், விதி பிடித்துத் தள்ளினமையால், இவ்வூருக்கு என்னுடைய காற் சிலம்பை விற்க வந்து, நின்னால் கொலையுண்ட கோவலன் மனைவி யான்; கண்ணகி என்பது என் பெயர்,'' என்ற பொருளில் பேசுகிறாள்,

''தேரா மன்னா! செப்புவது உடையேன்:
எள் அறு சிறுப்பின் இமையவர் வியப்பப்
புள் உறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்,
வாயில் கடைமணி நடு நா நடுங்க,
ஆவின் கடைமணி உகு நீர் நெஞ்சு சுடத் தான் தன்
அரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்,
பெரும் பெயர்ப் புகார் என் பதியே; அவ்வூர்,
ஏசாச் சிறப்பின், இசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி,
வாழ்தல் வேண்டி, ஊழ்வினை துரப்ப,
சூழ் சுழல் மன்னா! நின்னகர் புகுந்து, ஈங்கு
என் கால் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்பது என் பெயரே...''

என்று கூறிமுடித்தாள் அந்தச் சொல்லின் செல்வி.

இந்தப் பதிலைக் கேட்ட பிறகு வாய் திறந்து ஒரு வார்த்தையேனும் பேசப் பாண்டியனுக்கு வாய்ப்பு ஏது? இவ்வாறுதான் பேச வேண்டும் என்று குறள் கட்டளை

இடுகின்றது. 'சொல்லைச் சொல்ல வேண்டுமானால் எப்படிப்பட்ட சொல்லைச் சொல்வது? மற்றொரு சொல்லைச் சொல்லி இதனை வெல்ல முடியாதபடி சொல்லுக சொல்லை,' என்னும் கருத்தில்,

'சொல்லுக சொல்லைப் பிறிது ஓர் சொல் அச் சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து.'

என்று கட்டளையிடுகிறது.

கற்புக் கடம் பூண்ட கண்ணகித் தெய்வம், கற்பு நெறியில் மட்டும் அல்லாமல், 'வெல்லும் சொல்' சொல்வதிலும் குறள் கண்ட வாழ்வையே மேற்கொண்டது என்று கூறுவதில் தவறு யாது?

# 5. எது அறம்?

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரைத் தமிழ்நாட்டை ஆட்சி செய்தவர்கள் பல்லவர்கள். சிறந்த கலைஞர்களாகவும், தேர்ந்த அரசியல் வாதிகளாகவும் இருந்தனர். பல்லவ மன்னர் பெரும்பாலார். அவர்களுடைய சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாக மாமல்லபுரம் குடைவரைக் கோயில்களும், ஓவியக் கலைக்குச் சித்தன்ன வாசல் ஓவியங்களும், இசைக்கலைக்கு உதாரணமாகக் குடுமியாமலைக் கல்வெட்டும் இன்றும் உள்ளன.

பிற்காலப் பல்லவருள் சிறந்த மன்னன் இராச சிம்மப் பல்லவன் என்பவன். ஒவ்வொரு பல்லவனும் ஒவ்வொரு துறையில் வல்லவனாய் இருந்தான். தன் முன்னோர்கள் செய்ததைப் போலவே தானும் ஒரு கலையை வளர்க்க நினைத்தான் இராசசிம்மன்; மிக நீண்ட காலம் ஆராய்ந்து, கோயில் கட்டுவதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தான். இதற்கு ஒரு காரணமும் உண்டு. எல்லாவற்றுள்ளும் சிறந்ததாகிய கலையின் பயன் யாது? அலைந்து திரியும் மனத்தை ஒரு நிலையில் நிறுத்தி அனுபவத்தை உண்டாக்குவதே கலையின் பயன்.

இவ்வாறு மனத்தை ஒருநிலைப்படுத்தி அனுபவத்தை வழங்குவது எல்லாக் கலைகட்கும் பொதுவாயினும்,

'நுண்கலைகள்' (Fine Arts) எனப்படும் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, கவிதை என்ற ஐந்தும் இதனை மிகுதியும் செய்கின்றன. மனித வாழ்வின் நிலையாமையை உணர்ந்த நம் முன்னோர், இந்த ஐந்து நுண்கலைகளையும் இறைவனுக்கே அர்பணித்தனர். பெருங்கோயில்கள் கட்டிய ஒரு மன்னனாவது தன்னுடைய அரண்மனையைக் கருங்கல்லினால் கட்டியதுண்டா? இல்லையே! எகிப்து நாட்டை ஆட்சி செய்த 'பாரோக்கள்' தம்முடைய சடலத்தைப் புதைக்க, உலகம் வியக்கும் 'பிரமிடு'களைச் சமைத்தார்கள். ஆனால், நம் நாட்டில் கோயில்களைத் தவிர வேறு எதனையும் நிலை பெறும்படி கட்டவே இல்லை. இத்துறையில் நம்மவர்களின் பண்பாட்டை அறிய இன்றுள்ள நமக்குத் தகுதி இன்றேனும், வருங்காலம் உறுதியாக அதனை அறியும் என்பதில் ஐயமில்லை!

கயிலை மலையில் உமையை ஒரு பாகத்தில் கொண்டு இறைவன் எழுந்தருளியுள்ளான். காஞ்சீபுரத்தில் அக் கயிலை மலையை ஒத்த ஒரு கோயில் எடுப்பித்து, அதில் இறைவனை நிறுத்த விழைந்தான் இராசசிம்மன். கலைக்கெல்லாம் மூலமான இறைவனுக்கே ஒரு கோயில் எடுக்க வேண்டுமானால், அக்கோயில் எத்துணைக் கலைச் சிறப்புடையதாக இருக்க வேண்டும்! தன் காலத்தில் தமிழ் நாட்டில் எத்துணைக் கலை நுணுக்கம் இருந்ததோ, அத்தனையும் ஒவ்வொரு கோயிலிலும் குடிபுக வேண்டும் என்று முடிவு செய்தான் அப்பல்லவ மன்னன். 'செங்கோலுக்கு மிஞ்சின சங்கீதமா?' என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. பல்லவச் சக்கரவர்த்தியே ஒரு முடிவு செய்தால், அதனைக் கொண்டு செலுத்தவா முடியாது?

தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் அனைத்திலிருந்தும் சிற்பக் கலைஞர் பலர் காஞ்சிக்கு விரைந்தனர். மன்னனோ, கலை ஆர்வமும் பத்தியும் நிறைந்தவன்; செல்வாக்குக்கோ குறைவில்லை. சிறந்த கலைக்கோயில்

தோன்றக் கேட்கவா வேண்டும்! இன்று அழிந்து சிதிலமான நிலையிலும் காஞ்சிக் கயிலாய நாதர் கோயில் ஈடும் எடுப்பும் இல்லாமல் விளங்குகின்றதே! அவன் ஒப்பற்ற முறையில் கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்ய நாளும் குறித்துவிட்டான்.

சென்னைப் பட்டினத்தை அடுத்துப் பன்னிரண்டு கல் தொலைவில் இருப்பது 'திருநின்றவூர்'. இதனை இப்பொழுது தின்னனூர் என்று கூறுகிறார்கள். இராச சிம்மன் காலத்தில் வளம் நிறைந்திருந்த இவ்வூரில் 'பூசலார்' என்ற ஒரு பெரியார் வாழ்ந்தார். அவர் வறுமையில் வாழ்ந்தாலும் இறைவனுக்குத் திருக்கோயில் ஒன்று சமைக்க வேண்டும் என்ற அவாவுடையவராய் இருந்தார். இது நடைபெறக் கூடிய காரியமா? நீண்ட நாட்கள் முயன்றும், கோயில் கட்ட ஒரு வாய்ப்பும் கிடைக்கவில்லை அவருக்கு. எவ்வளவு முயன்றும் கோயில் கட்ட வாய்ப்பு இல்லை என்பதை அறிந்த அவர், பிறர் தயை இல்லாமலே கோயிலைக் கட்ட முனைந்தார்.

அழியக் கூடிய கல்லாலும் மரத்தாலும் கோயில் கட்டுவதானால், பிறருடைய தயை வேண்டும். எனவே, பூசலார் ஒரு புதிய வழியைக் கண்டார். அவர் யாருக்காகக் கோயில் எழுப்ப வேண்டும்? இறைவனுக்குத்தானே? எனவே, மனத்தினாலேயே கோயிலைக் கட்ட முடிவு செய்தார். அரசன் என்று கோயிலுக்குக் கடைகால் இட்டானோ, அன்றே அவரும் ஒரு மரத்தடியில் அமர்ந்து மனத்திற் கடைகால் இட்டார். கல் மரம் முதலியவற்றை மனத்தினாலேயே பெற்று மனத்தினாலேயே நிருமாணித்துப் பெரிய கோயிலைக் கட்டி முடித்துவிட்டார். அவர் மனத்தில் 'கட்டிய கோயிலுக்குக் குடமுழுக்குக்கும் ஒருநாள் குறிப்பிட்டு விட்டார். என்ன வேடிக்கை! இராச சிம்மப் பல்லவன் தான் கட்டிய கயிலாயநாதர் ஆலயத்துக்குக் கும்பாபிஷேகம் செய்யக் குறித்த அதே நாளைத்தான் பூசலாரும்

குறித்திருந்தார். விடிந்தால் குடமுழுக்கு நடைபெற வேண்டும். காஞ்சீபுரம் அல்லோல கல்லோலப்படுகின்றது! கும்பாபிஷேகத்தின் முதல் நாள் இரவு, பல்லவன் கனவில் இறைவன் தோன்றினான்; 'அப்பனே, திருநின்றவூரில் வாழும் பூசலார் பல நாளாய் முயன்று கட்டிய கோவிலுக்கு நாளைக் குடமுழுக்குக் குறித்துள்ளார். அங்கு யான் செல்ல வேண்டும். எனவே, உன் கோயிற் குடமுழுக்கைத் தள்ளி வைத்துக்கொள்,' என்று கூறினான்.

> "'நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிது நாள் நினைந்து செய்த
> நன்று நீடு ஆலயத்து நாளை நாம் புகுவோம்; நீ இங்கு
> ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய்' என்று
> கொன்றைவார் சடையான் அன்பர் கோயில்கொண்டு
> அருளப் போந்தார்.''

விழித்து எழுந்தான் மன்னன்; பதறிவிட்டான். எவ்வளவோ முயன்று தான் கட்டிய கோயிலின் குடமுழுக்கைத் தள்ளி வைத்துக்கொள்ள வேண்டுமாம்! இது இறைவன் கட்டளை. யார் அந்தப் பூசலார்? தன் கோயிலைவிட அவர் கட்டிய கோயில் எவ்வாறு சிறந்தது? அது சிறந்தது என்பதனால் தானே இறைவன் அங்கே செல்வதாகக் கூறிவிட்டான்? தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்தும் பல்லவன் கோயிலை அறியுமே! ஆனால், காஞ்சியை அடுத்து இருபது கல் தொலைவில் உள்ள திருநின்றவூரில் இறைவனும் விரும்பும் ஒரு கோயில் தோன்றுவதானால், அது அரசனாகிய தனக்குத் தெரியாமலா போயிருக்கும்?

இவ்வாறு நினைந்த அரசன் உடனே புறப்பட்டான் பூசலார் கோயிலைக் காண. திருநின்றவூரில் வந்து அரசன் கோயில் எதனையும் காணாமல் திகைத்தான்; ஊராரை விசாரித்துப் பூசலார் தங்கியுள்ள இடத்தை அடைந்தான்; 'ஐயரே, நீவிர் கட்டிய கோயில் எங்கே? அதைக் காணத் துடிக்கின்றேன்!' என்றான். வியப்பில் மூழ்கிவிட்ட

பூசலார், தாம் கோயில் கட்டியது அரசனுக்கு எவ்வாறு தெரிந்தது என்று வினவினார். அரசன் நடந்தவற்றைக் கூறினான். இறைவன் தம்பால் காட்டிய கருணையை வியந்த பூசலார், தாம் மனத்திலேயே கோயில் கட்டிய வரலாற்றை எடுத்து உரைத்தார். உண்மையை உணர்ந்த மன்னன், அவரை வணங்கி விடை கொண்டான். அவ் வரசனை 'அசரீரி கேட்டவன்' என்று கல் வெட்டுக்கள் கூறுகின்றன.

இந்த வரலாற்றினால் அறியப்படும் உண்மை ஒன்றுண்டு: எவ்வளவு பெரிய கோயிலைக் கட்டினாலும், அதனை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்தாலும், 'நான் தான் அதனைச் செய்தேன்!' என்ற துளி அகங்காரம் அரசன் மனத்தில் ஒட்டிக்கொண்டிருந்தமையின் அவன் கட்டிய கோயில் இறைவன் குடி இருக்கத் தகுதி இல்லாத தாகிவிட்டது. தூய்மையான மனத்துடன் செய்யப் படுவனவே 'அறம்' என்று கூறுகின்றது குறள். மனத் தூய்மை இல்லாமல் எவ்வளவு பெரிய அறத்தைச் செய்தாலும் அதனால் பயன் ஒன்றும் இல்லை. அது வெற்று ஆடம்பரத்தின் பாற்படும். இதே கருத்தைத் தான்,

> "மனத்துக்கண் மாசு இலன் ஆதல்; அனைத்து அறன்;
> ஆகுல நீர பிற"

என்ற குறள் தெரிவிக்கின்றது. 'நான் செய்தேன்!' என்ற அகங்காரத்துடன் கட்டிய கோயில் ஆடம்பரமாய் நின்று விட்டது. இதே கருத்தை வைணவர்கள், "எல்லாவற்றை யும் விட்டு, விட்டேன் என்ற எண்ணத்தையும் விடு," என்று அழகாகக் கூறுவார்கள். குறள் கண்ட வாழ்வு வாழ்ந்த பூசலார் கட்டிய கோயில் இன்றும் நாம் அறிய நிலைத்துள்ளது.

# 6. பழிக்கு அச்சம்!

'ஏன் ஐயா, இவ்வளவு அஞ்சுகிறீர்கள்?' என்று சிலரைக் கேட்கிறோம். 'வேறு எந்த வகையில் நட்டம் ஏற்பட்டாலும் கவலைப்பட மாட்டேன்; ஆனால், அநியாயமாக வரும் பழிக்கு அஞ்சுகிறேன்!' என்கின்றார் அவர். பழிக்கு அஞ்சுவதாகக் கூறும் அவரைப் பார்த்து, 'பழி என்பது என்ன?' என்று கேட்டால், அவர் என்ன பதில் கூறுவார்? பழிக்கு அஞ்சுவதாகக் கூறுபவருள் பலரால் பழி என்பது என்ன என்பதை விளக்க முடியாது.

பழி என்பது என்ன? ஒருவன் செய்யத் தகாத காரியத்தைச் செய்துவிட்டால் பிறர் அவனைக் குறை கூறுகின்றனர். இவ்வாறு குறை கூறுவதைப் 'பழித்துக் கூறுதல்' என்று சொல்லலாம். அப்படியானால் பழிக்கு உரிய செயல்கள் யாவை? எதைச் செய்தாலும் சிலர் இகழவும் சிலர் புகழவும் செய்வர். அனைவரும் புகழக் கூடிய காரியம் என்பது ஒன்றும் இல்லை. தீங்கு என்பதைக் கனவிலும் அறியாத இயேசுநாதரையும், மகாத்துமா காந்தியையும் பழித்தவர்கள் உண்டு. ஏன்? அவர்களைக் கொன்றவர்களும் உண்டு. இவ்வாறு கூறுவதனால் பிறர் கூறுவதைப் பற்றிக் கவலையே படவேண்டா என்பது கருத்தன்று.

ஒருவன் தான் செய்யும் காரியங்களைப்பற்றிப் பிறர் என்ன கூறுவார்கள் என்று சிந்திப்பது அவசியம்தான்.

ஆனால், அவ்வாறு நினைப்பதற்குமுன், யார் கூறுவார்கள் என்பதை ஆராய வேண்டும். பழி கூறுபவர்கள் தக்க பெரியவர்களா? நடுவு நிலைமையில் இருந்து நம் தவற்றை எடுத்துக் காட்டுகிறவர்களா? பெரியவர்கள் கூறும் பழிக்குத்தான் அஞ்ச வேண்டுமே தவிர, மற்றையோர் வார்த்தைகட்குச் செவி சாய்க்க வேண்டிய அவசியமே இல்லை. 'உலகம் பழிக்கும் செயலைச் செய்யாதே,' என்றுதான் குறள், புறநானூறு முதலிய நூல்கள் கட்டளையிடுகின்றன. ஆனால், 'உலகம்' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? உலகத்தில் வாழும் எல்லா மனிதர்களையும் அந்தச் சொல் குறிக்கவில்லை. 'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே,' என்று நம் முன்னோர் கூறினர்.

உயர்ந்த பெரியவர்கள் பழிக்கக்கூடிய செயல்களை ஒருவன் செய்யக்கூடாது. அப்படிப்பட்ட செயல் என்று ஏதாவது தனியாக உண்டா? ஆம்! மனிதன் தன் நிலைமைக்குத் தாழ்வான செயலைச் செய்தால், பெரியோர் பழி கூறுவர். மனிதன் எவ்வளவு இலாபத்தைப் பெறுவதானாலும், பெரியோர் பழிக்கும் செயலைச் செய்யலாகாது என்ற கருத்தைப் புறநானூறு,

"பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்"

என்று கூறுகின்றது. இவ்வுலகமே பரிசாகக் கிடைப்பதாயினும், அது பழியுடன் வருவதானால், அதனை விரும்புவதும், பெறுவதும் தவறு என்று கூறுகின்றது அப் பழந்தமிழ் நூல்.

இவ்வாறு பழிக்கு அஞ்சும் பெரியோர் தம்மிடம் ஒரு குற்றமும் இல்லாமல் நடந்துகொள்ள முயல்வர். தம்மையும் மீறிக் குற்றம் நிகழ்ந்துவிடுமாயின் உயிரை விட்டுவிட முயல்வரே தவிர, உயிருடன் இருந்துகொண்டு குற்றத்தால் வரும் பழியைப் பொறுத்துக்கொள்ள மாட்டார். அவர்கள் குற்றம் என்று நினைப்பதை நம் போன்றவர்கள்

குற்றம் என்று நினைக்கமாட்டார்கள். ஏன்? பிறர் எடுத்துக்காட்டிய இடத்தும் குற்றம் என்று உணர மாட்டார்கள். இதுவே நமக்கும் பெரியோர்க்கும் உள்ள வேறுபாடு. மிகச் சிறிய குற்றம் தம்மிடம் நிகழ்ந்து விட்டாலும், அதை மிகப் பெரிதாக நினைந்து வருந்துவர் பெரியோர். நாம் அன்றாடம் செய்துகொண்டு அது பற்றிக் கவலைப்படாத ஒரு சிறிய குற்றத்தை 'இமய மலையை ஒத்த பெருங்குற்றம் (Himalayan Blunder) என்று கூறி வருந்தினார் மகாத்துமா.

காஞ்சீபுரத்தில் ஏகாலியார் ஒருவர் வாழ்ந்தார். ஊராருக்கெல்லாம் துணி வெளுக்கும் வண்ணார் அல்லர் அவர்; இறைவனுடைய அடியார்களின் துணியை விருப்பத்துடன் வெளுத்துத் தருபவர். அவர்கள் தாங்களே வந்து அவரிடம் துணியைச் சலவை செய்யத் தருவதில்லை. ஆனால், அவராக அவர்களைத் தேடிச் சென்று அவர்களுடைய துணிகளைப் பெற்று வெளுத்துத் தருவார். இவ்வாறு செய்வதையே அந்த ஏகாலியார் தம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந் தார் அடியார்கள் வாய்விட்டுக் கேளாமல் இருப்பவும், அவரே அவர்களுடைய விருப்பத்தை அறிந்து வெளுத்துத் தந்தமையின், அந்த ஏகாலியாருக்குத் 'திருக்குறிப்புத் தொண்டர்' என்ற காரணப் பெயரும் உண்டாகி விட்டது

இந்தப் பரந்த உலகில் ஒரு நிகழ்ச்சியை அனைவரும் காணலாம். எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருக்கும் வரை ஒரு தொல்லையும் இல்லை. ஆனால், வாழ்க்கையில் ஒரு குறிக்கோளை மேற்கொண்டால் உடனே அதற்குப் பல விதமான தடைகள் ஏற்படுவதுதான் இயல்பு. நாம் வேறு வேலையாகத் தெருவில் நிற்கும் பொழுது, நம் அலுவலகத்திற்குப் போகக்கூடிய பஸ் ஒன்றன் பின் ஒன்றாக வந்து நிற்கும். ஆனால், நாம் அந்த பஸ்ஸுக்கு என்று வந்து காத்துக் கொண்டு நிற்கையிலேதான் அதைத்

தவிர வேறு பஸ்கள் அனைத்தும் வந்து வந்து போகும். இது வாழ்க்கையில் காணும் அனுபவம்.

திருக்குறிப்புத்தொண்டர் தம் வாழ்வில் மேற்கொண்ட செயல் மிகச் சாதாரணமானதுதான். ஆனாலும், அவருடைய இந்தச் செயலுக்குக்கூட ஒரு சோதனை வந்து விட்டது. ஒரு நாள் வயது முதிர்ந்த அடியார் ஒருவர் வந்தார். அவருடைய உடம்பில் இருந்த ஒரே துணியைத் தவிர, வேறு உடை ஒன்றும் அவரிடம் இல்லை. திருக்குறிப்புத்தொண்டர் அவரிடம் ஓடோடிச் சென்றார். 'பெரியீர், வணக்கம்! உங்கள் உடம்புடன் ஒட்டிக் கொண்டிருக்கும் இந்த உடையைக் கொடுத்தால், நான் இதனை வெளுத்துத் தருகிறேன்,' என்றார். வந்த பெரியவர், 'என்னிடத்தில் இந்த ஒரே துணிதான் இருக்கின்றது. இதை எடுத்துச் சென்று வெளுத்துத் தருவதில் எனக்குத் தடை ஒன்றும் இல்லை. ஆனால், சூரியன் மலை வாயில் விழும் மாலைக் காலம் வருவதற்குள் இதனைச் சலவை செய்து தரவில்லை என்றால், இந்தக் கிழ உடம்புக்குத் தீமை செய்தவராவீர். இதற்குச் சம்மதமானால் எடுத்துச் செல்லலாம்,' என்றார்.

அதற்கு உடன்பட்டுத் திருக்குறிப்புத்தொண்டர் அடியாரின் கந்தையை வாங்கிக்கொண்டு துணி துவைக்கும் துறைக்கு வந்தார்; அதை உவர் மண்ணில் நனைத்து நன்கு துவைத்தார். கந்தை சுத்தமானவுடன் அதனைக் காயவைக்க முற்பட்டார். ஆனால், அதுவரை வெளி வாங்கி நிர்மலமாய் இருந்த ஆகாயம் திடீரென்று மூடிக் கொண்டது. சாதாரண மூட்டமாய் இல்லை அன்று; 'திசை மயங்க வெளி அடைத்துச் செறிமுகிலின் குழாம் மிடைந்து விட்டது!'

திடீரென்று பிடித்த மழை விடவே இல்லை. ஓயாது பொழியும் அந்த மழை விட்டு விடும் என்ற நினைவில் அந்த ஏகாலியார் காத்து நின்றார். மழை விடவே

இல்லை. மாலைக் காலம் வந்து விட்டது பகைவனைப் போல! 'உடல் நடுக்கம் அதிகப்படத் துடிதுடிக்கும் அடியாருக்குப் பெருந்தீமை செய்துவிட்டேன்! என் தொண்டு என்ன ஆவது!' என்று துடித்துவிட்டார் ஏகாலியார்.

"ஓவாதே பொழியும் மழை ஒருகால் விட்டு ஒழியும் எனக்
காவாலி திருத்தொண்டர் தனிநின்றார்; விடக் காணார்;
மேவார்போல் கங்குல் வர 'மெய்குளிரும் விழுத்தவர்பால்
ஆ! ஆ! என் குற்றேவல் அழிந்தவா!' என விழுந்தார்"

அடியாரிடம் துணியை வாங்கும்பொழுது வானம் வெளுத்துதான் இருந்தது. ஆனால், எதிர்பாராதபடி மழை வந்துவிட்டால், அதற்கு ஏகாலியார் எவ்வாறு பொறுப்பாக முடியும்? நம்முடைய அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட மழையால் வரும் குற்றத்திற்கு நாம் எவ்வாறு பொறுப்பாவது? இவ்வாறுதான் நாம் எண்ணு வோம்; நாம் இவ்வாறு எண்ணுவதிலும் தவறு இல்லை. ஆனால், பெரியவர்கள் இவ்வாறு எண்ணுவதில்லை, அதனால்தானே அவர்கள் 'பெரியவர்கள்' என்று வழங்கப் படுகின்றார்கள்? மழையின்மேல் பழியைப் போட்டு விட்டுத் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் எண்ணமே தோன்றவில்லை திருக்குறிப்புத்தொண்டருக்கு. மாலை யாவதன் முன் எப்படியும் துணியைத் துவைத்து உலர்த்தித் தந்திருக்க வேண்டியது தம்முடைய கடமை என்றே கருதினார். அக்கடமையிலிருந்து தவறிவிட்டது பெருங்குற்றம் என்றும் நினைத்தார்

அப்படியே தவறியதாகக் கொண்டாலும் இது ஒரு பெரிய குற்றமா? இல்லையே! ஓர் இரவு துணி இல்லாமை யால் பெரியவர் இறந்தா போகப் போகிறார்? என்றாலும் குறள் என்ன கூறுகின்றது? தினை அளவு (கடுகைவிடச் சிறியது தினை) குற்றம் தம்மிடம் நிகழ்ந்தாலும் அக் குற்றத்தைப் பனையளவு பெரிதாகக் கருதி, அஞ்சி

வருந்துவார்களாம். யார் தெரியுமா? தமக்கு வரும் பழியை நாணுகின்ற பண்புடைய பெரியோர்கள்.

இக்கருத்தை மிக அழகாகக் கூறுகின்றது குறள்:

''தினைத் துணை யாம் குற்றம் வரினும் பனைத் துணையாக்
கொள்வர் பழி நாணு வார்.''

குறள் கண்ட வாழ்வு வாழ்ந்த ஏகாலியார் தாம் செய்த சிறு தவற்றைப் பெரிதாகக் கொண்டு அதற்குத் தண்டனைக்காக அத்துணியை அடிக்கும் கல்லில் தம் தலையையே ஏற்றிப் புடைக்க முடிவு செய்து அவ்வாறே செய்யவும் தொடங்கினார்.

# 7. கொடைக் கலை

'எத்தனையோ கலைகளை நாம் கேள்விப்பட்டது உண்டு; ஆனால், கொடையும் ஒரு கலையா?' என்று கேட்கத் தோன்றுகின்றதா? ஆம்! கொடையும் ஒரு கலைதான். எப்படிக் கலைகள் ஒரு சிலருக்கு மட்டுமே முடிவதாக உள்ளதோ அப்படியே கொடையும் ஒரு சிலருக்கே முடியும். கொடை என்பது என்ன? இன்னார் இனியார் என்று பாராமல் வேண்டினவர்கட்கெல்லாம் வேண்டினவற்றை வாரி வழங்குவதே கொடை என்று கூறப்பெறும்.

கொடுத்தல்தான் கொடை என்றால், உலகத்தில் வாழும் அனைவரையும் கொடையாளிகள் என்று கூறி விடலாமா? கொடுக்கல் வாங்கல் இல்லாமல் இந்த உலகம் ஒரு நாள்கூட வாழ முடியாது. அன்றாடக் கூலி பெற்று வாழ்க்கை நடத்தும் ஒருவனில் தொடங்கி, பெரிய செல்வம் கொழிக்கும் அமெரிக்க அரசாங்கம் வரை கொடுக்கல் வாங்கல் இல்லாமல் வாழ முடியவில்லை. அப்படியானால், இவர் அனைவரையும் கொடையாளிகள் என்று ஏன் கூறக்கூடாது?

கொடுப்பதை மட்டும் கொடை என்று நம்மவர் கூறவில்லை. யாருக்குக் கொடுக்கின்றான் என்பதைப் பார்த்த பிறகே ஒருவனைக் கொடையாளி என்று கூறினார்கள். இது பற்றிக் கூற வந்த குறள் 'வறியார்க்கு

ஒன்று ஈவதே ஈகை' என்று கடுமையாகக் கூறுகின்றது. 'எக்காலத்திலும், எந்த வகையிலும் இவர்களால் நாம் தருவதைத் திருப்பித் தரமுடியாது,' என்று அறிந்திருந்தும் தருகின்றார் ஒருவர். அப்படியானால், அவரைக் கொடையாளி என்று கூறலாமா? இன்னும் ஒரு பரீட்சை வைத்து, அதிலும் தேறியவர்களையே இப்பட்டத்திற்கு உரியவர்களாக்குகின்றது தமிழ் வறியவர்க்குத்தான் கொடுக்கின்றார். ஆனால் எதனை? தம்மிடம் அதிகப் படியாக உள்ளவற்றையும், வேண்டாதவற்றையும் தமக்குப் பயன்படாதவற்றையும் தருபவரும் உண்டு. அழுகிப்போன பழத்தையும், புளித்துப்போன பாலையும் 'கிருஷ்ணார்ப்பணம்' என்று சொல்லிக்கொண்டு தொட்டியில் போடும் இந்த நாட்டில், மேலே கூறிய முறையில் தருபவர் இருப்பதில் புதுமை இல்லை.

எனவே, கொடையாளிகள் என்று யாரைக் கூறலாம்? மிகவும் வறியவர்கட்கு மிகவும் உயர்ந்த பொருளையும் மிகவும் தேவையான பொருளையும் தருவதே கொடை. எவ்வளவு விந்தையானது மனித வாழ்க்கை என்பது தெரிந்தால், இது எவ்வளவு கடினமானது என்பதும் விளங்கும். சாப்பாட்டிற்கு ஒரு தொல்லையும் இல்லாதவர்களைத்தான் விருந்துக்கு அழைக்கின்றோம். வருபவர்கள் காரில் வந்து இறங்குபவர்களாய் இருந்தால் விருந்தின் அளவும் தரமும் மிகவும் உயர்ந்துவிடுகின்றன. இவ்வளவு சிரமத்துடன் விருந்து சமைத்தாலும் அந்தக் காரில் வரும் விருந்தினர் இதனை விரும்பி உண்கின்றனரா? அவர்கள் புளி ஏப்பமும் அசீரணமும் உடையவர்கள். அவர்கட்குச் செய்யப்படும் உபசாரம் வீணானது. அதே நேரத்தில் பழைய சோற்றுக்கு ஆலாய்ப் பறந்து கொண்டு, தொண்டை கிழியக் கதறுகின்றவர்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. அப்படிக் கதறிக்கொண்டு வருகின்றவர்கட்கு எத்தனை பேர் விருந்து அளிக்கின்றனர்?

இப்படிப் புளி ஏப்பம் விடுகின்றவர்க்கு உபசாரம் செய்கின்றவர் பலர் உண்டு. அவர்களைப் பார்த்துப் பெரிய 'தர்மிஷ்டர்' என்று வாய் கூசாமல் நாம் பட்டம் கொடுக்கிறோம். உண்மையில் அவர்களால் எக்காலத்தும் எவ்விதத்திலும் திருப்பித் தர முடியாது என்று அறிந்தும், தந்தவர்களையே 'கொடையாளர்' என்று குறிப்பிட வேண்டும்.

இப்படிப்பட்டவர்கட்குத் தருவதிலும் எதனைத் தருவது என்ற பிரச்சினை எழும். உயிரையே தர வேண்டி நேரிட்டாலும் மனம் உவந்து கொடுப்பவர்கட்குத் தமிழர் ஓர் அழகிய பட்டத்தைச் சூட்டினர். அதுதான் 'வள்ளல்' என்னும் பட்டம். பாரி, சிபி போன்றவர்களை 'வள்ளல்கள்' என்று குறிப்பிட்டனர். பாரி, கொழு கொம்பு இல்லாமல் தவித்த முல்லைக் கொடிக்குத் தான் ஏறி வந்த தேரை அளித்ததை உலகம் நன்கு அறியும். இதைவிடச் சிறந்த செயல், தன் உயிரையே வேண்டும் என்று இரந்த மூவேந்தர்கட்கு உயிரையே தந்துவிட்ட அந்தப் பெருவள்ளல் செயல்.

பாரி வாழ்ந்த இத்தமிழ்நாட்டின் மற்றொரு மூலையில் 'அதியமான் நெடுமான் அஞ்சி' என்ற மற்றொரு வள்ளலும் வாழ்ந்தான். தன் பெயரைப் போலவே பெரிய மனமும் படைத்தவன் அப்பெரு வள்ளல். அவனுடைய நாடு மலைநாடு. அந்த மலைப் பகுதியில் ஒரு பயங்கரமான பள்ளத்தாக்கில் சிறந்த நெல்லி மரம் ஒன்று இருந்தது. பொதுவாகவே நெல்லிக்காய் மிகச் சிறந்த பயனை அளிக்கக் கூடிய ஒன்று. அதிலும் மலையில் வளரும் நெல்லி மிகவும் பயன் உடையது. அதியமானின் நாட்டில் தழைத்திருந்த அந்த அதிசய நெல்லி மரம் பல ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரே ஒரு பழந்தான் பழுக்கும். மரத்தின் சாரம் முழுவதும் அந்த ஒரே பழத்தில் இறங்கியதனாலோ ஏதோ, அந்தப் பழம் மிகவும் சிறந்ததாய் அமைந்திருந்தது. அந்தப் பழத்தை உண்ட

வர்கள் மிக நீண்ட காலம் நோய் நொடி இன்றிச் சிறந்த உடலுரத்துடன் வாழ்வார்களாம்.

ஒரு முறை, இங்ஙனம் பழுத்த ஒரே பழம் அதியனின் கையில் கிடைத்தது. வேறு யாராக இருப்பினும் மிகவும் ஜாக்கிரதையாக அதனை எப்படியும் உண்டிருப்பார்கள். ஆனால், அதியன் அதை உண்பதற்காகக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பொழுது அம்மையார் ஒருவர் அவனைக் காண வந்தார். வந்தவர் யார் என்று நினைக்கிறீர்கள்? அறிவு ஆற்றல்களோடு வயதிலும் முதிர்ந்தவராகிய அவ்வைப் பாட்டியாரே! பல்லாண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்துவிட்ட அந்தக் கிழவியாருக்கு அந்தப் பழம் தேவை இல்லைதான்.

என்றாலும் என்ன! அதியனைப் பார்த்துவிட்டுப் போக வந்த அவரை அதியன் வரவேற்று உபசரித்தான். எப்படி உபசரித்தான்? தன் கையில் இருந்த அந்த அதிசய மான நெல்லிக் கனியை அவருக்குக் கொடுத்தான். அதன் பெருமையைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை அவன். சாதாரண நெல்லிப் பழம் என்று நினைத்து வாங்கி உண்டுவிட்டார் பாட்டியார்.

பழத்தை உண்ட பிறகுதான் அதனுடைய சுவை சாதாரண நெல்லிக் கனியின் சுவை அன்று என்பதை அறிந்தார் அவ்வையார். அப்பழத்தின் தனிச் சிறப்பு யாது என்று அதியனை விசாரித்தார். வள்ளல் அதியமான் பழத்தின் வரலாற்றைக் கூறினான். அசந்து போய் விட்டார் அவ்வையார்! அதியமான் அதிக அன்பு உடையவன், வள்ளல் என்பது அவ்வையாருக்கும் தெரியும். ஆனால், 'அமிர்தம்' போன்ற நெல்லிக் கனியைக்கூடத் தான் உண்ணாமல் பிறருக்கு வழங்குவான் என்று அவர் கனவிலும் கருதவில்லை. உடனே அமிழ்தம் கிடைத்த வரலாறு நினைவிற்கு வருகின்றது பாட்டியாருக்கு. அமிழ்தம் கிடைத்தால் ஒருவருக்கும் பங்கு தாராமல்

தாமே உண்ண வேண்டும் என்று நினைத்த தேவர்கள் எங்கே! அமிழ்தமாகிய அந்த நெல்லிக் கனியைத் தான் உண்ணாமல் சாகப் போகும் கிழவியாருக்குத் தந்த அதியமான் எங்கே!

அடுத்தபடியாகச் சிவபெருமான் நினைவு வந்தது பாட்டியாருக்கு. ஏன் தெரியுமா? சிவபெருமானுக்குப் பங்கு தரக்கூடாதென்று அவனை ஒதுக்கினார்கள் தேவர்கள். கடைசியில் அமிழ்தத்திற்குப் பதிலாக ஆலகால விஷம் வந்தது பாற்கடலில். அந்த நஞ்சுக்கு அஞ்சி இறைவனிடம் ஓடினார்கள்; முறை இட்டார்கள். அவர்கள் தன்னை ஏமாற்ற முயன்றதை மன்னித்தான் இறைவன். ஆலகால நஞ்சை எடுத்துத் தான் உண்டான். தேவர்கள் வாழவேண்டி அவர்கட்கு அமிழ்தத்தைத் தந்துவிட்டுத் தான் நஞ்சை உண்டானே சிவபெருமான்!

அதே போன்று பாட்டியாருக்கு அமிழ்தம் போன்ற நெல்லிப்பழத்தைக் கொடுத்துவிட்டுத் தான் சும்மா இருந்துவிட்டானே அதியமான்! அதிலும் ஒரு சிறப்பு உண்டு. அந்தப் பழத்தின் தன்மை இத்தகையது என்று கூறினானா? கூறியிருந்தால் பாட்டியார் அதை உண் டிருப்பாரா? கொடுப்பதிலும் ஒரு சிறப்பு என்னவெனில், வாங்குபவர் மனம் வருந்தாமல் கொடுப்பதுதான். அவ்வாறு இன்று எத்துணைப் பேர் செய்கின்றனர்? முக்கியமான ஒன்றைக் கொடுப்பதன் முன், அது நமக்கு எவ்வளவு முக்கியம் என்றும், மிகவும் கஷ்டப்பட்டுக் கொடுப்பதாகவும், அதனுடைய பெருமையையும், தம் பெருமையையும் வாங்கிக் கொள்பவர் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் பாடுபடுகின்றனர். இதனால் கொடுப் பதன் பயனே இல்லாமல் போய்விடுகிறது.

அதியன் இன்னது என்று கூறாமல் கொடுத்து நெல்லிக் கனியை உண்ணச் செய்தான். அச்செயலைக் கண்ட அவ்வைப் பாட்டியார் அவனை வாழ்த்துகிறார்.

எவ்வாறு? 'நீல மணி மிடற்று ஒருவன்போல மன்னுக பெரும நீயே!' என்று அவர் கூறும் பொழுது நீலகண்டனாகிய சிவபெருமானையும் அதியனையும் ஒப்பிடுகின்றார்.

மிகச் சிறிய சிற்றரசனாயினும், குறள் கண்ட வாழ்வை வாழ்ந்தவன் ஆதலின், அதியனுடைய வாழ்வு அப்படியே ஒரு குறளுக்கு இலக்கியமாய் அமைந்து விடுகின்றது. அனைவரும் அறிந்த குறள்தான் அது:

" அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு "

அன்புடையார் தம் எலும்பையும் பிறர்க்கு வழங்குவர் என்ற குறளை வாழ்ந்து காட்டினான் அதியன், அமிழ்தமாகிய நெல்லிக் கனியைப் பிறருக்குக் கொடுத்து விட்டதன் மூலம்.

# 8. பலாவும் எட்டியும்

நல்ல மனிதர் பலர் உண்டு இந்த நானிலத்தில். ஆனால், நல்ல மனிதர் அனைவரும் நல்ல முறையில் பேசத் தெரிந்தவர் என்று கூற முடியாது. 'மனிதர் மிகவும் நல்லவர் தான்; ஆனால், தம்முடைய வாயால் பகையை வளர்த்துக் கொள்கிறார்,' என்று பேசப்படுவதைக் கேட்கிறோம். இதன் கருத்து யாது? நல்லவர் பகையைப் பெற முடியுமா? பெற்றாலும் அதனை உடனே போக்கி விடாமல் வளர்த்தல் கூடுமா?

பகையை வளர்த்துக் கொள்பவர்களை நல்லவர்கள் என்று சமுதாயம் கூறுவதன் கருத்து யாது? மன நினைவால், பண்பால், பிறருக்கு நன்மை செய்யும் இயல்பால், நல்லவர் என்ற பெயரைப் பெறுகின்றார் ஒருவர். என்றாலும், இவ்வளவு நற்பண்புகளும் உடைய அவருக்கு, நாக்கில் சனீசுவரன் புகுந்து கொள்கிறான். அவர் வாயைத் திறந்து பேச ஆரம்பித்தால் போதும்! நல்ல நண்பர்களும் பகைவர்களாகி விடுவார்கள். அவர்கள் மனத்தில் ஒரு தீமையும் இல்லாமலே வாய்ப் பேச்சின் கொடுமையால் பகையை வளர்த்துக் கொள்பவர்கள்.

இம்மாதிரி மனிதர்கட்கு நேர்மாறான வகையாரும் உண்டு. அவர்கள் மனத்தில் தீய எண்ணம் தவிர வேறு எண்ணம் தோன்றுவதே இல்லை. எப்பொழுது பார்த்தாலும் யாரை ஒழித்துக் கட்டித் தாங்கள் பயன்

அடையலாம் என்ற ஒரே எண்ணந்தான் அவர்கள் மனத்தில் அல்லும் பகலும் குடி கொண்டு இருக்கும். இவ்வளவு இருந்தும், அவர்களிடம் ஒரு நன்மை உண்டு. எப்பொழுதும் புன்சிரிப்புடன் மிக நயமான வார்த்தை களையே பேசுவார்கள். எட்டிப் பழம் போன்றவர்கள் அப்புண்ணியவான்கள். பார்ப்பதற்கு மிகவும் அழகு உடையதாகக் காணப்பட்டு, உண்டவரைக் கொல்லும் எட்டிப் பழம். அவர்களும் நயமாகப் பேசித் தம்மிடம் வந்தவர்களைத் தம் நலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு, காரியம் முடிந்தவுடன் சக்கையை எறிவது போல எறிந்து விடுவார்கள். முதல் வகையார் பலாப்பழம் போன்றவர். பலாப்பழம் பார்வைக்கு முசுடும், முள்ளும் நிறைந் துள்ளது. பொறுத்துக் கொண்டு அறுத்துப் பார்த்தால், உள்ளே சுவை நிறைந்த சுளை இருப்பது போல அவர்கள் இனிய பல பண்புகள் நிறைந்தவர்களா யிருப்பார்கள்.

பலாப்பழத்தை ஒத்த பண்பாடு உடையவர்கள் சிறந்தவர்களாயினும், அவர்களால் உலகத்துக்கு அதிக நன்மை இல்லை. ஏனெனில், அவர்களிடம் பழகுகின்ற வர்கள் பல நாள் பழகி அவர்கள் மன நிலையை அறிந்து கொண்ட பின்னரே உண்மையை அறிய முடியும். அவ்வளவு தூரம் பழகுவதற்கு முன்னரே பலாப்பழத்தை ஒத்தவர்களுடைய முள் போன்ற வாய்ச்சொற்கள் பழகு பவரை வெருட்டிவிடும். இத்தகையவர்களால் உலகத் திற்கு அதிக நன்மை உண்டு என்று கூற முடியாவிடினும், எட்டிப் பழம் போன்ற இரண்டாவது வகையைச் சேர்ந்த வர்களால் உலகிற்குத் தீமையே விளையும்.

'பலாப்பழம் போன்றவரால் நன்மை இல்லை; எட்டிப் பழம் போன்றவரால் தீமை விளையும்' என்றால் பிறகு எப்படிப்பட்டவர்களால்தான் நன்மை விளையும்? அகத்தே தூய்மையும் புறத்தே இன்சொல்லும் உடையவர்களாலே தான் உலகம் பயன் அடைய முடியும். அகத்தே தூய்மை

உடையவர்கள்தாம் பிறருடைய நன்மையைக் கருத முடியும். ஆனால், எவ்வளவுதான் அகத்தூய்மை இருந்தாலும் பிறருக்கு நன்மை புரிய அவர்கள் தயாராக இருந்தாலும், பயன் என்ன? நன்மையைப் பெறுகின்ற பிறர் தங்களிடம் வரவும் தம்முடைய குறைகளை அச்சமின்றி எடுத்துக் கூறவும் முடிந்தால்தானே பயன் ஏற்படும்?

இவ்வுண்மையை நன்கு அறிந்து கொண்டமையால் தான் குறள் 'இனியவை கூறல்' என்ற ஓர் அதிகாரமே (பத்துக் குறள்கள்) வகுத்து விட்டது. உண்மையான அகத்தூய்மை உடையவர்கள் எவ்வாறு பேசுவார்கள்? இனிய சொற்களையே பேசுவார்கள். அப்படியானால், அந்த இனிமை உதட்டளவில் நின்றுவிடுமா? நில்லாது. உண்மையான பரிவு அல்லது அன்பு கலந்ததாக இருக்கும் அவர்களுடைய சொல். ஒரு வேளை அன்புடையவர் போல நடித்தாலோ? இல்லை. வஞ்சகம் இல்லாததாகவும் இருக்கும் அவர்களுடைய சொல். இதையே குறள் 'இன்சொலால் ஈரம் அளைஇப் படிறு (வஞ்சகம்) இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்று கூறிச் செல்கின்றது.

இவ்வாறு வஞ்சகமில்லாத அன்புடன் இனிய சொற்களைக் கூறுகின்ற பெரியோர்கள் உலகிற்குச் செய்துள்ள நன்மைகள் அளப்பில.

அதியமான் நெடுமான் அஞ்சி என்பவன் கடை எழு வள்ளல்களுள் ஒருவன். அவன் மிகப் பெரிய நாட்டை ஆளவில்லை. எனினும், தமிழ்நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்த சிற்றரசன். அவன் காலத்தில் தமிழ் நாட்டின் மற்றொரு பகுதியை ஆட்சி செய்து வந்தான் தொண்டைமான் என்ற மற்றொரு சிற்றரசன். அந்த நாளில் தமிழ் நாட்டை ஆட்சி செய்த இந்தச் சிற்றரசர்களுள் சண்டைக்குக் கணக்கே இல்லை. ஓயாது ஒழியாது போரிடுவதே இவர்கள் வழக்கமாய் இருந்தது.

அதியமான் வள்ளல் ஆகலின் வந்தவர்கட்கெல்லாம் வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்தான். அதனால் அவனுடைய செல்வ நிலைமை சற்றுத் தளர்ந்திருந்தது ஒரு சமயம். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் தொண்டைமான். உடனே படையெடுத்து வந்து அதியமானுடன் போர் தொடுக்கச் சித்தமாகி விட்டான்.

இந்த நிலையில் அதியன் போருக்குத் தயாராய் இல்லை. அதற்காகக் கோழையைப் போல நாட்டை விட்டுவிட்டு ஓடி விடுவதும் முறையன்று. பகைவனுக்குப் பணிந்து போவதும் சரியன்று. என்ன செய்வான் அதியன்! தொண்டைமானுடன் சமாதானம் செய்து கொள்ளவே விரும்பினான்.

போர் தொடுக்கச் சித்தமாய் இருக்கும் பகைவனுடன் சமாதானம் செய்து கொள்வது என்பது எளிதான காரியமா? அவ்வாறு செய்து கொள்ள முயல்வதில் இரண்டு வகையான தொல்லைகள் உண்டு. உண்மையில், தான் போர் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துச் சமாதானம் கேட்கலாம். இவ்வாறு செய்வதற்கும் போரில் தோல்வி அடைவதற்கும் அதிக வேறுபாடு இல்லை. இதற்கு எதிராகத் தன்னுடைய பலமின்மையைக் காட்டிக் கொள்ளாமலே சமாதானத்தை அடைய முயற்சி செய்யலாம். ஆனால், பகைவன் சமாதானத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டால், வந்தது ஆபத்து! இவை இரண்டு வழியிலும் சிக்காமல் சமாதானம் பெறுவது சிறப்புடையது. இம்முறை சிறப்புடையது என்றால், ஏன் இதனைக் கடைப்பிடித்தல் கூடாது? இம்முறையில் சமாதானம் செய்து வைப்பவர் கிடைத்தால் நன்றாகக் கடைப்பிடிக்கலாம். ஒரே ஒரு தொல்லைதான் உண்டு இம்முறையில். நன்மை நினைப்பவர்— அதாவது மனத்தால் தூயவர்— கிடைப்பது கடினம். இத்தகையவர் கிடைத்தால் இவர்கள் இன்சொல் பேசுபவர்களாகவும்

இருப்பது கடினம். தூய மனமும் இன்சொல்லும் சேர்ந்தால் ஒழிய இக்காரியத்தைச் செய்தல் இயலாது. முள்ளும் சக்கையும் இல்லா பலாப்பழமாக இருப்பவரே இக்காரியத்தைச் செய்து முடிக்க முடியும்.

அதியமானுக்கு இப்படி ஒருவர் தேவைப்பட்ட பொழுது ஒருவர் வந்து சேர்ந்தார். அவர்தாம் நாம் கேள்விப்பட்டுள்ள ஔவையார். பிற்காலத்து ஔவையாரினும் வேறுபட்டவர் அவர். அவர் அக்காலத் தமிழ் நாடு முழுவதையும் பன்முறை சுற்றியவர். அவர் அதியனிடம் வந்து சேர்ந்தவுடன் தன் கவலையை விட்டான் அதியன். தொண்டைமானிடம் தூதாக ஔவையாரை அனுப்ப முடிவு செய்தான் அதியன்.

இனிய சொற்களைக் கூறும் பண்பும், அந்தச் சொற்களை நகைச் சுவையோடு சொல்லிக் காரியம் சாதிக்கும் இயல்பும் ஔவையாரிடம் இருந்தன. தொண்டைமானிடம் தூதாகச் சென்றார் அவர். ஔவையாருக்குத் தனது படைக்கலச் சாலையை மிகவும் பெருமையுடன் காட்டினான் தொண்டைமான். முழுவதையும் பார்த்து மீண்ட பிறகு, ஔவையார், 'அடடா! உன்னுடைய படைக்கலச் சாலையில் ஆயுதங்கள் அனைத்தும் நல்ல பளபளப்புடன் நெய் பூசப் பெற்று, மயில் பீலி அணிந்து, காவல் பொருந்திய இடத்தில் உள்ளன! அங்கே (அதியனிடம்) எல்லா ஆயுதங்களும் பகைவரைக் குத்தி, நுனி வளைந்து கொல்லன் உலைப் பட்டறையில் உள்ளன!' என்னும் கருத்தமைய,

"இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டிக்
கண்டிரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து
கடி உடை வியன் நகர் அவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்திக் கொடு நுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ!"

என்னும் இவ்வொரு பாடலைப் பாடியதன் மூலம் ஔவையார், குறள் கூறும் வாழ்வைக் காட்டினார்.

தூதுவர் இலக்கணம் கூற வந்த குறள், 'சொல்ல வேண்டியவற்றை விடாது தொகுத்துச் சொல்லி, பொருத்தமில்லாது குற்றம் உண்டாக்கும் செய்திகளைக் கூறாமல் விடுத்து, சொல்லும் முறையில் சிரிக்கும்படி கூறித் தன் தலைவனுக்கு நன்மை பயப்பவனே தூதுவன்,' என்ற கருத்தில்,

" தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச் சொல்லி
நன்றி பயப்பதாம் தூது ''

என்று பாடுகிறது.

தம் தலைவனாகிய அதியமானுக்கு நன்மை செய்து, அவன் மதிப்பைக் குறைக்கும் சொல் ஒன்றைக் கூடக் கூறாமல், அவன் ஆயுதங்கள் கொல்லன் பட்டறையில் உள்ளன என்று சிரிப்பு உண்டாகும்படியும் கூறினார். அம்மட்டோ! கொல்லன் பட்டறையைக் கூறினமையின், ஓயாது போர் செய்யும் வீரன் அதியன் என்பதையும் எடுத்துக் கூறிவிட்டார். இவ்வளவையும் சொல்வதை விடப் பெரியது, தொண்டைமான் சினம் கொள்ளாத முறையில் இனிமையாக இவற்றைக் கூறியதுதான்.

# 9. இதுதான் நட்பு!

'என்ன ஐயா! உங்கள் நண்பரைச் சில நாளாகக் காணவில்லையே?' இந்த முறையில் கேள்வி கேட்பவர் பலர். ஒரு சிலர் 'நண்பரா? என் நண்பரா? யாரைச் சொல்கின்றீர்கள்?' என்று எதிர் வினா எழுப்புவர். இன்னார் என்று குறிப்பிடுகின்றார் கேள்வியை முதலில் கேட்டவர். அதன் பிறகு இரண்டாமவர் கூறுவதைக் கேட்டால் வியப்பாக இருக்கும். 'அவரையா கூறுகின்றீர்கள்? நண்பராவது மண்ணாங்கட்டியாவது! பைசாவுக்குப் பிரயோசனமில்லாத ஆள் அவர்! சமயத்தில் உதவாத அவரை நண்பர் என்று எவ்வாறு கூறுவது? என்று சிலர் கூறுவர்.

இம்மாதிரி விடைகளிலிருந்து தெரிந்து கொள்ளும் உண்மை ஒன்று உண்டு. நண்பர் என்பவர், பைசா (நயாபைசா) கொடுத்து உதவ வேண்டும் என்றும், சமயத்தில் உதவ வேண்டும் என்றும் உலகம் எதிர்பார்க்கின்றது. மிகவும் நெருங்கிப் பழகும் இருவர்கூட இம்மாதிரி சோதனை ஏற்படும் பொழுது பிரிந்து விடக் காண்கின்றோம். இது சரியா? முற்றிலும் சரி என்று கூறிவிட முடியாது. சரியன்று என்றும் கூற முடியாது. உண்மை நண்பர் யார்? வேண்டும்பொழுது பைசாக் கொடுத்தும் ஏனைய உதவிகள் செய்தும் உறுதுணையாக இருப்பவர்கள்தாம். நண்பர்களுக்கு இலக்கணம் கூற

வந்த பழந்தமிழ் நூலாகிய 'இறையனார் களவியல் உரை" சாவின் சாதல்; நோவின் நோதல்; பிரிவு நனி. இரங்கல்; நன்பொருள் கொடுத்தல்' என்றெல்லாம் கூறிச், செல்கிறது; அதாவது, நண்பர்களுக்குச் சாவு வந்த விடத்தில் தானும் சாதலும், நோய்வந்தவிடத்துத் தானும் வருந்துதலும், பிரிவை வெறுத்தலும், வேண்டும்பொழுது பொருள் கொடுத்து உதவி செய்தலும் நண்பர்கட்கு இலக்கணம் என்று கூறுகின்றது.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நுழைந்து பார்த்துத் தம்முடைய சிறந்த அனுபவத்தில் கண்ட உண்மைகளை நம் முன்னோர் கூறியிருப்பது போலவே 'நட்பு' என்ற துறையிலும் விரிவாகக் கூறி உள்ளனர். அதிலும் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த குறள், நட்புப்பற்றி ஐந்து அதிகாரங்கள் பேசுகின்றது என்றால் அதன் பெருமையைக் கூறவும் வேண்டுமா! வார்த்தையை அளந்து பேசும் குறள், பயனில்லாத சொல்லைப் பேசவே கூடாது என்று நமக்கெல்லாம் கட்டளை இட்ட அதே குறள், நட்பைப்பற்றி ஐந்து அதிகாரம் பேசுகின்றது என்றால், வாழ்க்கையில் நட்பு எத்தனை இன்றியமை யாதது என்று கருதி இருத்தல் வேண்டும்? நட்பு, நட்பாராய்தல், நட்பில் பழமை பாராட்டல் என்ற மூன்று அதிகார மூலம் நட்பின் சிறப்பைக் கூறிவிட்டு, தீ நட்பு, கூடா நட்பு என்று இரண்டு அதிகாரங்களால் நட்புச் சரியில்லையானால் விளையும் தீமைபற்றியும் கூறுகின்றது.

உலகில் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் ஒப்புயர்வற்ற நண்பர் வாழ்ந்து வந்துள்ளனர் ஆனால், இவர்கள் தொகை மிகவும் குறைவானதுதான். அதனாலேதான் இவர்கள் இலட்சியத்தன்மை பெற்றவர் களாகிவிடுகின்றனர். உலக இலக்கியங்களிலும் ஆசிரியர்கள் இத்தகைய நட்பைப் படம் பிடித்துக் காட்டியுள்ளனர் மேனாட்டு இலக்கியத்தில் இடம் பெற்ற 'இரு நகரங்களின் கதை (*A Tale of Two Cities*) என்ற

நூலில் வரும் 'சிட்னி கார்ட்டன்' (Sidney Carton) இத்தகைய நட்புக்கு ஓர் எடுத்துக்காட்டாவர்.

தமிழ் இலக்கியத்தில் இம்மாதிரிப் பாத்திரங்களைப் படைத்துக் காட்டிய பெருமை பலருக்கும் உண்டு. இலக்கியத்தில் கற்பனையாகத் தோன்றும் நண்பர்களை யல்லாமல் உண்மையாகவே வாழ்ந்த பெருமக்களும் உண்டு. நட்புக்கு வள்ளுவர் கூறிய இலக்கணம் அனைத்தும் பொருந்த வாழ்ந்த இரண்டு பெருமக்களைப் பெற்ற பெருமை உடையது இத்தமிழ் நாடு சாதாரண மாக நண்பர்கள் என்பவர்கள் ஒத்த குடியும், செல்வ நிலையும், பண்பாடும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும் என்று கூறுவர். ஆனால், ஓர் அரசனும் ஆண்டியும் மிக நெருங்கிய நண்பர்களாய் இருந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கின்றோமா?

கோப்பெருஞ்சோழன் என்பவன் சோழ வள நாட்டை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஆட்சி செய்த சோழ மன்னர் நற்பண்புகள் பலவும் நிறைந்தவன் சோழன். நல்ல குணம் உடையவனாதலின் வீரம் எப்படியோ என்று ஐயுற வேண்டா. வீரத்திலும் சோழன் யாருக்கும் குறைந்தவன் அல்லன் அவனுடைய சிறந்த குணங்கள் மலையில் இட்ட விளக்கைப் போலப் பிற நாடுகளிலும் ஒளி விடத் தொடங்கிற்று அவன் காலத்தில் மதுரையில் 'பிசிராந்தையார்' என்ற புலவர் ஒருவர் வாழ்ந்தார் அவர் சிறந்த புலவராயினும் வறுமை மிக்கவர்.

சிறந்த பண்பு உடையவர்களைப் பாடுவது புலவர் கட்கு வழக்கம் கோப்பெருஞ்சோழனுடைய நற்பண்பு பிசிராந்தையாரின் காதுகட்கும் எட்டியது. எனவே, அவனுடைய குணங்களில் ஈடுபட்ட அவர், அவன் மாட்டு அன்பு கொண்டார். ஒருவரிடம் அன்பு ஏற்பட்டு நட்புச் செய்கின்றோம என்றால், இரண்டு காரணங்

களால் அது ஏற்படும். முதலாவது காரணம், அவர் நற்பண்புகள் உடையவர், யார் மாட்டும் இரக்கமுடையவர் என்பதால் ஏற்படுவது. இக்காரணத்தால் ஏற்படும் நட்பில் இரண்டுபேரும் இலாப நஷ்டக் கணக்குப் பாராதவர். தூய அன்பு ஒன்றைத் தவிர வேறு எந்தப் பயனையும் கருதமாட்டார் இருவரும். இத்தகைய அன்பைத்தான் காதல் என்று கூறுகின்றோம். இரண்டு ஆடவர்களுக்கு இடையே இது ஏற்படின் நட்பு என்றும் ஆடவனுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்பட்டால் காதல் என்றும் கூறுகின்றோம். எந்தப் பெயரிட்டு வழங்கினாலும் தூய அன்பு தவிர வேறு அடிப்படை இங்கு ஒன்றும் இல்லை.

இரண்டாவது, ஒரு காரணத்தால் நட்புச் செய்பவர்களும் உண்டு. இதன் அடிப்படை ரூபாய் அணா பைசா தவிர, வேறு ஒன்றும் இல்லை. பையில் கனம் இருப்பவருடன் 'ஓகோ' என்று நண்பர் குழாம் நிறைந்துவிடும். அவர் பை காலியானவுடன் 'அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவை' போல இந் நண்பர் குழாமும் மறைந்துவிடும்.

பிசிராந்தையார்— கோப்பெருஞ்சோழன் நட்பு முற்றிலும் முதல் வகையையே சேர்ந்தது. இதற்கு ஆதாரம் தேடி அதிக தூரம் செல்ல வேண்டா. இவர் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டதே இல்லை; ஒருவரைப் பற்றி மற்றவர் கேள்விப்பட்ட அளவிலேயே இருந்தனர். அவ்வாறு இருந்தும் ஆழ்ந்த நட்புக் கொண்டனர்.

அவ்வாறானால் இவர்கள் நட்பும் மேற்போக்காக இருந்திருக்கும் போலும் என்று நினைப்பது தவறு. ஓயாமல் ஒவ்வொருவரும் மற்றவரைப்பற்றியே நினைந்து கொண்டிருந்தனர். எவ்வளவு தூரம் ஒருவர் மற்றவரைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார் என்பதற்கு ஒரே எடுத்துக்காட்டுப் போதுமானது. பிசிராந்தையாரை யாரேனும் 'நீர் யார்?' என்று கேட்டால், 'யான் பேதைச்

'சோழன்' என்று விடை கூறினார். சோழனும் தன்னைப் பிசிராந்தை என்று கூறத் தொடங்கி விட்டான்.

இந்நிலையில் சோழனுக்கு ஒரு தீமை நிகழ்ந்தது. அவன் பிள்ளைகளே படை சேர்த்துக்கொண்டு தந்தையின் மேல் படை எடுத்தார்கள். மக்களின் மமதையைப் போக்கச் சீறி எழுந்தான் சோழன். புல்லூர் எயிற்றியனார் என்ற புலவர் அவனைத் தடுத்தார். 'அவர்கள் அறியாமை யால் போர் தொடுத்தால் நீயும் புறப்படலாமா? அவர்கள் தோற்றுவிட்டால் இந்த அரசை யாருக்குத் தரப் போகிறாய்?' என்று அவர் எடுத்துக் கூறினவுடன் சோழன் மனம் மாறிவிட்டான்; ஆட்சிப் பீடத்தை விட்டுக் கொடுத்துவிட்டு, வடக்கிருக்கப் புறப்பட்டு விட்டான். வாழ்வில் வெறுப்புற்றவர் வடக்கு முகமாக அமர்ந்து ஊண் உறக்கத்தை நீத்துக் கொஞ்சங் கொஞ்சமாக உயிரை விடுவர். இதையே 'வடக்கிருத்தல்' என்று கூறினர் நம்மவர்.

சோழன் வடக்கிருக்க அமர்ந்தவுடன் தனக்குப் பக்கத்தே ஓர் இடம் விட்டு வைக்கக் கூறினான். உடன் இருந்த புலவர்களும் மற்றையோரும், 'யாருக்கு?' என்று கேட்டார்கள். அரசன், 'என் உயிர்த்தோழர் பிசிராந்தை யாருக்கு' என்றான். 'நீ வடக்கிருப்பதை உன் நண்பர் அறியமாட்டார். உறையூரில் இருக்கும் உன் நிலையை மதுரையில் இருக்கும் உன் நண்பர் எவ்வாறு அறிய முடியும்?' என்று கேட்டார்கள். அதற்குச் சோழன், 'செல்வக் காலை நிற்பினும், அல்லற் காலை நில்லலன் மன்னே,' என்று கூறினான். அதாவது 'யான் நன்றாகச் செல்வத்துடன் வாழ்ந்த காலத்தில் அவர் வரவில்லை என்பது உண்மைதான். ஆனால், உண்மை நண்பராகிய அவர், யான் துன்பப்படும் இப்பொழுது வாராமல் இருக்க மாட்டார்,' என்ற பொருளில் அரசன் விடை கூறினான்.

என்ன அதிசயம்! பிசிராந்தையார், சோழனுடைய எண்ணம் பழுதாகாமல் வந்துவிட்டார்; சோழனுடன்

தாமும் வடக்கிருந்து உயிரை விட்டுவிட்டார் அந்த ஒப்பற்ற நண்பர். இத்தகைய நட்பைக் கேள்விப்பட்டுத் தான் போலும் குறள்,

" புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும் "

என்று கூறிற்று! 'உண்மை நட்புக்கு எதிர் நின்று பழக வேண்டும் என்பதில்லை. உள்ளத்து உணர்வே நட்பை உண்டாக்கும்,' என்ற இந்தக் குறள் கண்ட வாழ்வை வாழ்ந்து காட்டிய பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும், அணுக்குண்டு சகாப்தத்திற்கு நல்ல வழி காட்டிகள் அல்லரோ?

# 10. நுணங்கிய கேள்வி

"ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை," என்பது இந்நாட்டில் வழங்கும் பழமொழி. அதாவது, நல்ல சுவையுடைய சர்க்கரை அகப்படாத ஊரிலுள்ளவர்கள், ஓரளவு சுவையுடைய இலுப்பைப் பூவைத் தின்று விட்டு, அதைவிடச் சுவையுடைய வேறு பொருள் உலகில் இருக்க முடியாது என்று முடிவு செய்து கொள்வார்களாம். அதே போலக் கற்றறிந்தவர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கின்ற நம்முடைய நாட்டில், கற்றவர் கர்வம் கொள்ளுதல் இயலபு என்று சிலர் நினைக்கலாம்.

கல்வியை நம்மவர்கள் இரண்டாகப் பிரித்துள்ளார்கள். ஏட்டுக் கல்வி என்றும், அனுபவக் கல்வி என்றும், அது இரண்டு வகைப்படும். முழுவதும் ஏட்டுக் கல்வியைக் கற்ற ஒருவனும், முழுவதும் அனுபவக் கல்வியே பெற்ற ஒருவனும் முற்றிலும் கற்றவர்களாகக் கருதப்பட மாட்டார்கள். இவை இரண்டு கல்வியும் சேரும் பொழுது தான் கல்வி முழுத் தன்மையை அடைகிறது. இவ்விரண்டையும் சேர்த்துப் பொதுவாக வழங்கப்படும் கல்வி என்பதுகூட இரண்டு வகையில் கற்கப்படும். முதலது நூலைத் தானே கற்றல்; இரண்டாவது, கற்றறிந்தவர்கள் கூறுவதைச் செவி மூலம் கேட்டு அறிந்து கொள்ளுதல்.

ஒருவன் ஏட்டைத் தானே கற்று அறிவு பெறுவதைக் காட்டிலும் கேள்வி ஞானத்தால் பெறும் அறிவைப் பெரிதும் போற்றினார்கள். ஏனென்றால், ஒருவன் குறள் போன்ற ஒரு நூலில் எத்தனை ஆண்டுகள் உழைத்தாலும் அதனை முற்றக் கற்றுவிட முடியாது. மேலும் எத்தனையோ அலுவல்களுக்கிடையே, எத்தனையோ வகை நூல்களின் இடையே குறளையும் ஒரு நூலாகவே கற்க முடியும். ஆனால், ஒருசிலர் பொதுவான கல்வியை ஓரளவு பெற்றுவிட்டுப் பிறகு குறள் போன்ற ஒரு நூலை முற்றிலும் கற்பதிலேயே தம்முடைய காலம் முழுவதையும் செலவழிக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். அத்தகைய ஒருவர் குறளைப் பற்றி எடுத்துக் கூறும் பொழுது பல காலமாகத் தாம் அதில் உழைத்துக் கண்ட பேருண்மைகளையெல்லாம் மிகச் சுருங்கிய கால அளவில், மிக எளிதாக நாம் அறிந்து கொள்ளுமாறு தந்துவிடுவார் அல்லரோ? எவ்வளவோ காலம் நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டிய ஒன்றைச் சுலபமாக ஒருவர் நம்முடைய கையில் கொடுத்து விட்டால், எவ்வளவு எளிதாக அதனை நாம் பயன்படுத்தலாம்? இதனாலேதான் நம்முடைய நாட்டில் "கற்றலின் கேட்டலே நன்று," என்ற முதுமொழியும் தோன்றியது.

பல்வேறு வகைப்பட்ட கல்வியும் விஞ்ஞான வளர்ச்சியும் மிகுதிப்பட்டுக்கொண்டே செல்லுகின்ற இந்த நாட்களில், இம் முதுமொழியின் உண்மையை நாம் நன்கு அறிய முடியும். பழைய காலத்தில் மருத்துவர்கள் என்றால் ஏறத்தாழ எல்லா வகையான நோய்களுக்கும் மருந்து கொடுப்பவர்களாகவே இருப்பார்கள். ஆனால், இன்றோ, எதை எடுத்துக்கொண்டாலும் பிரத்தியேக அறிவு பெற்றவர்கள் (ஸ்பெஷலிஸ்ட்ஸ்) காது, கண் முதலிய ஒவ்வோர் உறுப்பையும் கவனித்துக் கொள்பவர் களாக இருக்கக் காண்கிறோம். எனவே, கல்வியின் வளர்ச்சி பெருகிக்கொண்டே போகின்ற இதுபோன்ற

காலங்களில் ஒருவன் எல்லாவற்றையும் தானே படித்து அறிந்து கொள்வது என்பது இயலாத காரியம். கேள்வி ஞானத்தால் அறிவைப் பெருக்கிக்கொள்ளுதல் மிகவும் தேவை.

இதன் இன்றியமையாமையைக் கருதியே வள்ளுவர் 'கேள்வி' என ஓர் அதிகாரமே வகுத்துள்ளார். தானாகவே எல்லா நூல்களையும் படித்து அறிவு பெற்றவனுக்கும், பிறரிடம் கேள்வி ஞானத்தால் அறிவு பெற்றவனுக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு.

பெரிய நூல் ஒன்றைத் தானே கற்ற ஒருவன், தன்னுடைய கல்வியின் பெருக்கத்தை நினைந்து கர்வம் கொள்ளுதல் இயல்பு. ஏனென்றால், அவனைச் சுற்றியுள்ளவர்கள் அந்நூலைப்பற்றி ஒன்றும் அறியாமலிருக்கும் பொழுது, அவன் மட்டும் பொறுமையோடு அதனைக் கற்று முடித்துவிட்டான் ஆதலின், சுற்றியிருப்பவர்களோடு தன்னை ஒப்பிட்டுக் கர்வம் கொள்ளுகிறான். ஆனால், பிறரிடம் அதே நூலைக் கேட்டுக் கேள்வி ஞானத்தால் அறிபவன், அந்நூலை அறிந்துகொள்வதோடு அதனைச் சொல்லித் தருபவருடைய அறிவின் விசாலத்தையும் அறிந்து கொள்ளுகிறான். இங்ஙனம் பல பேரிடம் பெரிய விஷயங்களைக் கேட்கக் கேட்க ஒருவனுடைய அறிவு விசாலம் அடைவதோடு மற்றவருடைய அறிவு விசாலத்தை அவன் அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இப்படிச் சொன்னவுடன் அனைவருமே கேள்வியின் மூலம் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளலாம் போலிருக்கிறதே என்று நினைந்துவிட வேண்டா. பெரியவர் ஒருவர் சொற்பொழிவு செய்வதை ஆயிரக்கணக்கான மக்கள் சென்று அப்படியே கேட்டுவிட்டு வருகிறார்கள். அப்படி வருகிறவர்களிடம் 'பெரியவர் என்ன பேசினார்?' என்று கேட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும்.

நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் 'வெளுத்து வாங்கினார்! மழை போலப் பொழிந்தார்! பிச்சு வாங்கி விட்டார்!' என்றெல்லாம் சொல்வார்களே தவிர, ''என்னையா சொன்னார்? அதைக் கொஞ்சம் சுருக்கித் தான் சொல்லுங்களேன்?'' என்று கேட்டால், ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழிப்பார்கள். இதிலிருந்து ஓர் உண்மை புலப்படும். ஒரு நூலைக் கற்பது எவ்வளவு கடினமோ, அவ்வளவைவிடக் கடினமானது ஒருவர் சொல்லுவதைக் கேட்டு அதனை விளங்கிக்கொள்வது என்பது.

பிறர் சொல்லுகின்றவற்றைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களை நுண்மையான கேள்வி ஞானம் உடைய வர்கள் என்று குறள் சொல்கிறது. நுண்மை என்பது மிகச் சிறிய அல்லது கூர்மையான பொருளைக் குறிக்கும். எனவே, கூர்மையான கேள்வி ஞானத்தை நுண்மையான கேள்வி ஞானம் என்று சொல்லலாம். அதாவது, எவ்வளவு கடினமானவற்றைக் கேட்டாலும் புரிந்து கொள்ளக் கூடிய சத்தியே ஆகும் இது. இத்தகைய கேள்வி ஞானம் உடையவர்கள் ஒரு நாளும் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்ளும் காரியத்தைச் செய்யமாட்டார்கள். அது மட்டுமன்றி, எந்தச் சந்தர்ப்பத்திலும் பணிவான மொழிகளையே பேசுவார்கள் என்றும் குறள் கூறுகின்றது. ''நிறை குடம் நீர் தளும்பாது,'' என்ற பழமொழியும் இதே கருத்தைத்தான் கூறுகின்றது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்று வழங்கப்படும் நம்பியாரூரர், சிவபெருமானிடம் நண்பராய்ப் பழகி, நண்பருக்குரிய உரிமையோடு வாழ்ந்து வந்தார். சைவர்கள் போற்றுகின்ற நாயன்மார் நால்வருள் நம்பியாரூரரும் ஒருவர். திருநாவலூரிலே பிறந்த அவரை அந்தப் பிராந்தியத்தை ஆட்சி செய்த மன்னராகிய நரசிங்க முனையரையர் என்னும் அரசர், சுவீகாரப் பிள்ளையாக வளர்த்து வந்தார். எல்லையில்லாத கல்விக் கடலைத் தம்

பேரறிவால் நீந்திக் கரை கண்டவர் ஆரூரர் என்று சொல்லல் மிகையாகாது. நம்பியாரூரருடைய தேவாரங் களைப் படிக்கின்றவர்கள் அவருடைய கல்விப் பெருக்கத்தை ஒருவாறு அறிந்து கொள்ள முடியும். அப்பெரியவர்கள் இறைவனிடம் எவ்வளவு அன்பு கொண்டு இருப்பினும், அவனுடைய திருவருளை எவ்வளவு பெற்றிருப்பினும், தம்முடைய கல்வி வளர்ச்சியைப் பெரிதும் போற்றியிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய பாடல்களைப் படித்தவர்கள் நன்கு அறிந்து கொள்ள முடியும்.

சுந்தரமூர்த்திகள் திருக்குறளில் மிக நிறைந்த பயிற்சி உடையவர் என்பதை அவருடைய தேவாரம் நன்கு எடுத்துக்காட்டுகின்றது. திருநெல்வாயில் என்ற ஊரில், இறைவன் மேல் சுந்தரமூர்த்திகள் பாடிய பத்துப் பாடல் களில் திருக்குறளின் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தை அப்படியே எடுத்தாண்டிருக்கிறார்; திருக்குறள் கருத்துக்களை மட்டுமல்லாமல், அந்தச் சொற்களையும் அப்படியே ஆட்சி செய்திருக்கிறார். குறளில் இவ்வளவு பயிற்சியுடைய சுந்தரமூர்த்திகள், தம்முடைய குறட் பயிற்சியை வெற்று நூலளவில் மட்டும் காட்டிவிடாமல் வாழ்க்கையிலும் மேற்கொண்டுள்ளார் என்பது அறிந்து மகிழ்வதற்குரியது. அவருடைய வாழ்வு முழுவதிலும் பல இடங்களில் குறள் கண்ட வாழ்வை அவர் மேற் கொண்டார் என்பதை நாம் அறிய முடியும். உதாரண மாக ஒன்று காணலாம்.

சுந்தரமூர்த்திகள் ஊர் ஊராகச் சென்று இறைவனைப் பாடிக்கொண்டு வரும் பழக்கமுடையவர். பண்ணுருட்டிக் குப் பக்கத்திலுள்ள திருவீரட்டானம் என்னும் ஊருக்கு ஒரு முறை சென்றார். சுந்தரமூர்த்திகளுக்கு முற்பட்டவ ராகிய திருநாவுக்கரசர், திருவீரட்டானத்தில் தங்கித் தம்முடைய கையால் அக்கோயில் புல் செதுக்கும்

பணியை மேற்கொண்டிருந்தார். அதனை அறிந்த சுந்தரமூர்த்திகள் 'திருநாவுக்கரசரைப் போன்ற பெரியவர் கையினால் தொண்டு செய்த ஊரில், நான் காலால் நடந்து செல்வது முறை அன்று,'' என்று கருதி, அவ்வூரின் பக்கத்தே உள்ள சித்தவடமடம் என்ற இடத்தில் அன்றிரவு தங்கிவிட்டார்.

நடு இரவு நேரத்தில் சுந்தரமூர்த்திகளின் தலைமேல் ஒருவருடைய கால் பட்டது. சுந்தரர் எழுந்து, 'ஐயா, உங்களுடைய கால் என் தலையின் மேல் படுகிறது,' என்று கூறினார். அதற்கு அந்தப் பெரியவர், 'வயதாகி விட்ட காரணத்தால் திக்குத் திசை தெரியாமல் உன் தலையின் மேல் மிதித்துவிட்டேன்!' என்று கூறினார். நம்பியாரூரர் வேறோர் இடத்தில் தலையை வைத்துப் படுத்தார். சற்று நேரங்கழித்து அந்த இடத்திலும் கிழவருடைய கால் பட்டது. மறுபடியும் சுந்தரர் கேட்க, கிழவர் அதே விடையைத் திருப்பிக் கூறினார். ஒரு சிறிதும் அதுபற்றி வருந்தாத சுந்தரர், மற்றோரிடத்தில் சென்று படுத்துக் கொண்டார். ஆனால், கிழவர் அவரை விட்டபாடில்லை; தாம் படுத்திருந்த இடத்திலிருந்தபடியே கால்களைச் சுந்தரர் தலையின்மேல் நீட்டினார் கிழவர். இவ்வாறு செய்தவர் யார் என்று நினைக்கிறீர்கள்? ''பாதாளம் ஏழினுக்கு அப்பால் திருவடிகளை'' உடைய இறைவனேதான்! ஆனால், சுந்தரமூர்த்திக்கு இங்ஙனம் தம்மை உதைத்தவர் யார் என்பது தெரியாது.

வசதி மிக்க குடும்பத்திலே பிறந்து, அரசருடைய செல்வத்திலே வளர்ந்து, திருமணம் செய்யப்படுகின்ற நாளிலே இறையவனுடைய அருளால் அத்திருமணம் தடைபட்டுப் போக, ஊர் ஊராகச் சென்று இறைவனை வணங்கி வருகின்றார் நம்பியாரூரர். அப்பொழுது 'மேற்கொண்ட திருமணக் கோலத்தோடேயே எப்பொழுதும் இருப்பாயாக!' என்று இறைவனால் கட்டளையிடப்பட்டு

அடியார்கள் புடைசூழ இப்பொழுது சித்தவட மடத்தில் தங்கியுள்ளார். உதைபட்டவராகிய அவர் நல்ல இளமை யுடையவர். ஆனால், உதைத்தவரோ, தொண்டு கிழவர்! உதைத்ததும் ஒரு முறையன்று; பல முறையாகும். இந் நிலையில் நம்பியாரூரர் அந்தக் கிழவரை அடித்திருந்தாற் கூட நாம் தவறு என்று சொல்வதற்கு இல்லை. ஆனால், நிறைந்த நுண்மையான கேள்வி ஞானத்தை நிரம்ப உடையவராகிய சுந்தரமூர்த்தி, 'ஐயா, இங்கு இப்படிப் பல முறையும் என்னை மிதித்த நீர் யார்?' என்றுதான் கேட்டாராம்.

எங்கே சென்று படுத்தாலும் அங்கேயெல்லாம் காலை நீட்டிய ஒரு மனிதனை இன்னான் என்று தெரிந்துகொள்ள விரும்பினாரே தவிர, சுந்தரமூர்த்திக்கு ஒரு சிறிதும் கோபம் வரவில்லை. கோபம் இல்லாவிட்டாற்கூட வார்த்தையிலாவது கோபம் தொனிக்குமாறு 'நீ யார்?' என்று கேட்டிருக்கலாமே! அது கூட இல்லையாம்!

'என்னைப் பல காலம் மிதித்த நீர் யார்?' என்ற கேள்வி எவ்வளவு வணக்கத்துடன் வெளி வருகிறது! இவ்வாறு வணக்கமான முறையில் பேசும் இயல்பைச் சுந்தமூர்த்திகள் எங்ஙனம் பெற்றார்? ஒரு சிறிதும் சினம் கொள்ளாமல் மிக வணக்கமான முறையில் பேசுவதற்கு யாரால் முடியும்? 'மிக நுணுக்கமான கேள்வி ஞானத்தை உடையவர்களை அல்லாமல் பிறர் வணக்கமான வாயினை உடையவர் ஆதல் அரிது,' என்ற பொருளில் குறள் பாடுகிறது.

"நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது"

ஏனென்றால், நுணுக்கமான கேள்வி ஞானத்தை உடையவர் தம்முடைய சிறுமையையும், மற்றவர்கள்

பெருமையையும் நன்கு அறிந்திருப்பர். ஆதலால், வணங்கிய வாயினை உடையவராய் இருப்பராம். பல காலம் குறளைப் பயின்று அதில் கூறப்பெற்ற அரிய உண்மைகளையெல்லாம் அறிந்த அளவோடு நிறுத்திக் கொள்ளாமல், வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்ட வேண்டும் என்று நினைத்த சுந்தரமூர்த்திகள் போன்ற பெருமக்களுடைய வாழ்க்கை பற்பல துறைகளில் குறள் கண்ட வாழ்வை மேற்கொண்டுள்ளது என்பது நன்கு விளங்கும்.

# 11. நன்றி நினைத்தல்

இந்தப் பெரிய உலகில் என்று மனிதன் வாழத் தொடங்கினானோ, அன்றிலிருந்தே பிறருடைய உதவியை நாடித்தான் வாழ்ந்து வருகிறான். எவ்வளவு உயர்ந்த நிலையில் உள்ளவனும் வசதியுடன் வாழ்பவனுங்கூட பிறருடைய உதவி இன்றி வாழ முடியாது. காலையில் எழுந்தவுடன் பல் தேய்ப்பது, குளிப்பது, காலை உணவு உண்பது முதல் இரவு படுக்கச் செல்லும் முன் குடிக்கின்ற இனிய பால் வரை அனைத்தும் பிறருடைய உதவியின்றிக் கிடைப்பது இல்லை.

மனைவி உணவு சமைத்துப் போடுதலும், வேலையாள் நமக்கு உரிய தொண்டுகளைச் செய்தலும் கடமையின்பாற் படும். அப்படியிருக்க, இக்காரியங்களைச் செய்வதற்காக நாம் ஏன் அவர்களிடம் நன்றி பாராட்ட வேண்டும் என்று நினைக்கலாம். உண்மையைக் கூறுமிடத்து, கடமையைச் செய்கின்றவர்கள் எந்த மன நிலையில் செய்கின்றார்கள் என்பது பற்றிக் கவலையில்லை. ஆனால் அந்தக் கடமையின் பயனைப் பெற்றுக்கொண்டு அனுபவிப்பவர்கள் மன நிலையைப் பற்றித்தான் இங்குக் குறிப்பிடுகின்றோம். கணவனுக்குச் சமைத்துப் போடுவது மனைவியின் கடமை தான் என்றாலும், கடமை என்று மட்டும் நினைத்துக் கொண்டு அவள் சமைப்பது இல்லை! அப்படிச் சமைத்துப் போடுவதாக இருந்தால், மனைவி படைக்கின்ற உணவுக்

கும், உணவு விடுதியில் கிடைக்கும் உணவுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை! ஆனால், உணவு விடுதிச் சாப்பாட்டைவிட வீட்டு உணவு உடம்புக்கு ஏற்றது என்று ஏன் சொல்கிறோம்? பல பேருக்குச் சமைக்கின்ற உணவு விடுதியில் செய்யப்படும் உணவைக் காட்டிலும், சிலருக்குச் சமைக்கின்ற வீட்டு உணவு ருசி உடையதாக இருக்கும் என்பதற்காகவா? உண்மையை நோக்குமிடத்து வீட்டில் செய்யப்படும் உணவில் உணவுப் பொருள்களின் சேர்க்கை மட்டும் இல்லை. உணவைச் சித்தம் செய்பவர்கள், அன்பு என்ற ஒன்றைக் கலந்தே உணவைத் தயாரிக்கிறார்கள். அதனாலேதான் வீட்டு உணவு உயர்ந்ததாய் இருக்கிறது.

கணவன் மேல் கொண்ட அன்பு மனைவியின் மனத்தில் இருப்பதனால் அந்த உணவு சுவையுடையதாய் இருக்கிறது. அதனை உண்ணுகின்ற கணவன், மனைவி செய்த உணவை உண்ணும்பொழுது அவள் அன்பையும் நினைந்து பார்ப்பானேயானால், அவனையும் அறியாமல் அவன் மனத்தில் நன்றிப் பெருக்கம் ஏற்படும். உலகத்தில் ஒவ்வொருவர் செய்கின்ற உதவியையும் இப்படியே நினைந்து பார்த்தால், ஒவ்வொருவரும் மற்றவர்க்கு நன்றி பாராட்ட வேண்டுவது கடமை என்பது நன்கு விளங்கும்.

இப்படியிருந்தும், பெரும்பாலான மக்கள் ஏன் நன்றி பாராட்டுவதில்லை? இதற்கு விடை காண்பது மிகவும் எளிது. ஒவ்வொரு மனிதனும் பிறருடைய உபகாரத்தைப் பெறும்பொழுது, அவர்கள் தனக்கு உபகாரம் செய்ய வேண்டுவது கடமை என்றும், தான் அதனை ஏற்றுக் கொள்வது நியாயம் என்றும் நினைக்கிறான்; ஏதோ தனக்கு உபகாரம் செய்வது செய்கிறவர்களுடைய பாக்கியம் என்றும், தான் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்கள் வருத்தப்படுவார்கள் என்றும் நினைக்கின்றான். இதனாலேதான் நன்றிப் பெருக்கம் அவனிடம் ஏற்படுவ தில்லை.

மனிதன் தான் பெறும் உதவிகளுக்கு நன்றி பாராட்ட வேண்டுவது மிக மிக அவசியம் என்ற உண்மையை நம்முடைய நாட்டில் பெரியவர்கள் அனைவரும் மிக அழகாகவும், விரிவாகவும், அழுத்தமாகவும் கூறியுள்ளார்கள். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை," என்று பிறந்த பழமொழி நன்றி நினைத்தலின் அவசியத்தை நன்கு வலியுறுத்துகிறது. 'எவ்வளவு பெரிய உதவியைப் பெற்றால் நன்றி பாராட்ட வேண்டும்? மிகச் சிறிய உதவிக்குக்கூட நன்றி பாராட்ட வேண்டுமா?' என்னும் சந்தேகம் யாருடைய மனத்திலாவது தோன்றப் போகிறதே என்று நினைத்துத்தான் மிகச் சாதாரணமான— எங்கும் எப்பொழுதும் கிடைக்கக்கூடிய—உப்பைக் கொடுத்தவர்களைக்கூட, சாகின்ற வரையில் ஒருவன் நினைந்து பார்க்க வேண்டும் என்று நம்மவர்கள் கூறினார்கள்.

நன்றி மறந்தவர்கள் மிகக் கொடியவர்கள் என்றும், அவர்கட்கு நரகந்தான் கிடைக்கும் என்றும் குறள் போன்ற அறநூல்கள் வலியுறுத்துகின்றன. நம்முடைய நாட்டிலே மட்டுமன்றி, ஏனைய நாடுகளிலும் இவ்வாறே நினைத்தார்கள் என்பதை ஷேக்ஸ்பியருடைய "நன்றி கொன்ற தன்மை, துரோகிகளின் கொடிய ஆயுதங்களைவிடக் கொடுமையானது!" என்ற அடி வலியுறுத்துகிறது. இலக்கியத்தில் காணப் பெறுகின்ற பாத்திரங்களுள் நன்றி மறவாத தன்மைக்காகச் சிறப்புப் பெற்றவர் முக்கியமாக இருவர். ஒருவன் கம்பராமாயணத்தில் காட்சி அளிக்கின்ற கும்பகர்ணன். மற்றவன் மாபாரதத்தில் வருகின்ற **கர்ணன்.**

பாரதப் போர் நடைபெறுகின்றவரையில் கர்ணனுக்குத் தான் யார் என்பது தெரியவே தெரியாது! அங்கநாட்டு அதிபதியாகிய அவனை, தம்முடைய பிள்ளை என்று சொல்லிக் கொண்டு, அதன் பயனை அடையப் பலர் முயன்றாலும், அம்முயற்சிகளெல்லாம் தோல்வியுற்றன. எனவே, ஏறத்தாழ இறுதிவரைத் தாய் தந்தையர் பெயர்

தெரியாத அனாதையாகவே அக்கொடைவள்ளல் இருக்க நேரிட்டது. எவ்வளவு நல்லவர்களையும் இழித்துப் பேச அஞ்சாத இவ்வுலகில், கர்ணனுடைய இந்தக் குறைப் பாட்டைச் சொல்லி இழித்துப் பேசுபவர்களுக்குப் பஞ்சமா? அவனுடைய இந்த அவல நிலையைப் போக்க முடிவு செய்தான் அவனுக்கு உற்ற நண்பனாகிய துரியோதனன்.

துரியோதனன் ஏனைய கெட்ட குணங்கள் அனைத் திற்கும் உறைவிடமாய் இருப்பினும், நட்பு என்ற பண்பாட்டில் மிகச் சிறந்தவனாய் இருந்தான்; ஊர், பேர் தெரியாத ஒருவனை— 'தேர்ப்பாகன் மகன்' என்று எல்லாராலும் எள்ளி நகையாடப்பட்ட ஒருவனை— உற்ற நண்பனாகச் செய்து, அங்க நாட்டு அதிபதியாகவும் செய்தான். யாதொரு விதமான பயனையும் கருதி அவன் இவ்வாறு செய்யவில்லை என்பதை ஒரு நிகழ்ச்சி நன்கு எடுத்துக்காட்டுகிறது.

ஒரு நாள், தான் சிற்றுலாப் போகும் பொழுது கர்ணனையும் உடன் வரவேண்டும் என்று அழைத்தான் துரியோதனன். ஆனால், தனக்குத் தலைநோவு இருப்ப தால் வரவில்லை என்று கூறி விட்டான் கர்ணன். துரியோதனன் தனியே சென்று விட்டான். அவன் சென்ற பிறகு அவன் மனைவியாகிய பானுமதி கர்ணனைச் சூது விளையாட வருமாறு அழைத்தாள் அவன் ஏகாந்த மண்டபத்தில் அவளுடன் விளையாடத் தொடங்கினான். வாயிற்புறத்தை நோக்கி அவள் அமர்ந்திருந்தாள். ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் அவள் தோற்றுவிட்டாள். அந்த நிலையில், உலாவச் சென்ற துரியோதனன் மீண்டு வந்து விட்டான். கணவனைக் கண்டவுடன் எழுந்து மரியாதை செய்வதற்காக அவள் எழுந்தாள் ஆனால், தன்னிடம் தோற்றுவிட்டு அதைச் சமாளிப்பதற்காக அவள் எழுகின்றாள் என்று தவறாக நினைத்து கர்ணன், அவளுடைய சேலையின் மேலணிந்திருந்த

மேகலாபரணத்தைப் பிடித்து இழுத்தான். அவ்வாபரணத்தில் கோக்கப்பட்டிருந்த முத்துக்களும், மணிகளும் உதிர்ந்துவிட்டன. இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் துரியோதனன் அவன் எதிரே வந்துவிட்டான்!

ஏகாந்த மண்டபத்தில் சூதாடி, அவளுடைய மேகலாபரணத்தையும் பற்றி இழுத்த காட்சியை துரியோதனன் நேரே கண்டு விட்டான். எவ்வளவு நெஞ்சுரம் உடையவர்களுக்கும் மனம் கலங்கி விடுதல் இயல்புதானே? செய்வதறியாது மயங்கிய நிலையில் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு கர்ணன் அயர்ந்து விட்டான். ஆனால், துரியோதனன் எவ்விதமான விகற்பமும் கொள்ளாமல், "நண்பா, சிதறிய மணிகளையெல்லாம் பொறுக்கி எடுத்தல் போதுமா, அல்லது கோத்தே தர வேண்டுமா? இதோ நான் இருக்கின்றேன்!" என்றானாம்.

கண்ணனது சூழ்ச்சியால் குந்தி தேவி கர்ணனிடம் வந்து, தான் அவனுடைய தாய் என்பதை நிரூபித்துப் பாண்டவர்களிடம் வருமாறு வேண்டுகிறாள அப்பொழுது நன்றி நினைக்கின்ற அந்தக் கொடைவள்ளல் இந்த நிகழ்ச்சியை எடுத்துக் கூறுகிறான்.

"மடந்தை பொன் திருமேகலை மணி உகவே
மாசுஅறத் திகழும் ஏகாந்த
இடந்தனில் புரிந்தே யான் அயர்ந்து இருப்ப,
'எடுக்கவோ? கோக்கவோ?' என்றான்;
திடம்படுத்திடு வேல் இராசராசனுக்குச்
செருமுனை சென்று செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே எனக்கு இனிப் புகழும்
கருமமும் தருமமும்!" என்றான்.

உயர்ந்த நட்பின் பண்பாட்டோடு விளங்கிய துரியோதனுக்கு நன்றி பாராட்ட வேண்டுமென்பது ஒரு காரணம். இரண்டாவது காரணம் அதைவிட முக்கியமான, ஊர் பேர் தெரியாத தன்னை உணவு கொடுத்து மனிதனாக்கிய உபகாரத்திற்கு நன்றி பாராட்ட வேண்டும் என்பது மிக இன்றியமையாதது. இதனையே, "செஞ்சோற்றுக்கடன் கழிப்பது" என்று கூறுகிறான் கர்ணன்.

போர்க்களத்தில் வந்து நிற்கும் கும்பகர்ணனைத் தன்னுடன் வந்து விடுமாறு அழைக்கின்றான் வீடணன். இராவணன் செய்வது பெருந்தவறு என்பதை நன்கு அறிந்தவனாயினும், நன்றிப் பெருக்கம் உடைய கும்பகர்ணன், வீடணனோடு சேர்ந்து கொண்டு இராவணனுக்கு எதிராகப் போரிட விரும்பவில்லை. எனவே, வீடணனை நோக்கி, "தம்பீ, அறிவில்லாதவனாகிய அரசன் தீமை செய்வதைக் கண்டால் அவனை இடித்துக் கூறித் திருத்த முற்படவேண்டும். திருத்த முடியவில்லையானால, அதற்காகப் பொறுத்துக் கொண்டிருப்பதோ அன்றிப் பகைவனுடன் சேர்ந்து கொண்டு அண்ணன் மேல் போர் தொடுப்பதோ முறையன்று. போருக்குச் சென்று உயிரை விடுதலே அவனுடைய உப்பைத் தின்றவர்கள் செய்ய வேண்டிய கடமையாகும்," என்ற பொருளில் கூறுகின்றான்:

"கருத்து இலா இறைவன் தீமை
கருதினால், அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகில் நன்றே!
திருத்துதல் தீராது ஆயின்
பொருத்து உறுபொருள் உண்டாமோ?
பொருதொழிற்கு உரியர் ஆகி
ஒருத்தரின் முன்னம் சாதல்
உண்டவற்கு உரியது அம்மா!"

செய்ந்நன்றி நினைப்பதற்காகத் தம் உயிரையே பணயமாக வைத்துக் கர்ணனும், கும்பகர்ணனும் குறள் கண்ட வாழ்வை வாழ்ந்து காட்டி விட்டார்கள்.

"என் நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்; உய்வு இல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்பதே குறள் கூறும் நன்றி நினைக்கும் வாழ்வாகும்.

# 12. அறிவின் பயன்

திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு சோழ மண்டலத்தை மனுநீதிச் சோழன் ஆட்சி செய்து வந்தான். சிறந்த கல்வி அறிவும், கேள்வி ஞானமும் உடைய அப் பெருமகன், நல்ல உலக அனுபவமும் பெற்றிருந்தான். ஓர் அரசன் எவ்வளவு நல்லவனாய் இருப்பினும், குடிகளின் குறைகளை அறிந்து உடனுக்கு உடன் போக்க வேண்டும் என்று நினைப்பினும், அதனால் பயன் ஒன்றும் விளையாது! ஏன் தெரியுமா? பெரிய மனிதர்களைப் பார்க்கச் சென்ற அனுபவம் உங்களுக்கு உண்டா? இல்லையானால், இதனைப் புரிந்து கொள்வது கடினம். நீங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தாலும், காரிலே சென்று அந்தப் பெரிய மனிதர்கள் வீட்டு வாயிலில் இறங்குவதனால், அதிகத் தொல்லை இல்லாமல் அவர்களைப் பார்த்து விடலாம். வசதிக் குறைவு உடையவர்களாய் நீங்கள் இருந்து, நடந்து சென்று பெரிய மனிதர்களைப் பார்க்கப் போனால் கிடைக்கின்ற அனுபவங்கள் பல. முதலாவது, வெகு தூரம் நடந்து சென்ற உங்களை— அதுவும் பெரிய மனிதர்களைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆர்வத்துடன் சென்ற உங்களை— அவர்கள் வீட்டு வாயிலில் தொங்கும் ஒரு பலகை முதலாவதாக வரவேற்கும். அந்தப் பலகையில் என்ன குளிர்ந்த வரவேற்பு இருக்கும் என்று நினைக்கின்றீர்கள்? "நாய்கள் ஜாக்கிரதை!" என்ற சொற்றொடரைவிட வேறு என்ன

சிறந்த வரவேற்பை எதிர்பார்க்க முடியும்? உள்ளே இருப்பவர்கள் யார் என்பதை அறிவுறுத்தும் பலகைக்குப் பதிலாக இப்பலகையைக் கண்டு சந்தேகத்துடன் மெல்ல உள்ளே நுழையப் பார்க்கின்ற உங்களைக் காவலாளி தடுத்து நிறுத்திவிடுவான். எத்தனை மணி நேரம் காத்திருந்தாலும், இறுதியில் பெரிய மனிதரைக் காண்பது குதிரைக் கொம்பாகவே முடியும்.

இத்தகைய ஒரு நிலையை நன்கு உணர்ந்ததனால் போலும் மனுநீதிச் சோழன் ஒரு புதிய வழியைக் கையாண்டான்! "குடிமக்கள் அனைவரும் என்னை வந்து எப்பொழுது வேண்டுமானாலும் கண்டு தம் குறைகளை எடுத்துச் சொல்லலாம்," என்று கட்டளை இட்டாலும் போதாது. ஏனென்றால், காண உள்ளே செல்பவர் களைத் தடை செய்ய எத்தனையோ பேர் இருப்பார்கள் என்பதை அறிந்த அவன், அரண்மனையின் வாயிலில் ஒரு மணியைக் கட்டித் தொங்கவிட்டான். குறை உடைய வர்கள் யாருடைய தயவையும் எதிர்பாராமல் அம்மணியை அடித்தால், மன்னன் வெளியே வந்து அவர்கள் குறையைக் கேட்டு அறிந்து தீர்க்க முடியும்.

செங்கோல் மன்னனாகிய அவன் கட்டிய மணி அடிப்பாரின்றிப் பல காலம் உறங்கியது. மனுநீதிச் சோழ னுக்கு, குலத்தை விளக்க ஒரே ஒரு மகன் இருந்தான். அளவில்லாத கலை ஞானத்தைக் கற்ற அவன், தந்தைக்கு ஏற்ற மைந்தனாய்ப் பண்பாடு மிக்கவனாய் இருந்தான்.

ஒரு நாள் அந்த அருமை மைந்தன் மணிகள் கட்டிய பெரிய தேரின்மேல் ஏறிக்கொண்டு, அரசர்கள் உலாவப் போகின்ற பெரிய வீதியிலே சென்று கொண்டிருந்தான். நால்வகைப் படைகளும் அவனைச் சூழ்ந்து சென்றன. எதிர்பாராத நிகழ்ச்சிகளே நடைபெறுகின்ற இயல்பை உடையது இவ்வுலகம். சிற்றுலாப் புறப்பட்ட அரச குமாரன் எவ்வகையான தீங்கும் நேரும் என்று எதிர் பார்க்கவே இல்லை. ஆனாலும், என்ன புதுமை!

திடீரென்று ஒரு பசுக்கன்று அவனுடைய தேர்ச் சக்கரத்தின் இடையே புகுந்து அகப்பட்டு, இறந்துபோய் விட்டது! உடனே தேரை நிறுத்தி, கீழே இறங்கிய அரச குமாரன், இக்கொடுமையைக் கண்டு பெரிதும் மனம் வருந்தினான். ஆனால், என்ன செய்யமுடியும்! செய்வது அறியாது மயங்கி நின்றுவிட்டான் மனுவின் மைந்தன்.

இந்நிலையில், கன்றை இழந்த தாய்ப் பசு வேகமாய் ஓடிச் சென்று, அரண்மனை வாயிலில் கட்டி இருந்த மணியைத் தன் கொம்புகளால் இழுத்து அடித்துவிட்டது. நீண்ட காலமாக உறங்கிக் கிடந்த மணி ஒலிக்கக் கேட்டுப் பதறிக்கொண்டு வெளியே வந்தான் மன்னன். மன்னனுக்கு நேர்ந்த பழியின் ஓசையோ என்று ஐயப்படும்படி அம்மணி ஒலித்தது.

வெளியே வந்த மன்னன், மணியின் பக்கத்தில் மக்கள் யாரையும் காணவில்லை; இரண்டு கண்களிலும் நீர் வழிய நிற்கின்ற பசுவைத்தான் கண்டான். தனக்கு நேர்ந்த துயரத்தை எடுத்துச் சொல்லப் பசுவுக்குப் பேசும் திறன் இல்லை. எனவே, பக்கத்தில் நின்ற அமைச்சர்களை, "நீங்கள் அமைச்சர்களாய் உள்ள நாட்டில் இப்படியும் ஒரு கொடுமை நேரலாமா?" என்று கேட்பவனைப்போல இகழ்ச்சியோடு ஒரு பார்வை பார்த்தான்.

மன்னன் நோக்கைக் கண்டு அஞ்சி நின்ற அமைச்சர்களுள் முதிய அமைச்சன் ஒருவன், "அரசே, உம்முடைய புதல்வன் மணிகள் கட்டிய பெரிய தேரின்மேல் ஏறி அளவில்லாத படைகள் புடை சூழ அரசர்கள் உலாப் போகின்ற தெருவிலே செல்லும்பொழுது, இளைய ஒரு பசுக்கன்று, தேர்ச்சக்கரத்தின் நடுவே புகுந்து இறந்து விட்டது! இங்கு வந்து இம்மணியை அடித்த தாய்ப்பசு தான் இது," என்று கூறினான்.

அமைச்சருடைய வார்த்தைகளைக் கேட்ட மன்னன் விடம் தலைக்கேறியதுபோல வேதனை மிகுந்து, ஒன்றும்

புரியாதவனாய், "மன்னுயிர்களை எல்லாம் காத்து அறவழி ஆட்சி செய்ய வேண்டிய என்னாலேயே இக்கொடுமை நிகழ்ந்தது என்றால், என்ன செய்து இப் பழியைப் போக்கிக்கொள்ள முடியும்?" என்று வருந்தத் தொடங்கினான்.

மன்னவன் துயரத்தைக் கண்ட அமைச்சர்கள் அவன் திருவடிகளில் விழுந்து வணங்கி, "அரசே, நீங்கள் சிந்தை மிக நொந்து வருந்துவதால் என்ன பயனைப் பெற முடியும்? பசு வதை செய்தவர்கள் செய்ய வேண்டிய கழுவாயைச் (பிராயச்சித்தம்) செய்ய உடனே ஏற்பாடு செய்வதே அறமாகும்," என்றார்கள். இந்த விடையைக் கேட்ட மன்னன், அமைச்சர்களின்மேல் சீறத் தொடங்கி விட்டான். "பசு வதை நடை பெற்றதற்குக் கழுவாய் தேடி, அதனால் மகனுடைய பாவத்தைப் போக்கி விடலாம் என்று நீங்கள் கூறுவது நகைப்பையே உண்டாக்குகிறது! அப்படிச் செய்துவிட்டால் இளைய கன்றை இறந்து வருந்தி அலறுகின்ற இத் தாய்ப்பசுவின் வருத்தத்துக்கு அது மருந்தாகிவிடுமா? என்னுடைய மகன் செய்த இக்கொலைக்குக் கழுவாய் தேடும் முறையைச் செய்துவிடலாம். ஆனால், இதே போன்ற ஒரு கொலையை அரசன் மைந்தன் அல்லாத மற்றொருவன் செய்துவிட்டால் அவனைப் பிடித்துக் கொலைக்குக் கொலை என்று சொல்லி அவன் உயிரை வாங்குவேனா னால், என்னுடைய செங்கோல் முறைமை என்ன ஆகும்? 'பழைய மனுவின் நீதி முறை இப்புதிய மனுவால் அழிக்கப் பட்டது!' என்ற பழியை எனக்கு வாங்கித் தரும் நீங்களா அமைச்சர்கள்?" என்று கூறிக் கோபித்தான். அமைச்சர்கள் வார்த்தையை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை.

மனிதனுக்கு அறிவு என்னும் ஒன்றைத் தனிப்பட்ட முறையில் தந்துள்ளான் இறைவன். ஏனைய விலங்கு களுக்கு இல்லாத இந்த அறிவால் மனிதன் என்ன செய்ய வேண்டும் என்று இறைவன் விரும்புகிறான்? உடம்பில்

எந்த உறுப்பில் வலி ஏற்பட்டாலும் கண்ணீரைச் சொரிந்து அழும் உறுப்புக் கண்ணே அன்றோ? தனக்கு வலி இல்லை, ஆகவே தான் வருந்த வேண்டா என்று கண் நினைப்பது இல்லையே! பிற உயிர்கள் படுகின்ற துயரத்தைக் கண்டு வருந்தாதவன் அறிவுடையவன் ஆக மாட்டான். பல சமயங்களில் பிறர் படுகின்ற துன்பத்தைப் பார்த்து, ''ஐயோ பாவம்! சகிக்க முடியவில்லை!'' என்றெல்லாம் பேசுகிறோம். அந்த உயிர்களினுடைய துன்பத்தைப் போக்க முயல்வதுதான் அறிவுடையவன் செய்ய வேண்டிய கடமையாகும்.

''என்னால் முடிந்த அளவு பார்த்தேன். அதனைப் போக்கும் சக்தி என்னிடத்தில் இல்லை. நான் என்ன செய்ய முடியும்!'' என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முயலலாம் அல்லவா?

ஆனால், வள்ளுவர் இவ்வாறு சொல்லித் தப்பித்துக் கொள்ள இயலாத வழியைக் கூறுகிறார். பிறருடைய துன்பத்தை ஒருவன் தன்னுடைய துன்பம் போல நினைக்க வேண்டும் என்றோ, சொல்ல வேண்டும் என்றோ வள்ளுவர் கூறவில்லை. அதற்குப் பதிலாகத் தன்னுடைய துன்பம்போலப் போற்றவேண்டும் என்று கூறுகிறார். அதாவது, தனக்கு நேர்ந்துவிட்டால் எவ்வாறு ஒருவன் எல்லா முயற்சிகளையும் செய்து அதனைப் போக்க முயல்கிறானோ, அவ்வளவு முயன்று பார்க்கவேண்டும். துன்பத்தைப் போக்க முடியவில்லையானால் அதனை அனுபவித்துத்தானே தீர்க்கின்றான்? அதேபோலப் பிறர் படும் துயரத்தைப் போக்க முடியவில்லையானால், முடிய வில்லை என்று வாளா இருந்துவிடாமல் அத்துயரைத் தானும் பங்கிட்டு அனுபவிக்க வேண்டும். இதுவே குறள் கூறும் முறை.

இந்தக் குறளை மனத்திற்கொண்ட மனுநீதிச் சோழன், ''எந்த உயிரையும் கொல்ல மனிதனுக்கு உரிமை இல்லை. அவ்வாறு கொன்றால், அவனைக்

கொல்வதே முறையாகும். இந்தப் பசு மனம் அழிந்து வருந்தும் துயரத்தைப் போக்க முடியாத யானும் இப்பசு அனுபவிக்கும் துயரை அனுபவிப்பதே அறமாகும்,'' என்ற கருத்தைக் கூறினான்.

"என மொழிந்து 'மற்று இதனுக்கு இனி இதுவே செயல்!
இவ் ஆன்
மனம் அழியும் துயர் அகற்ற மாட்டாதேன், வருந்தும் இது
தனது உறு பேர் இடர் யானும் தாங்குவதே கருமம்.' என
அனகன் அரும்பொருள் துணிந்தான்; அமைச்சரும்
அஞ்சினர், அகன்றார்!''

பிறர் படும் துயரத்தைப் போக்க முடியாத ஒருவன், அவ்வுயிரின் துயரத்தைத் தானும் ஏற்று அனுபவித்தால் ஒழிய, ஒருவன் தன்னை மெய்யறிவுடையவன் என்று கூறிக்கொள்ள முடியாது என்பதே குறள் காட்டும் வாழ்க்கை நெறி. இதை மறந்துவிட்டு எவற்றை எல்லாமோ நாம் இன்று 'அறிவு' என்று சொல்லிக் கொண்டு திரிகிறோம் ''மற்றோர் உயிரின் நோயைத் தன் நோய் போலப் போற்றி அனுபவிக்காவிட்டால், அறிவு பெற்றதனால் பயன் என்ன?'' என்னும் பொருளில்,

'' அறிவினால் ஆகுவது உண்டோ ? பிறிதின் நோய்
தன் நோய்போல் போற்றாக் கடை ?''

என்று கூறுகிறது குறள்.

குறள் கூறும் ஒப்பற்ற குறிக்கோள் வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகும் மனுநீதிச் சோழன் தன்னுடைய ஒரே மகனை அதே தேர்க்காலின் கீழே கிடத்தி, அவன் மீது தேரைச் செலுத்தி முறை செய்தான்; கன்றை இழந்த பசுவைப் போலத் தானும் மகனை இழந்து துயர் அடைந்தான். இவ்வாறு செய்ததாலேயே அவனுக்கு இயற்பெயர் மறைய, மனுநீதி கண்ட சோழன் என்னும் காரணப்பெயர் நிலைத்துவிட்டது.

# 13. வாழ்க்கைக்கு ஒரு பற்று

இந்த உலகத்தின் படைப்புக்களிலேயே மிக விந்தையான படைப்பு மனிதப் படைப்புத்தான். எல்லோரையும் விட, எல்லாவற்றையும்விடத் தான் உயர்ந்தவன் என்று மனிதன் சொல்லிக் கொள்கிறான், ஏன் தெரியுமா? மனிதனுக்கு மட்டுமே மனம் என்ற ஒன்றும், சிந்தனை என்ற ஒன்றும் இறைவனால் கொடுக்கப்பட்டுள்ளன. மனம், சிந்தனை என்ற இரண்டாலும் தான் உயர்ந்து விட்டதாகக் கருதிக்கொள்கின்ற மனிதன், இவைகளின் பயன் என்ன என்பதைச் சிந்திப்பதே இல்லை!

மனிதனுடைய ஆட்சிக்கு உட்பட்டு இருக்க வேண்டிய மனம், பல சமயங்களில் பெரும்பாலானவர்களைப் பொறுத்த மட்டில், தானே ஆட்சி செய்யத் தொடங்கிவிடுகிறது. "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டா," என்ற பழஞ்சொல், ஏட்டுப் பேச்சாகவே இருந்துவிடுகிறது. மனிதனை மனம் செலுத்துகின்ற வரையில் அவன் மனிதன் என்ற பெயருக்குத் தகுதியுடையவன் ஆக மாட்டான். ஏனென்றால், மனிதன் என்ற சொல்லும் மனம் என்ற சொல்லும் ஓரளவு ஒற்றுமையுடையன. மனத்தை உடையவன் மனிதன் என்று கூடச் சொல்லி விடலாம். அவன் மனத்தை உடையவனாய் இருக்கும் பொழுதுதான் அவனுக்கு மனிதன் என்ற பெயர் தகுமே தவிர, மனம் அவனை அடிமையாகக் கொண்டிருக்கும்

பொழுது அந்தப் பெயருக்கு அவன் தகுதியற்றவனா கிறான்.

மனித மனத்தின் விந்தையான இயல்பு எப்பொழுதும் ஒன்றைப் பற்றிக்கொண்டு இருப்பதே ஆகும். ஒன்றையும் பற்றாமல் இம்மனம் இருக்கவேண்டும் என்று நினைத்தால், அது முடியாத காரியம் என்றுகூடச் சொல்லிவிடலாம்.

மனித மனத்தின் இந்த இயல்பை நன்கு அறிந்த பெரியவராகிய தாயுமானவர், ''மதம் பொருந்திய யானை யைக்கூட வசப்படுத்தி நடத்திவிடலாம்; கரடி, கொடுமை யான புலி என்பவற்றைக்கூட அடக்கிவிடலாம்;'' என்றெல்லாம் சொல்லி, இறுதியாக, ''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது!'' என்று கூறினார். நம் காலத்திற்குச் சற்று முன்னர் வாழ்ந்த இராமலிங்க வள்ளலாரும், ''மனம் எனும் ஓர் பேய்க் குரங்கே,'' என்று கூறியுள்ளார்.

மனத்தை அடக்கி, ஒருநிலைப்படுத்தி, நல்ல வழியில் திருப்பினாற்றான் வாழ்க்கையின் பயனை அடைய முடியும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். வாழ்க்கையின் பயனை அடைகின்றோமோ இல்லையோ, வாழ்கின்ற காலத்தில் அமைதியோடு, கவலையற்று வாழ வேண்டுமானால், அதற்கும் இந்த மன அடக்கம் தேவைப் படுகிறது. அடங்காத மனத்துடன் வாழ்க்கை நடத்துவது, பெரும் புயற் காற்றில், துடுப்பில்லாத மரக்கலத்தைக் கொந்தளிக்கும் கடலின் நடுவே செலுத்த முயல்வதைப் போலாகும்.

மனத்தை அடக்க வேண்டும் என்றால், ஓயாமல் 'அடக்க வேண்டும், அடக்க வேண்டும்,' என்று நினைப்ப தால் பயன் ஒன்றும் ஏற்படாது. அதற்குப் பதிலாக மனத்தின் இயல்பை நன்கு அறிந்த பெரியவர்கள் ஓர் அழகான வழியைக் கூறினார்கள். அதாவது, ''மனம்

எப்பொழுதும் ஒன்றை நினைக்கும் இயல்பு உடையது. அதை நினைக்காமல் தடுக்க நம்மால் முடியாது. அப்படி யானால், வேறு வழி என்ன? இன்னதைத்தான் நினைக்க வேண்டும் என்று சொல்லக்கூடவா நமக்கு உரிமை இல்லை? அம்முறையிலேதான் இந்த அடக்கத்தைச் செய்யவேண்டும்,'' என்பது.

மனத்துக்கும் குரங்குக்கும் ஒரு சிறிய வேறுபாடு உண்டு. குரங்கு மரத்தின் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவுவதைப் பார்த்திருக்கலாம். தான் தங்கி யுள்ள கிளையை விட்டுவிட்டு அடுத்த கிளைக்குத் தாவு கிறது. முதல் கிளையை விட்ட நேரத்திற்கும், இரண்டா வது கிளையைப் பற்றுகின்ற நேரத்திற்கும், இடைப்பட்ட நேரத்தில் ஒன்றையும் பற்றாமல் அக்குரங்கு வெட்ட வெளியிலேதான் சஞ்சரிக்கிறது. இந்த நேரம் ஒரு வினாடி யாக இருப்பினுங்கூட இந்த நேரத்தில் அது ஒன்றையும் பற்றாமல் இருப்பது என்னவோ உண்மைதான்!

கேவலம் விலங்காகிய குரங்குக்குக்கூட ஒரு கண நேரம் ஒன்றையும் பற்றாமல் இருக்க முடிகிறது. ஆனால் ஆறு அறிவு படைத்த மனிதனுக்கோ என்றால், ஒரு வினாடியில் நூற்றில் ஒரு பாகங்கூட ஒன்றையும் பற்றாமல், அதாவது நினைக்காமல், இருத்தல் இயலாத காரியம். அப்படி யானால், மனத்தை அடக்குவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. ஏதாவது பலமான ஒன்றைப் பற்றிக்கொண்டால் ஒழிய, மனத்தில் உள்ள பற்றை, அதாவது ஆசையைப் போக்க முடியாது. இந்த உண்மையைக் குறள் புகட்டுவது போல வேறு எந்த நூலும் புகட்டவில்லை என்றுகூடச் சொல்லிவிடலாம்.

திருக்கடவூரிலே அபிராமி பட்டர் என்ற குருக்கள் ஒருவர் வாழ்ந்து வந்தார். மார்க்கண்டேயன் பொருட்டு யமனை உதைத்த பெருமானின் சக்தி வடிவாக அவ்வூரில்

அபிராமித்தேவி இருக்கின்றாள். அந்த அம்பிகையிடம் தம் உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார் அபிராமி பட்டர். இறைவியின் திருவருளிலேயே தோய்ந்து தம்மை மறந்து வாழ்ந்து வந்த காரணத்தால், அபிராமி பட்டர் உலகச் சட்டம் ஒன்றையும் நினைத்ததில்லை. இதனால், அவரைப் பயித்தியக்காரர் என்றும், குடி முதலிய தீய பழக்கங்கள் உடையவர் என்றும் பழி சொல்ல ஊரார் அஞ்சவில்லை.

அப்பெரியவரின் காலத்தில் தஞ்சை மாவட்டத்தைப் பிரசித்தி பெற்ற சரபோஜி மன்னன் ஆட்சி செய்து வந்தான். தை அமாவாசையன்று சரபோஜி மன்னன் கடலாடுவதற்காகக் காவிரிப்பூம்பட்டினம் செல்லப் புறப் பட்டான்; வழியில் இருந்த திருக்கடவூரில் உள்ள காலனைக் காலால் உதைத்த பெருமானை வணங்க வேண்டும் என்று எண்ணித் திருக்கோயிலினுள் நுழைந் தான்; பெரிய மண்டபத்தின் ஒரு மூலையில் தூணின் அருகே ஒளி பொருந்திய முகத்தோடு அமர்ந்திருந்த அபிராமி பட்டரைக் கண்டான். அவர் திருமுக அமைதியில் ஈடுபட்ட மன்னன், அவரை நெருங்கி, அளவளாவ விருப்பம் கொண்டான். ‘இதுதான் சமயம்!' என்று கருதிப் பக்கத்திலிருந்தவர்கள், “அரசரே, இவரைப் பெரிய யோகி என்று நினைத்துவிட வேண்டா. இவர் வாம மார்க்கத்தவர்; மது மயக்கத்தால் இங்ஙனம் தம்மை மறந்த நிலையில் உள்ளார். நாங்கள் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்றால், இந்த அபிராமி பட்டரைச் சாஸ்திர சம்பந்தமான கேள்வி ஒன்றைக் கேட்டுப் பாருங்கள்! பட்டர் குலத்தில் பிறந்தவ ராகிய இவர் சாஸ்திரம் கற்றிருக்க வேண்டாவா?” என்று கூறினார்கள்.

அவர்கள் கூற்றால் ஓரளவு மனம் மாறிய சரபோஜி மன்னன், “பெரியவரே, இன்று என்ன திதி?” என்று கேட்டான்.

மன்னனுடைய கேள்வி, யோகத்தில் அமர்ந்திருக்கும் பட்டரின் காதுகளில் அரைகுறையாய் விழுந்தது. அபிராமித் தேவியின் திருமுக மண்டலத்தை ஓயாது சிந்தித்துக் கொண்டிருக்கும் பட்டர் உடனே, "இன்று சுத்த பூர்ணிமை," என்று கூறினார். இதைக் கேட்ட மன்னன், "ஐயா, இன்று அமாவாசை ஆதலால் நான் கடலாடச் செல்கிறேன். நீர் நினைக்கிறபடி இன்று சுத்த பூர்ணிமையாக இல்லாவிட்டால், என்னுடைய கோபம் உம்மைத் தண்டிக்கும்!" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். அரசன் சென்ற பிறகு, அரசன் ஆணைக்கு அஞ்சி அழுது கொண்டு பொழுதைக் கழிக்கவில்லை பட்டர். அரசர்களுக்கெல்லாம் அரசியான இறைவியினது பற்றுக் காரணமாக நடந்த ஒன்றுக்கு, அவர் ஏன் வருந்த வேண்டும்?

அமாவாசைத் தினத்தில் முழுச் சந்திரனை நினைக்குமாறு செய்தது எது? "உதிக்கின்ற செங்கதிர்" போன்ற இறைவியின் திருமுக மண்டலந்தானே சந்திரனை அவருக்கு நினைவூட்டிற்று? எனவே, தம்முடைய சொற்களில் நேர்ந்த பிழைக்குத் தாம் முழுப் பொறுப்பாளரல்லர் என்பதை உணர்ந்த பட்டர், அந்த அபிராமியின் மேல் 'அபிராமி அந்தாதி' என்ற அழகிய பாமாலையைப் புனைந்தார். என்ன அதிசயம்! காவிரிப்பூம்பட்டினத்தில் இரவுப் பொழுதைக் கழித்த சரபோஜி மன்னன் நீலக் கடலின் கிழக்கு முகட்டில் முழுச் சந்திரன் தோன்றும் அற்புதத்தைக் கண்டான்! இது அபிராமி பட்டருக்காக அபிராமித்தாய் விளைத்த அற்புதம் என்ற பேருண்மையை உணர்ந்த மன்னன், ஓடோடியும் வந்து, அவருடைய திருவடிகளிலே விழுந்து, தன் பிழை பொறுக்குமாறு வேண்டிக் கொண்டான்.

பட்டர் இத்தகைய வாழ்வை எங்ஙனம் மேற்கொள்ள முடிந்தது?

"பற்றுக்களையெல்லாம் கடந்து நிற்கும் இறைவனுடைய திருவடியைப் பற்றினால் ஒழிய உலகத்தின்மேல் கொண்ட மனப்பற்று விடாது," என்ற பொருளிலும், "வேண்டும், வேண்டா என்ற தன்மைகளே இல்லாத கடவுளின் திருவடியைச் சார்ந்து, விருப்பு வெறுப்பு அற்ற பெரியவர்கட்குத் துன்பம் என்பது எங்கும் இல்லை," என்ற பொருளிலும் மலர்ந்தன இரு குறள் வெண்பாக்கள்:

" பற்றுக பற்று அற்றான் பற்றினை; அப் பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "

" வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

குறள் காட்டும் வாழ்க்கையை அப்படியே வாழ்ந்து காட்டிச் சென்றார் அபிராமி பட்டர்.

# 14. செயற்கு அருஞ்செயல்

'என்ன? சமீபத்தில் சாத்தனாரைப் பார்த்தீர்களா?' என்று கேட்கிறார் நண்பர் ஒருவர். 'அவரையா? ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டதைப் போல மண்டைக் கர்வம் பிடித்து அலைகிறார் அந்த மனுஷர்! அவருக்கு நம்மை எல்லாம் கண்டாற்கூடக் கண் தெரிவதில்லை இப்பொழுது!' என்கிறார் அடுத்தவர். இப்படி ஒருவரைப்பற்றிப் பேசுவது சரியா, தவறா என்பது ஒரு புறம் இருக்க, இத்தகைய பேச்சுக்களிலிருந்து நாம் ஒன்றை அறிந்துகொள்கிறோம்.

பெரிய காரியத்தைச் சாதித்துவிட்ட ஒருவர் மண்டைக் கர்வம் கொள்வதை நியாயமானது என்று உலகம் கருதுகின்றதா? அவ்வாறு சாதித்துவிட்டு ஒருவர் கர்வம் கொள்ளுவதனால் அப்பொழுதுங்கூட 'இது என்ன பெரிய காரியம்?' என்றுதான் கூறுமே தவிர, இந்த உலகம் எதனையும் விரைவில் ஒப்புக்கொள்வதில்லை. இதிலிருந்து இரண்டு கேள்விகள் பிறக்க நியாயம் உண்டு.

முதலாவது, 'பெரிய காரியத்தைச் சாதித்தவர் கர்வம் கொள்வது நியாயமா?' என்பது. அடுத்தது, 'பெரிய காரியம், அல்லது செயற்கரிய செயல் என்பது யாது?' என்பதாகும். முதல் கேள்விக்கு விடை கூறுவது எளிது.

எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதித்தவர்களும் கர்வங்கொள்ளுதல் தகாது. உண்மையைக் கூறுமிடத்துப்

பெருங் காரியங்கள் செய்யும் பெரியோர்கள் கர்வம் கொள்ளவே முடியாது. எந்த வினாடியில் அவர்கள் கர்வம் கொண்டார்களோ, அந்த வினாடியிலேயே அவர்கள் பெரியவர்கள் என்ற பட்டத்தை இழந்து விடுவார்கள்.

இயேசுநாதர், நம்மாழ்வார், ஞானசம்பந்தர் முதல் மகாத்துமா காந்திவரை உள்ள பெரியவர்கள் யாரும் பெரிய காரியங்கள் பலவற்றைச் செய்திருப்பினும், தாங்கள் செய்ததாகக் கருதியதே இல்லை; எனவே, கர்வம் கொண்டதுமில்லை. இன்னும் கூறப்போனால், உலகில் உள்ள எல்லாரினும் தம்மைக் கீழானவர்களாகவே கருதினார்கள் இப்பெரியவர்கள்!

ஆவ்வாறு செய்வது மட்டும் பெரிய காரியமன்று; இவ்வாறே உண்மையில் நினைத்தார்கள்; எனவே, பெரிய வர்கள் ஆனார்கள். ‘பணியுமாம் என்றும் பெருமை’ என்ற குறளை வாழ்ந்து காட்டிய பெருமை, இவ்வுலகப் பெரியவர் அனைவர்க்கும் உண்டு.

இனி அடுத்துள்ள கேள்வி, ‘பெரிய காரியம் என்பது யாது?’ என்பதேயாகும். இதனை முடிவு செய்வது அவ்வளவு எளிதன்று. உலகில் இரண்டு பொருள்களை எடுத்துக்கொண்டு பெரியது சிறியது என்று கூறலாம்; ஆனாலும், குறிப்பிட்ட அந்த இரண்டு பொருள்களைப் பற்றிக் கூறுகின்ற வரையிலேதான் ‘பெரியது சிறியது’ என்ற அடைமொழிகளும் பொருந்தும்.

சாதாரணமாகப் பாரம் தூக்கும் செயலை எடுத்துக் கொள்ளலாம். சிலர் ஓரளவு பாரத்தை எளிதாகத் தூக்கிவிடுகின்றனர். அதே பாரத்தைச் சிலர் தூக்க முடியாமல் விழிக்கின்றனர். முன்னவர் செய்கின்ற செயலைப் பார்த்து அனைவரும் வியப்பெய்துகின்றனர்.

ஒருவர் செய்ய இயலாது விழிக்கின்ற செயலை மற்றொருவர் எளிதாகச் செய்துவிடுவதைக் காண

கின்றோம். அவ்வாறானால், எதனை அரிய செயல் என்று கூறுவது? 'நீரின்மேல் நடத்தலையும், நெருப்பின் மேல் இருத்தலையும், வேறு ஒருவர் காணாமல் உலகத்தில் உலாவுதலையுங்கூட' எளிய செயல்கள் என்று தாயுமானப் பெருந்தகையார் கூறுகின்றார்.

இவைகள் எல்லாம் எளிய செயல்கள் என்றால், அரிய செயல்தான் யாது? தாயுமானவரே விடை கூறுகின்றார் இந்த வினாவிற்கு: 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது!' என்று அவர் கூறும் பொழுதுதான் அரிய செயல் யாது என்பதை ஒருவாறு அறிய முடிகின்றது.

உலகத்தில் வாழ்கின்றவர்கள் செய்யக்கூடிய அரிய செயல்கள் அனைத்தினும் சிறந்தது 'சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற' செயல்தான். இவ்வரிய செயலைச் செய்தவர்களே பிற அரிய செயல்களையும் செய்ய முடியும்.

செய்தற்கு அரிய செயலைச் செய்த அடியார்களின் வரலாற்றைக் கூறுவது பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம். மிக எளிமையானது என்று கருதப்படும் செயல்களிலிருந்து மிக அருமையானது என்று கருதப்படும் செயல்கள்வரை அனைத்தையும் செய்து உள்ளார்கள் அப்பெரியவர்கள். அவர்களுள் இருவர் செய்த காரியங்களைப் பற்றித்தான் இன்று பலரும் ஐயத்தோடு பேசுகின்றனர். முதலாவது பேசப்படுபவர் இயற்பகையார்; இரண்டாவது பேசப்படுபவர் சிறுத்தொண்டர்.

பெரிய புராணத்தில் வந்துள்ள அறுபத்து மூன்று பெரியார்களும் செயற்கருஞ்செயல் செய்தவர்களே; அதாவது, சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற செயலைச் செய்தவர்கள். ஆனால், இயற்பகையார் செய்த செயல்தான் உலகியல் முறையில் நின்று பார்க்கும்போது கூடச் செயற்கருஞ் செயலாகக் காட்சி அளிக்கிறது.

உலகியலுக்கு முற்றிலும் புறம்பான ஒரு காரியத்தைச் செய்தமையாலேதான் அவர் பெயரைக் கூட மறந்துவிட்டு நம் முன்னோர்கள் (உலக) 'இயல்பகையார்' என்று அவரை வழங்கினார்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தார் அப்பெரியவர்; வாழ்க்கையில் ஒரு சிறந்த குறிக்கோளை மேற் கொண்டிருந்தார். சிவனடியார் யார் வந்து எதனைக் கேட்டாலும், இல்லை என்று கூறாமல் தர வேண்டும் என்பதே அவருடைய கொள்கையாகும். இத்தகைய ஒரு கொள்கையைப் பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. என்றாலும், கொள்கை ஒன்றை வாழ்வில் மேற்கொள்பவர் அனைவருக்கும் ஏற்படும் சோதனை அவருக்கும் ஏற்பட்டது. ஒரு நாள் கிழ அடியார் ஒருவர் இயற்பகையின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். வந்தவரை இயற்பகை வரவேற்று உபசரித்த பின்னர், அவர் வந்த காரியத்தை விசாரித்தார். வந்த கிழவர், "அடியார்கள் எதனை விரும்பி வந்தாலும் அதனை மகிழ்ச்சியோடு நீர் தருகின்றீர் எனக் கேட்டு உம்பால் ஒரு பொருளை விரும்பி வந்தேன். அதனைத் தர இயலு மானால் சொல்கிறேன்," என்றார். ஒருவரிடம் ஒரு பொருளை நாடி வருபவர் இவ்வாறு கேட்பது முற்றிலும் புதுமையான முறைதான்.

வந்த கிழவர் இவ்வாறு கேட்டவுடன் இயற்பகையார், "யாது ஒன்றும் என்பக்கல் உண்டாகில், அன்னது எம்பிரான் அடியவர் உடைமை! ஐயமில்லை! நீர் அருள் செய்யும்," என்று கூறினார். வந்த கிழவர், "மன்னு காதல் உம் மனைவியை வேண்டி வந்தது இங்கு," என அந்தணர் எதிரே சொன்ன போதிலும், 'முன்னையின் மகிழ்ந்தாராம்' இயற்பகை.

அவ்வாறே உள்ளே சென்ற இயற்பகை, மனைவியை நோக்கி, 'இந்த அடியாருக்கு உன்னைத் தந்துவிட்டேன்!' என்றார். அம்மாதரசி முதலில் கலங்கிப் பின் தெளிந்து,

'நீங்கள் உரைத்த ஒன்றைச் செய்வது தவிர வேறு உரிமை எனக்கில்லை,' என்றாள்.

வந்த கிழவர் அவளை அழைத்துக்கொண்டு போகும் பொழுது இயற்பகையை நோக்கி, "யான் இவளை அழைத்துப் போகும் பொழுது நீர் துணையாய் வந்து, உம் சுற்றத்தார் தடை செய்யாமல் செய்வீராக," என்றார்.

இயற்பகையார் அங்ஙனமே புறப்பட்டு எதிர்த்த சுற்றத்தாரை எல்லாம் அழித்துச் சாய்க்காடு வரையில் உடன் சென்றார். கிழவர், "இனி எனக்கு அச்சமில்லை நீர் மீண்டு போகலாம்!" என்றார். இயற்பகை சிறிது தூரம் மீண்டவுடன் கிழவர் அவரை நோக்கிக் கத்தத் தொடங்கினார்.

'இயற்பகை முனிவா, ஓலம்! ஈண்டு நீ வருவாய் ஓலம்! செயற்கருஞ் செய்கை செய்த தீரனே, ஓலம் ஓலம்!' என்று கூவினவுடன், இயற்பகையார் மீட்டும் ஓடி வந்தார். என்ன புதுமை! கிழவரைக் காண வில்லை. இறைவன் அவருக்குக் காட்சி தந்தான். இதுவே வரலாறு. கிழவர் மறைந்து இறைவன் தோன்றினான் என்பதை நம்ப முடியாது என்று கூறும் பெரியவர்கள் இவ்வரலாறு முழுவதையுமே நம்ப வேண்டுவதில்லை.

வந்த கிழவர் இயற்பகையாரின் ஆற்றலைச் சோதிக்கவே வந்தார். ஒருவன் கொள்கையைக் கொண்டு செலுத்துவதற்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லையைக் கடந்து விட்ட பொழுது கொள்கை என்பதெல்லாம் மறந்துவிடும். இது சாதாரண மனிதர்கள் சட்டம். செயற்கருஞ் செய்கை செய்யும் தீரர்கட்கு இந்த சட்டம் செல்லாது. அவர்கட்குக் கொள்கையின் எதிரே மனைவி, மக்கள், தாம் என்ற அனைவரும் ஒன்றுதான். மனைவி யைத் தருதல் சாதாரண மனிதன் கனவிலும் கருத முடியாத காரியம். ஆனால், சாதாரண மனிதன் செயற் கருஞ் செய்கை செய்யும் பெரியவனாக மாறும் பொழுது

சாதாரண மனிதன் செய்ய முடியாதவற்றையும் செய்கிறான். அச்செயல் நியாயமானதா அல்லவா என்பதை, அவன் நிலையிலிருந்து காண வேண்டுமே தவிர, நம்முடைய நிலையில் வைத்துப் பார்ப்பது தவறு. இவ்வாறு சொல்வது பொருத்தமற்றது போலத் தெரிகிறதா? இன்று கூடப் போர்ப் படையில் இருப்பவர்கட்குத் தனிச்சட்டம் உண்டு என்பதை மறந்துவிட வேண்டா. சாதாரண மனிதன் செய்யும் குற்றத்தை அவன் செய்தாற்கூட, சீரியல் (சிவில்) நீதி மன்றங்கள் அவனை விசாரிக்க முடியாதே!

இத்தகைய செயலை அனைவரும் செய்ய முடியும் என்று யாரும் கூறவில்லை. ஆனால், குறள் போன்ற ஒரு நூல்,

> ‘ செயற்கு அரிய செய்வார் பெரியர்; சிறியர்
> செயற்கு அரிய செய்கலா தார் ’

என்று கூறுமேயானால், அதன்படி வாழ்ந்த பெரியவர்கள் உலகில் ஒருவர் இருவராவது இருக்கத்தான் செய்வார்கள் என்பதையும் அறியவேண்டும். இதை உணர்ந்து, இச் செயலின் பின்னே உள்ள இயற்பகையாரின் மனநிலையை நன்கு உணர்ந்தே சேக்கிழார், ‘செயற்கருஞ் செய்கை செய்த தீரர்’ என்ற பட்டத்தை இவருக்கு வழங்குகிறார். பிள்ளையை அறுத்து கறி சமைப்பதைக்காட்டிலும் நெஞ்சுத் துணிவும் துறவு மனப்பான்மையும் வேண்டும் இயற்பகையார் செய்த செயலைச் செய்வதற்கு என்பதை மட்டும் மனத்துட்கொள்ளுதல் போதுமானது.

குறள் கூறிய செயற்கருஞ்செயல் பல வகைப் படுமேனும், அவற்றுள் எல்லாம் தலை சிறந்தது பிறர் கனவிலும் கருத முடியாத இச்செயல் என்று கூறலாம்.

# 15. 'உயர்வு உள்ளல்!'

சாதாரண வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டு, அன்றாடப் பாட்டுக்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற சிலர், திடீரென்று வசதியான வாழ்க்கை வாழத் தகுந்த செல்வத்தைப் பெற்று விடுவதுண்டு. கஷ்டப்பட்ட அவர் இனிக் கவலையில்லாமல் வாழலாம் என்று நம்மைப் போன்றவர்கள் நினைப்போம். ஆனால் வசதி பெற்ற அவர் அவ்வாறு நினைப்பதில்லை. சில காலம் கழித்து அவரைப் பார்த்தால் உடம்பு மெலிந்து, கண் குழி விழுந்து, பேய்போலக் காட்சியளிப்பார். காரணமென்ன? ஓரளவு பொருள் கிடைத்தவுடன் அதனை எப்படியாவது பெருக்கி அதிகப்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்தினால் முயற்சி செய்யத் தொடங்குகிறார். முயற்சி நல்லதுதான் என்றாலும், மெய் வருத்தம் பாராமல், கண் துஞ்சாமல், பசி நோக்காமல், பிறருடைய நன்மை தீமைகளைக் கவனியாமல், கருமமே கண்ணாக இருப்பது சரிதானா?

ஆனால் இவ்வளவு முயற்சிக்கும் காரணம் யாது? பொருளைச் சேகரிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கந்தான். அவருடைய மனத்தில் ஏதோ ஒரு குறிப்பிட்ட அளவு சேகரித்து விட வேண்டும் என்ற எண்ணம் உண்டாகி விடுகின்றது. அந்தக் குறிக்கோள் நிறைவேறுகின்றவரை எதைப் பற்றியும் கவலைப்படாமல் கருமமே

கண்ணாய் இருந்து விடுகிறார். தம் குறிக்கோள் இவ்வளவு முயற்சி எடுத்துக் கொள்வதற்குத் தகுதியுடையதுதானா என்பதைப்பற்றி அவர் கவலைப்படுவதில்லை. ஆனால், உயர்ந்த குறிக்கோள் கொண்டு வாழ்ந்த பெரியவர்களுக்கும், இவர்கட்கும் ஒரு விதத்தில் ஒற்றுமையுண்டு. அப்பெரியவர்களும் தங்கள் குறிக்கோள் நிறைவேறுகின்ற வரையில் எது பற்றியும் கவலைப்படுவதில்லை. இவர்களும் அப்படியே! என்றாலும், என்ன வேற்றுமை? 'மலையைக் கல்லி எலியைப் பிடித்தான்,' என்பது நம் நாட்டுப் பழமொழி.

பெரு முயற்சி செய்தால் அதனால் பெறுகின்ற பயனும் பெரிதாக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லையானால், அம்முயற்சியால் பயன் ஒன்றுமில்லை. இது ஒருபுறமிருக்க, மட்டமான பொருளை அடைய வேண்டுமென்று குறிக்கோள் வகுத்துக் கொள்வதில் மற்றோர் இடைஞ்சலும் இருக்கிறது. ஒரு குறிக்கோளை அடைய முயலும் முயற்சியிலேதான் இன்பம் இருக்கிறதே தவிர, அதை அடைந்து விட்ட பிறகு எவ்வித இன்பமும் இருப்பதில்லை. ''அரிது பெற்றிடினும் பெற்றதில் விருப்பம் அறப் பெறாதன விரும்பும் உயிர்கள்,'' என்று கூறினார் சாந்தலிங்க அடிகள். எவ்வளவு பெரு முயற்சி செய்து ஒரு பொருளைப் பெற்றாலும், அதன் மேல் பற்று நீங்கி விட, பெறாத பொருளையே நாடுவது மனித இயல்பு. எனவே, சாதாரணப் பொருளை அடைய வேண்டும் என்பதையே வாழ்வின் குறிக்கோளாக வகுத்துக் கொண்டால் அக்குறிக்கோள் முடிந்தவுடன் வாழ்விலும் அலுப்புத் தட்டிவிடும்.

மேனாடுகளில் பெரும் பொருளாளர்கள், ''வாழ்வில் வெறுப்படைந்தேன்!'' என்று சொல்லிவிட்டுத் தற்கொலை செய்து கொள்வதைக் கேட்கிறோம். வாழ்வில் விரும்பக் கூடிய எல்லா வசதிகளையும் பெற்றுள்ள இவர்கள் ஏன் இவ்வாறு செய்ய வேண்டும்? காரணம் வேறொன்று

மன்று. அற்பக் குறிக்கோளை அடைய முயன்று, அடைந்து விட்ட பிறகு வாழ்வின் சுவையை இழந்து விட்டவர்கள் இவர்கள். இது கருதித்தான் நம் பெரியோர்கள், 'குறிக்கோளை மேற்கொள்ளும் பொழுது அது உயர்ந்த தாக இருக்கட்டும்,' என்று கூறினார்கள்.

சோழன் நல்லுருத்திரன் என்ற புலவன் மனித இனத்தையே இரண்டாகப் பிரிக்கிறான்; முதலாவது இனத்தை 'எலி இனம்' என்றும், இரண்டாவது இனத்தைப் 'புலி இனம்' என்றும் கூறுகிறான். ஆண்டு முழுவதும் பாடுபட்டு உழவன் நெல்லை விளைவிக்கிறான். வயலில் விளைந்த நெற்கதிர் முற்றித் தலை சாய்ந்திருக்கும் பொழுது சிறிதும் வருத்தமில்லாமல் அந்த வயலில் குடியிருக்கும் எலிகள் அந்த நெற்கதிர்களை நறுக்கித் தம்முடைய வளைகளில் கொண்டு போய்ச் சேர்த்து வைத்துக் கொள்கின்றன. கேவலம், வாழ வேண்டுமென்ற ஒரே எண்ணத்தால் இங்ஙனம் பிறருடைய முயற்சியை அனுபவிக்கின்ற எலி போன்ற மனநிலை உடையவர்களும் மக்கட் கூட்டத்தில் உண்டு.

இதன் எதிராக உள்ளவர்கள் வாழ்வில் உயர்ந்த குறிக்கோளை உடையவர்கள். எத்துணைத் துன்பம் வருவதாயினும் அதனைப் பொறுமையோடு ஏற்றுக்கொள் வார்களே தவிர, தம் குறிக்கோளிலிருந்து நழுவ மாட் டார்கள். புலிக்குப் பசி எடுத்தது; வலிமை பொருந்திய பன்றி ஒன்றை அடித்துக் கொன்றது. ஆனால், அப்பன்றி இடப்பக்கமாக வீழ்ந்து விட்டதாம். இடப்பக்கம் வீழ்ந்த விலங்கைப் புலி உண்பதில்லையாம். எனவே, அன்று முழுவதும் பட்டினியாகக் கிடந்து மறுநாள் உறுமலோடு புறப்பட்டுச் சென்று பெரிய ஆண் யானையை வலப்பக்கம் விழுமாறு அடித்து, அன்று உணவு உட்கொண்டதாம். இத்தகைய மனிதர்களும் உலகில் உண்டு. இந்த இரு வகை மக்களையும் பற்றிப் பேசிய சோழன் நல்லுருத்திரன் "எலி போன்ற மனிதர்களின் நட்பு எனக்கு வேண்டா.

புலி போன்ற உயர்ந்த குறிக்கோள் உடையவர்கள் நட்பே வேண்டும்,' என்று பாடுகிறான் புறநானூற்றுப் பாடல் ஒன்றிலே.

குறிக்கோள் உயர்ந்ததாக இருக்க வேண்டுமென்றால், எவ்வளவு உயர்ந்ததாக இருக்க வேண்டுமென்ற கேள்வி பிறக்குமல்லவா? இதற்கு விடை கூற வந்த வள்ளுவர், அது மிக மிக உயர்வானதாக இருக்க வேண்டுமென்று கூறினார். 'அப்படியானால், அடைய முடியாத குறிக்கோளாகக்கூட இருக்கலாமா?' என்றால், அதுவே மிக உயர்ந்ததாகும் என்றும் கூறுகிறார். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை பயனற்றதாகி விடும். ஆதலால், மனித வாழ்க்கையில் இன்றியமையாது வேண்டப்படும் இது மிக மிக உயர்ந்ததாக இருப்பது நலம் பயக்கும்.

பெருஞ்சித்திரன் என்ற புலவன் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவன். உண்மையான புலவனுக்கு உரிய சிறந்த இலக்கணமாகிய வறுமை அவன் கூடவே பிறந்திருந்தது. குமணனை நோக்கி அவன் பாடுகின்ற பாடலில், ''ஐயா, சமைக்கின்ற பாத்திரம் பல காலமாக அடுப்பில் ஏறாததால் எங்கள் வீட்டு அடுப்பின் மேலுள்ள குமிழ் தேயவே இல்லை. பாலில்லாத மார்பைச் சுவைத்து அழுகின்ற என் குழந்தையைப் பார்த்துக் கண்ணீர் விடுவதைத் தவிர என் மனைவி வேறொன்றும் செய்ய இயலாது இருக்கிறாள்,'' என்ற கருத்தில் பாடுகின்ற அளவுக்கு வறுமையின் எல்லைக்கோட்டில் நின்றவன் பெருஞ்சித்திரன்.

இவ்வளவு வறுமையுடைய இப்புலவன் வெளிமான் என்ற சிற்றரசனை ஒரு முறை கண்டு பரிசில் பெறச் சென்றான். இவன் சென்ற நேரத்தில் அச்சிற்றரசன் உறங்கிக் கொண்டிருந்தான். தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு எழுந்து வர விரும்பாத அவன், தன் தம்பியை நோக்கி, 'புலவனுக்குப் பரிசில் ஏதேனும் கொடுத்து அனுப்பிவிடுக!' என்று கூறினான். அத்தம்பி புலவன்

# 16. உயிரையும் தருவர்

சின்னக் குழந்தை ஒன்று கையில் ஒரு மிட்டாயை வைத்துச் சுவைத்துக்கொண்டு நிற்கின்றது. மிட்டாய் வாங்கித் தின்னக்கூடிய சக்தி அற்ற அடுத்த வீட்டுக் குழந்தை ஒன்று இக்குழந்தையைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே நிற்கின்றது. இவ்வாறு மற்றக் குழந்தைகள் தம்மைக் காண்பதைக் கண்டவுடன், சில குழந்தைகள் பழிப்புக் காட்டிவிட்டு வீட்டினுள்ளே ஓடி மறைந்துவிடும் ஆனால், ஒரு சில குழந்தைகள் இவ்வியல்புக்கு முற்றிலும் மாறாக நடந்துகொள்வதையும் காணமுடியும்.

பரிதாபத்தோடு தன்னைப் பார்க்கும் குழந்தையை, மிட்டாய் தின்னும் குழந்தை மிக்க பரிவோடு கவனிக்கின்றது; தன்னை யாராவது கவனிக்கின்றார்களா என்பதைச் சுற்றும்முற்றும் ஒரு முறை கவனிக்கின்றது. உடனே அக்குழந்தையும் அஞ்சிக்கொண்டே வருகிறது. உடனே தான் தின்றுகொண்டிருக்கும் எச்சில் மிட்டாயில் பாதியைக் கடித்துக் கொடுத்து ஓடிப் போகுமாறு கூறுகிறது, தின்றுகொண்டிருக்கும் குழந்தை!

தின்ற எச்சில் மிட்டாயில் பாதியைக் கடித்துக் கொடுப்பது ஒரு பெரிய காரியமா என்றுகூடச் சிலர் நினைக்கலாம். உண்மையை ஆராயுமிடத்து, இச் செயல் மிகமிகப் பெரிய காரியம் என்றே கூறவேண்டும். கை

# 16. உயிரையும் தருவர்

சின்னக் குழந்தை ஒன்று கையில் ஒரு மிட்டாயை வைத்துச் சுவைத்துக்கொண்டு நிற்கின்றது. மிட்டாய் வாங்கித் தின்னக்கூடிய சத்தி அற்ற அடுத்த வீட்டுக் குழந்தை ஒன்று இக்குழந்தையைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே நிற்கின்றது. இவ்வாறு மற்றக் குழந்தைகள் தம்மைக் காண்பதைக் கண்டவுடன், சில குழந்தைகள் பழிப்புக் காட்டிவிட்டு வீட்டினுள்ளே ஓடி மறைந்துவிடும் ஆனால், ஒரு சில குழந்தைகள் இவ்வியல்புக்கு முற்றிலும் மாறாக நடந்துகொள்வதையும் காணமுடியும்.

பரிதாபத்தோடு தன்னைப் பார்க்கும் குழந்தையை, மிட்டாய் தின்னும் குழந்தை மிக்க பரிவோடு கவனிக்கின்றது; தன்னை யாராவது கவனிக்கின்றார்களா என்பதைச் சுற்றும்முற்றும் ஒரு முறை கவனிக்கின்றது. உடனே அக்குழந்தையும் அஞ்சிக்கொண்டே வருகிறது. உடனே தான் தின்றுகொண்டிருக்கும் எச்சில் மிட்டாயில் பாதியைக் கடித்துக் கொடுத்து ஓடிப் போகுமாறு கூறுகிறது, தின்றுகொண்டிருக்கும் குழந்தை!

தின்ற எச்சில் மிட்டாயில் பாதியைக் கடித்துக் கொடுப்பது ஒரு பெரிய காரியமா என்றுகூடச் சிலர் நினைக்கலாம். உண்மையை ஆராயுமிடத்து, இச் செயல் மிகமிகப் பெரிய காரியம் என்றே கூறவேண்டும். கை

நிரம்ப மிட்டாய் இருப்பினுங்கூடக் 'கொடுப்பது' என்பது ஒரு சிலருக்கே உரியது. அதிலும் ஒரே ஒரு மிட்டாய், அதுவும் தின்றுகொண்டிருக்கும் நிலையில் உள்ள ஒரு மிட்டாயைக் கொடுக்க வேண்டுமானால் அது அனைவரும் செய்யக்கூடிய ஒரு செயலன்று. இதனை ஒரு தனிப்பட்ட மனநிலை என்றே கூற வேண்டும். 'விளையும் பயிர் முளையிலே' என்பது இந்த நாட்டின் பழமொழி. பிற்காலத்தில் எதனையும் வழங்கக்கூடிய இயல்புடையவர் களாக இருப்பவர்கள் இளமைக் காலத்திலும் இதே மன நிலையைப் பெற்றிருப்பார்கள்.

இவ்வாறு கூற மற்றொரு காரணமும் உண்டு. கொடுக்கும் இயல்பு என்பது பிறப்பிலேயே அமைய வேண்டுமே தவிர, பழகிக்கொண்டால் வரக்கூடிய ஒன்றன்று. ஆதலாலேதான், தான் தின்றுகொண்டிருக்கும் மிட்டாயைப் பகிர்ந்து அளிக்கும் குழந்தையைப் போற்று கின்றோம்.

'அன்பு' என்ற மூன்று எழுத்துக்களால் ஆன ஒரு சொல் உலகத்தையே ஆட்டிப் படைக்கின்றது என்று கூறினாலும் தவறு இல்லை. தான் தின்றுகொண்டிருக்கும் மிட்டாயைப் பகிர்ந்து கொடுக்கும் குழந்தை இந்த மூன்றெழுத்துப் பொருளை மிகுதியாகக் கொண்டுள்ளது. அன்பென்பது இயல்பாகவே பிறப்பில் வர வேண்டிய ஒன்று.

அன்பு என்பது யாது? அது ஒருவகை மன உணர்ச்சியே ஆகும். தன்னை அல்லாத பிற உயிர்களிடம் ஏற்படும் பரிவு, கருணை என்பனவற்றையே அன்பு என்று கூறுகின்றோம். ஏனைய உணர்ச்சிகளைத் தாங்கியுள்ள மனத்தில், அன்பு உணர்ச்சி நிரம்பும் பொழுதுதான் மனிதன் மகாத்துமா ஆகிறான். உலகிடைப் பிறக்கும் எந்த உயிரும் வளர வேண்டுமானால், 'அன்பு' என்ற ஒன்று தேவைப்படும்.

தாய் குழந்தையிடம் காட்டுவதும், விலங்குகள் தம் குட்டிகளிடம் காட்டுவதும் ஆகிய இவ்வன்பாலேதான் உலகம் வாழ்கிறது என்று கூறினால் இதில் வியப்பு ஒன்றுமே இல்லை. ஏனைய பண்புகள் எத்துணை நிரம்பி இருப்பினும் ஒருவன் மனிதன் என்று வழங்கப்பட வேண்டுமானால், 'அன்பு' உடையவனாக இருத்தல் வேண்டும். விலங்கு, மனிதன், தெய்வம் என்ற மூன்று நிலையில் உள்ளவர்களையும் இணைப்பது இது ஒன்று தான்.

மனிதன் தன்னைப் போன்ற உயிர்களிடத்தும் இறைவனிடத்தும் காட்ட வேண்டிய இந்த அன்பு வெளிப்படும்பொழுது எவ்வாறு இதனை அறிந்து கொள்வது? உள்ளத்துள் தோன்றும் அன்பை அடைக்க முடியாது என்றும், அதனைப் பிறர் எளிதாக அறிந்து கொள்ள முடியும் என்றும் குறள் கூறுகின்றது. அன்புடையார் கண்களே மிகச் சிறந்த அறிவிக்கும் கருவிகளாகும். உள்ளத்தின் உள்ளே இருக்கும் அன்பை வெளிக் காட்டக் கண்ணீர் பயன்படுகின்றதாம். எல்லையற்ற அன்பைப் பல சொற்களால் கூறுவதைக்காட்டிலும் இரண்டு சொட்டுக் கண்ணீரின் மூலம் நன்கு சொல்லி விடலாம். இறைவன் கூட இந்தக் கண்ணீருக்கு ஆசைப்படு கிறான் என்று பழைய பாடல் ஒன்று கூறுகின்றது.

'அளவு மிகுந்த புண்ணிய நதிகளிலிருந்து கொண்டு வரப்படும் தண்ணீர், ஏழு கடல்களிலிருந்து வரும் தீர்த்தம் ஆகியவற்றில் மூழ்குவதைக் காட்டிலும், அன்பர்களுடைய கண்ணிலிருந்து வரும் கண்ணீரிலேயே நீராட விரும்பு கிறாளாம் அம்பிகை' என்ற கருத்தைப் 'பாசவதைப் பரணி' என்ற நூல், 'என் பாவம் ஆறு கடல் ஏழியிருந்து என் அம்மை அன்பாளர் கண்ணருவி ஆடுவது திருவுள்ளம்' என்று பாடிச் செல்கிறது.

இவ்வளவு மானிட உயிர்களுக்கும் பெருந்தேவையாக உள்ள அன்பு ஒரு சிலரிடம் மிகுதியாக இருந்து அவர்

களைச் செயற்கருஞ்செயல் செய்யும் மகாத்துமாக்களாகச் செய்கிறது. இன்னும் சிலரிடம் இருக்க வேண்டிய அளவு இருந்து, மனித இயல்புடையவர்களாகச் செய்கிறது. ஒரு சிலரிடத்தில் இருக்க வேண்டிய அளவில் குறைந்து அவர்களை விலங்கு நிலையிலும் கீழான நிலையினை அடையச் செய்துவிடுகிறது.

இத்தமிழ் நாட்டில் திருக்குறள் என்னும் ஒப்பற்ற நூல் தோன்றுவதற்குப் பல காலம் முன்னரே சிபிச் சக்கரவர்த்தி என்ற ஒரு சோழ மன்னன் இந்நாட்டை ஆட்சி செய்து வந்தான். அரசனுக்கு வேண்டிய எல்லா நலன்களும் தகுதிகளும் நிறைந்திருந்த அவன், இங்குக் கூறப்பெற்ற 'அன்பு' என்ற பொருளை எல்லை மீறிப் பெற்றிருந்தான். அவனுடைய அன்பின் விரிவில் மக்களும் விலங்குகளுங்கூட ஒன்றாகவே காட்சியளித்தனர். உண்மை அன்பு சுரக்குமானால், அன்பு காட்டப்படும் பொருள் களிடம் வேற்றுமை பாராட்ட முடியாதல்லவா?

இறைவனிடம் விரிகின்ற அன்பால், இறைவனுடைய படைப்புக்களைக் காணும்பொழுது சகோதர உணர்ச்சி இயல்பாகவே உண்டாகுமல்லவா? சிபி ஒரு நாள் அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தான். அவன் காலடியில் மிகுந்த அச்சத்துடன் ஒரு புறா வந்து வீழ்ந்தது. அப்புறாவைக் கையில் எடுத்து அதன் அச்சத்தைப் போக்க முயன்றான் சிபி.

அதே நேரத்தில் பருந்து ஒன்று அவனிடம் கோபத்துடன் பறந்து வந்து, தன் உணவாகிய புறாவை அவன் விட்டுவிட வேண்டும் என்று வழக்காடியது. சிபியின் விரிந்த அன்பின் முன்னர் உயிருக்கு மன்றாடும் புறாவின் நடுங்கிய உடலும், பசியால் வருந்திய பருந்தின் உடலும் காட்சியளித்தன. வேறு உணவைத் தந்து பருந்தின் பசியைப் போக்க முயன்றாலும் பருந்து ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. இறுதியாகத் தன் உடம்பில் உள்ள

தசையில் புறாவின் எடைக்குச் சமமான அளவு தசையை அரிந்து தருவதாக ஏற்றுக்கொண்டான் சிபி. தராசை நட்டுப் புறாவை ஒரு தட்டில் வைத்து, மற்றொரு தட்டில் கொஞ்சங்கொஞ்சமாக தன் உடம்பின் தசைப்பகுதியை அரிந்து அரிந்து வைத்தான்! என்ன அதிசயம்! தட்டு நேர் படவே இல்லை! இறுதியாக தானே அத்தட்டில் ஏறி விட்டான். கருணைவள்ளலாகிய சிபி ஏறியவுடன் அத் தட்டும் புறாவைத் தாங்கும் தட்டும் நேர் நின்றன

கேவலம் ஒரு புறாவின் எடை தன்னுடைய எடையின் அளவுக்குச் சமமாக இருக்கமுடியுமா என்ற பகுத்தறிவு ஆராய்ச்சியில் சிபி நுழையவில்லை. அங்ஙனம் நுழைந் திருப்பானேயானால், இன்று அவனை முதலாகக் கொண்ட ஒரு திருக்குறள் தோன்றப் போவதில்லை. அன்பு உடையவர்கள் பல சமயங்களில் பிறர் அறிந்து கொள்ளுகின்ற சாதாரண விஷயங்களைக் கூட அறிந்து கொள்ள முடிவதில்லை. மகன் எவ்வளவு வலிமை உடையவனாயினும், பெரிய பயில்வானாயிருப்பினும், தாய் அவனுடைய வன்மையையும், சத்தியையும் அறிந்து கொள்வதே இல்லை. காரணம், அவள் அணிந்திருக்கின்ற அன்புக் கண்ணாடியில் மகனுடைய உண்மைச் சத்தி விளங்குவதே இல்லை. அதே போலப் புறாவின் துடிப்பையும், பருந்தின் பசியையும் காண்கின்ற சிபியின் அன்புக் கண்களில் புறாவின் எடை பற்றிய கவலை தோன்றவேயில்லை. அதனாலேதான் தராசில் தானே ஏறிவிட்டான். ''தன் அகம் புக்க குறுநடைப் புறவின் தபுதி அஞ்சிச் சீரை புக்கோன்'' என்று புறநானூறும், ''புறவு ஒன்றின் பொருட்டாகத் துலை புக்க பெரியோன்'' என்று இராமனும், ''என் அறு சிறப்பின் இமையவர் வியப்பப் புள்ளுறு புன்கண் தீர்த்தோன்'' என்று கண்ணகியும் போற்றும் சிறப்பைப் பெற்றான் சிபி.

குறள் கண்ட வாழ்வைச் சிபி வாழ்ந்தான் என்று கூறுவது பொருத்தமற்றது. 'சிபி வாழ்ந்த ஒப்பற்ற

வாழ்வைக் கண்ட குறள், அவ்வாழ்வின் அடிப்படையை உலகம் முழுவதும் அறிந்து கொண்டால் பெரும் பயன் கிடைக்கும் என்று கருதி, அவ்வாழ்வையே ஒரு குறளில் சாறாகப் பிழிந்து தந்தது.

> 'அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர்; அன்பு உடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு'

என்ற குறள் அன்புடைப் பெரியவர்கள் பிறருக்கு உயிரையும் வழங்கும் இயல்பை எடுத்துக் காட்டுகிறது. இன்றும் உலகிடை இத்தகைய பெரியவர்கள் இல்லாமல் இல்லை.

# 17. மாறுபடும் நீதி

நீதி என்று சொன்னவுடன் அனைவருக்கும் பொதுவாய், எக்காலத்தும் மாறாததாய் இருக்கும் ஒன்றையே அனைவரும் நினைப்பார்கள். ஓரளவுக்கு இவ்வாறு நினைப்பதும் நியாயமானதே. ஆனால், இந்த உலகத்தின் ஒரு தனிப்பட்ட சிறப்பு எது என்றால், எந்த ஒன்றும் மாறாமல், எக்காலத்தும் எல்லாவிடத்தும் நிலை பெற்றிருக்கும் என்று சொல்ல முடியாதிருக்கின்ற ஒரே சிறப்புத்தான். ஒரே நாட்டில், ஒரு காலத்தில் போற்றப் பட்ட ஒரு நீதி, மற்றொரு காலத்தில் அதே நாட்டில் ஏற்றுக் கொள்ளப்படும் என்றுகூடச் சொல்வதற்கில்லை.

இவ்வுண்மையை அறியாது போனால், பல சமயங் களில் இடர்ப்பட நேரிடும்; உலகில் நிகழ்கின்ற நிகழ்ச்சி களுக்கு, நல்ல முறையில் பொருள் செய்ய முடியாமல் வருந்தவும் நேரிடும். ஒவ்வொருவர் செய்கின்ற செயலையும், அன்று சமுதாயத்தாரால் ஒப்புக் கொள்ளப் பெற்ற நீதி என்ற உரை கல்லில் உரைத்துத்தான் நியாய மானதா அன்றா என்று முடிவுக்கு வருகின்றோம். ஒரு சமுதாயத்தினர் ஒரு செயலை நீதியானது என்று கருது கின்றனர். அதே செயலை அதே காலத்தில் வேறோர் இடத்தில், அல்லது அதே இடத்திலுங்கூட வாழ்கின்ற மற்றொரு சமுதாயம் நீதியற்றது என்று கருதுகிறது. ஆகவே, எந்த ஒரு செயலையும் ஆராய்ந்து முடிவு

கட்டுவதற்கு முன்னர், செயலைச் செய்தவர், செய்யப் பட்ட இடம், காலம், சூழ்நிலை, செய்யப்பட்ட மனநிலை ஆகிய அனைத்தையும் கொண்டு பொருள் செய்தாலன்றி, உண்மையை உணர முடியாது.

உதாரணமாகச் சினம் கொள்ளக்கூடாது என்பது யாண்டும் யாரும் எக்காலத்தும் ஒப்புக்கொண்டுள்ள ஓர் அறமாகும். இங்ஙனம் சில அறங்கள் அல்லது நீதிகள் எக்காலத்தும் யாவர்க்கும் பொதுவாகவுள்ளவை என்று சொல்லப்படும். 'பிறருக்குத் தீங்கு இழைத்தல் கூடாது; சினங்கொள்ளக்கூடாது; பொய் பேசக்கூடாது,' என்பன போன்ற அறங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. ஆனால், ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், என்றும் மாறாதவை என்று சொல்லப்படக்கூடிய இவைகூடக் கால, தேச, வர்த்தமானத்தால் மாறுபடும் இயல்புடையனவாகவே இருக்கக் காணலாம்.

''மறந்தும் பிறன் கேடு சூழற்க!'' என்ற குறளை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, சத்தியாக் கிரகத்தைக் கண்டு, சொல்லி, வாழ்ந்து காட்டிய மகாத்துமா காந்தி, 'எத்தனை துன்பம் நேர்ந்தாலும் சத்யாக்கிரக வாழ்க்கையை மேற்கொண்டவன் பலாத் காரத்தை மேற்கொள்ளக்கூடாது' என்று பல முறை கூறியுள்ளார். அவருடைய வாழ்வில் அங்ஙனமே வாழ்ந்து காட்டினார் என்பதும் உலகம் அறிந்த உண்மைதான். என்றாலும், பிரிவினைக் காலத்தில் கயவர்கள் மகளிரை மானபங்கம் செய்யும் நிலை ஏற்பட்டது. அப்பொழுது அடிகளாரைச் சந்தித்துச் சிலர் சூழ்நிலையை விளக்கி, 'இத்தகைய நிலையில் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார்கள். சிறிதும் தயக்கமில்லாமல் அடிகளார், ''நீங்கள் பேடிகளாக இருந்தாலொழியச் சும்மா இருக்க வேண்டுவதில்லை,'' என்று விடை இறுத்தார்.

'மகாத்துமாஜியா இங்ஙனம் கூறினார்?' என்றுகூடச் சிலர் நினைக்கலாம். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால்

மேலே நாம் சொன்ன உண்மை நன்கு விளங்கும். எந்த ஒரு நீதியும் கால, தேச, வர்த்தமானங்களுக்குக் கட்டுப் பட்டதே தவிர, தனியே இருப்பதில்லை. இதனை நன்கு உணர்ந்த காரணத்தால் வாழ வழி வகுத்த குறள், நீதி புகட்டும்பொழுது இதை மறவாமல் செய்து வந்தது. உதாரணமாக ஒன்று காணலாம்.

குறளின் மூன்றாவது அதிகாரமாகிய ''நீத்தார் பெருமை'' என்ற அதிகாரத்தில் ஒன்பதாவது குறள் 'சிறந்த பண்பாடுடைய பெரியோர்கள் கோபம் கொண் டால், அக்கோபத்திலிருந்து யாரும் தங்களை ஒரு கண நேரங்கூடக் காத்துக் கொள்ள முடியாது,' என்ற பொருளில்,

''குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி,
கணமேயும் காத்தல் அரிது!''

என்று காட்டுகிறது. ஆனால், இதே குறள், முப்பத் தொன்றாம் அதிகாரத்தில் கோபமே கொள்ளக்கூடாது என்ற பொருளில் 'வெகுளாமை' என்ற ஓர் அதிகாரமே பாடிச் செல்கிறது.

அந்தக் குறளையும், இந்த அதிகாரத்தையும் காணும் பொழுது, பெருநூலாகிற குறள்கூட முன்னுக்குப் பின் முரண்படப் பாடுமோ என்று சிலர் ஐயங்கொள்கின்றனர். இது போன்ற மாறுபட்ட கருத்துக்களைக் கூறும் இயல்பு இந்நூலில் பல இடங்களில் காணப்படும். ஆழ்ந்து சிந்தித்தாலொழிய, இவற்றை முரணான கருத்துக்கள் என்றே குழம்ப நேரிடும். 'வெகுளாமை' போன்ற அதிகாரங்களில் சொல்லப்பட்ட பொருள்கள் அனைத்தும் குறள் கூறிய வழியில் வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்ற நம் போன்றவர்க்கு உரியனவாகும். ஆனால், 'நீத்தார் பெருமை' போன்ற அதிகாரங்களில் சொல்லப்பட்ட குறள்கள், நமக்கு வழிகாட்டிகளாக

அமைந்தவர்களுடைய வாழ்வை, எடுத்துக் கூறுகின்ற முறையில் அமைந்துள்ளன.

அதாவது, குறள் நமக்கு வழி காட்டுகின்ற முறை ஒன்று. அந்தக் குறளுக்கு நீதிகளை எடுத்துச் சொல்ல யார் கற்றுத் தந்தார்கள்? யாருடைய வாழ்விலிருந்து இந்த நீதிகளைக் குறள் எடுத்துக் கூறத் தொடங்குகிறது? அந்தப் பெரியவர்கள் வாழ்க்கைகளை நாம் கடைபிடிக்க முடியாது. அவர்கள் புற நடை (Exceptions) வாழ்க்கை வாழ்ந்தவர்கள். அந்த வாழ்விலிருந்து கிடைத்த சாரத்தைத்தான் குறள் நமக்குப் பக்குவப்படுத்திக் தருகிறது. சினம் கொள்ளக்கூடாது என்பதற்குக் குறள் ஓர் அதிகாரத்தையே செலவழிக்கின்றது. சினத்தைக் கொண்டவன் அழிந்துவிடுவது உறுதி என்றுகூடக் குறள் பேசுகிறது. என்றாலும், இதனை மீறிச் சினம் கொண்டு அதனால் வீடு பேற்றையே அடைந்த பெரியவர்களும் உண்டு.

சோழ வளநாட்டில் சேய்ஞலூர் என்ற ஊரில் எச்சதத்தன் என்ற அந்தணனுக்கு விசாரசருமன் என்ற ஓர் அருமை மைந்தன் பிறந்தான். ஐந்து வயதிலேயே அனைத்துக் கலைகளையும் கற்றுத் தெளிந்த விசாரசருமன், பசுக்களைக் காத்தலின் அவசியத்தை உணர்ந்து, அவ்வூரிலுள்ள பசுக்கள் அனைத்தையும் தானே மேய்க்கத் தொடங்கினான். ஊரிலுள்ளவர்களும் இலவசமாக மாடு மேய்க்க ஓர் அந்தணச் சிறுவன் கிடைத்தவுடன், மகிழ்ச்சியோடு மாடுகளை ஓட்டிவிட்டார்கள்.

ஊரின் பக்கத்திலே ஓடுகின்ற மண்ணி ஆற்றங்கரையில் மாடுகளைக் காலாற மேய விட்டு மணலிலே சிவன் கோயில் அமைத்து விளையாடத் தொடங்கினான் விசாரசருமன். காலாற மேய்ந்த காரணத்தால் மாடுகள் இயல்பாகப் பாலைப் பெருக்கின. பால் கீழே போவதை அறிந்த விசாரசருமன் அப்பாலைக் குடங்களில் ஏந்தி

ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்து விளையாடினான். நாளாவட்டத்தில் இதனை அறிந்த ஊரார்கள் அவனுடைய தந்தையாகிய எச்சதத்தனிடம் சென்று விசாரசருமன் செய்கின்ற செயலை எடுத்துக் கூறினார்கள்.

ஒரு நாள், மகன் மாடுகளை ஓட்டிச் சென்ற பிறகு எச்சதத்தன் அவன் பின்னேயே சென்று, என்ன நடைபெறு கிறது என்று காண்பதற்காக ஒளிந்திருந்தான். தந்தை வந்ததை அறியாத விசாரசருமன் தான் அன்றாடம் செய்யும் பூசையில் முழு மனத்தோடு ஈடுபட்டுவிட்டான். அபிஷேகம் நடைபெறுகின்ற நிலையில் ஒளிந்திருந்த எச்சதத்தன் வெளியே வந்து மகனைப் பலவாறு ஏசினான்; அடித்தான்; ஆனால், அச்சிறிய பெருந்தகை உள்ளத்தா லும் உடலாலும் இறை வழிபாட்டில் கலந்துவிட்ட காரணத்தால், எச்சதத்தன் அடித்ததையோ ஏசியதையோ கவனிக்கவே இல்லை.

மேலும் கோபம் கொண்ட எச்சதத்தன், இறைவனுக்கு அபிஷேகம் செய்வதற்காக வைத்திருந்த பாற் குடங்களைக் காலால் எட்டி உதைத்தான். அபிஷேகப் பால் கீழே சிந்தியதை கண்ட விசாரசருமன் தியானம் கலைந்து திரும்பிப் பார்த்தான். தன் உடம்புக்குத் தந்தை செய்த துன்பத்தைப்பற்றி அவன் கவலைப்படவில்லை; இறைவன் பூசைக்கு ஊறு செய்தமை யால் கடுஞ்சினம் கொண்டான்; பக்கத்தே கிடந்த கோல் ஒன்றை எடுத்தான். அது மழுவாக (வெட்டும் ஆயுதம்) மாறியது. தந்தையின் கால்களைத் துணித்துவிட்டான்.

விசாரசருமர் பிற்காலத்தில் சண்டேசுர நாயனார் என்று வழங்கப்பட்டார். எல்லை மீறிய சினம் கொண்டு அதன் பயனாகத் தந்தையின் கால்களையே வெட்டிய ஒருவர், பெரிய அடியார் ஆயினார் என்றால், குறள் சொல்லிய 'வெகுளாமை' என்ற அதிகாரம் இவரளவில்

பொய்த்துவிட்டதோ என்று கருத வேண்டா. அறம் மாறுபடும் என்று கருதிய குறள் நம் போன்றவர்கட்கு வெகுளாமை என்ற அதிகாரத்தைச் சொல்லிவிட்டு, இத்தகைய பெரியோர்களின் வாழ்க்கையைச் சாறாகப் பிழிந்து 'நீத்தார் பெருமை' போன்ற அதிகாரங்களில் பேசுகிறது. இவை குறள் நமக்காகக் கண்ட வாழ்வன்று; குறள் தோன்றுவதற்கு மூலகாரணமாய் அமைந்த வாழ்க்கைகளாகும். 'குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி, கணமேயும் காத்தல் அரிது!' என்ற குறளுக்கு இலக்காகும் இவர் வாழ்வு.

# 18. சோர்வு இலாள் பெண்

இந்த உலகில் வாழும் மக்களுள் பெண்களின் இடம் யாது? ஒவ்வொரு சமுதாயத்திலும் பெண்டிர் ஒரு காலத்தில் மிக உயர்வாகவும், ஒரு காலத்தில் மிகத் தாழ்வாகவும் வைக்கப்பட்டிருந்தனர். இன்று நாகரிகம் மிகுந்ததாகப் பெருமை படுத்திக்கொள்ளும் நாடுகளில் எல்லாங்கூடப் பெண்களின் நிலை மிகச் சமீப காலத்திலே தான் உயர்வு பெற்றது.

இத்தகைய உயர்வையும், உரிமையையும் பெறுவதற்கு அவர்கள் நடத்திய போராட்டம் நூற்றாண்டுக் கணக்கில் நடைபெற்றதாக வரலாறு கூறுகின்றது. ஒவ்வொரு முறையும் போராட்டம் நடத்தி, அங்குலம் அங்குலமாக அவர்கள் உரிமையைப் பெற்றுள்ளார்களே தவிர இவ்வுரிமையை ஆண்களே விரும்பி அவர்கட்குத் தந்ததாகத் தெரியவில்லை. இத்தகைய சூழ்நிலை ஏனைய நாடுகளில் பரவி இருந்த நிலையில், இத்தமிழ் நாட்டின் நிலை முற்றும் வேறு விதமாய் இருந்தது.

இப்பகுதியில் மகளிரைப் பெரிதும் மதித்து நடக்கும் வழக்கம் மிகு பழங்காலத்திலேயே இருந்ததாக அறிகின்றோம். ஔவையார், வெள்ளிவீதியார் போன்ற நூற்றுக்கணக்கான பெண்பாற்புலவர்கள் வாழ்ந்து கவிதை புனைந்த ஒரு நாட்டில் பெண்ணுரிமை பற்றிப் பிரசங்கம் புரிய வேண்டிய இன்றியமையாமை ஏற்

பட்டிராது. எனவே, இம்மகளிர் உரிமையைப் போராடிப் பெற வேண்டிய அவசியமோ, அதற்காகப் பிறரைப் பகைத்துக்கொள்ள வேண்டிய தேவையோ ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அவ்வளவு போராடி உரிமையை நிலை நாட்டியதாலே தான் போலும், அந்நாட்டு மகளிர் நம் நாட்டு மகளிரை விடப் பல படிகள் அதிகப்படியாகக் கூடச் சென்று விட்டனர்! உரிமை என்ற பெயரில் அந்நாடுகளில் நடைபெறும் ஆபாசங்கள் பற்றி அந்நாட்டவர்களே வருந்தத் தொடங்கியுள்ளார்கள். உரிமை என்பது வரையறை நன்கு கணிக்கப்படாத ஒன்று. பல சமயங் களில் நம்முடைய உரிமை என்பது அடுத்தவருடைய உரிமையில் கை வைப்பதாகக்கூட முடிந்துவிடுவதைக் காண்கிறோம். உதாரணமாக, ஒன்று காணலாம். அதிக விலை கொடுத்து வானொலிப் பெட்டி ஒன்றை அடுத்த வீட்டுக்காரர் வாங்கி வந்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். உரிமை பெற்ற இந்நாட்டில் தம்முடைய வானொலிப் பெட்டியை நேரம் காலம் இல்லாமல் வேண்டுமான அளவு சத்தத்துடன் திருப்பிவிடத் தமக்கு உரிமை உண்டு என்று நினைக்கின்றார் அவர்.

திருப்பிவிட அவருக்கு உரிமை உண்டு என்றாலும், அதன் பயனாக நம்முடைய காதுகள் செவிடாவது பற்றி யும் அவர் கவலைப்படத்தான் வேண்டும். தம்முடைய உரிமை ஒன்றோடு மட்டும் நின்று விடுவாரேயானால், உண்மையான உரிமையை அவர் உணர்ந்தவராக மாட்டார். உண்மை உரிமை ஒரு நாளும் பிறருக்குத் தீங்கு விளைவிக்காது. அப்படித் தீங்கு விளைவிக்கிற ஒன்றை நம்மவர் உரிமை என்று கூறியதே இல்லை.

மகளிர்க்கு உரிமை என்பது பற்றிக் குறள் தனியாக ஒன்றும் பேசவில்லை. அவ்வாறானால், மகளிர் உரிமை மறுக்கப்பட்ட காலமோ அது என்று யாரும் நினைக்க

வேண்டா. அவர்கள் உரிமை வழங்கப்படாத நாட்டிலே தான் அதைப்பற்றிப் பெரிதாகப் பேசும் இயல்பும் இருந்திருக்கும். ஆனால், உரிமை இயல்பாகவே அளிக்கப்பட்ட ஒரு நாட்டில் அதுபற்றித் தனியே பேச வேண்டிய இன்றியமையாமை இல்லை. உதாரணமாக வயிறு ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமான உறுப்புத்தான். என்றாலும், அவ்வயிற்றை ஓயாது நினைத்துக்கொண்டு இருப்பார், அல்லது அது பற்றிப் பேசுவார் யாரும் இலர்! ஏன்? வயிற்றில் பசியோ, நோயோ ஏற்பட்டாலொழிய ஒருவரும் வயிற்றைப் பற்றிப் பேசுவது இல்லை; நினைப்பதுகூட இல்லை. அதேபோல மகளிர் உரிமை என்பது மிகச் சிறந்த ஒன்றாக இருப்பினும் அன்றாட வாழ்க்கையில் இருந்து வந்த காரணத்தால் அதுபற்றித் தனியே பேசவேண்டிய இன்றியமையாமை ஏற்பட இல்லை.

மகளிரைப் பற்றிப் பேச வந்த திருக்குறள் 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற ஓர் அதிகாரத்தை வகுக்கின்றது. வாழ்க்கைக்குத் துணையாக வரக்கூடிய ஒரு பெண்ணிடத்தில் இருக்க வேண்டிய சிறப்புக்களை எல்லாம் வரிசைப்படுத்திக் கூறுகின்றார் குறள் ஆசிரியர்.

'கற்பு எனப்படும் மன வலிமை ஒரு பெண்ணின் மாட்டு இருந்துவிடுமேயானால், அவளைவிடப் பெறுதற்கரிய பொருள் வேறு யாது?' என்று கேட்கின்றார். இவ்வாறு எல்லாம் மகளிரின் சிறப்பைப் பற்றிப் பேசி வந்த குறள், ஒரு பாடலில் மகளிர்க்குரிய இலக்கணத்தை அழகாக வகுக்கின்றது.

ஒரு பெண் முதலாவது தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்; அடுத்தபடியாகத் தன்னைக் கொண்டவனாகிய கணவனைக் காக்கவேண்டும்; மூன்றாவதாகத் தன்னுடைய கணவனுக்கும் தனக்கும் ஏற்பட்டுள்ள புகழை, நற்பெயரைக் காப்பாற்ற வேண்டும். இம்மூன்று காரியங்

களையும் ஒரு பெண் செய்யத் தொடங்கினால், அதைவிட வேறு சிறப்பு இருத்தற்கில்லை. இத்தகைய ஒரு பெண்ணைக் காட்டிலும் வேண்டத்தக்க பொருள் வேறு இல்லை என்று கூடச் சொல்லலாம். ஆனாலும், வாழ்வுக்கு வழி வகுத்த குறள் இதனோடு நிறுத்தவில்லை. இன்னும் ஒரு படி மேலே சென்று, ''இம்மூன்றையும் செய்பவள் பெண்; சோர்வு இல்லாமல், அதாவது ஒரு சிறிதும் தளர்ச்சி அடையாமல், விடாமல் இதனைச் செய்து கொண்டு இருப்பவளே பெண்ணாவாள்,'' என்றும் கூறுகிறது.

இக்குறள் கண்ட வாழ்வை வாழ்ந்த மகளிர் உலகில் எல்லாவிடங்களிலும் உண்டு; சிறப்பாக இந்தியாவாகிய இத் துணைக் கண்டத்தில் மிகுதியும் உண்டு. மிகச் சிறப்பாக இத் தமிழ் நாட்டில் பண்டு தொடங்கி இன்றளவும் பற்பலர் உண்டு என்று கூறினால் அதில் தவறு ஒன்றும் இல்லை.

காவிரிப்பூம்பட்டினத்துக் கற்பரசி கண்ணகியும், மாதவி பெற்ற பெண் மணிமேகலையும், சோழன் மகளாராய்ப் பிறந்து, பாண்டியன் மனைவியாராய்ப் புகுந்த மங்கையர்க்குத் தனி அரசியாரும் ஒரு சில எடுத்துக் காட்டுக்கள் ஆவர். குறளில் சொல்லப்பட்ட மூன்று கடமைகளையும் இறுதிவரை ஒரு சிறிதும் சோர்வு கட்டாமல் காத்த பெருமை இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கண்ணகிக்கும், ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மங்கையர்க்கரசியாருக்கும் உண்டு.

கணவனைப் பிரிந்த கண்ணகி, காவிரிப்பூம்பட்டினத்திலேயே கஷ்டத்தோடு உடன் பிறந்தவள். பெருங்குடி வணிகனின் பெருமடமகளாய்ப் பிறந்த காரணத்தால் அவள் துயரத்தைக் கண்டு உற்றார், உறவினர், தாய் தந்தையர் ஆகிய அனைவரும்— கட்டிய கணவன் நீங்கலாக அனைவருமே— அவள் துயரத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். நம் துயரத்தைப் பிறர் பங்கிடும் பொழுது

கூட, அதனை அளவு மீறிச் செய்வார்களானால், அதனால் துன்பந்தான் மிஞ்சும். ஓரளவு சகிப்புத்தன்மையோடு தன் துயரத்தைத் தானே பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறவர்களுக்குக்கூட ஊராரின் இத்தலையீடு மனவருத்தத்தையே உண்டாக்கும். எனவே, கண்ணகி தன்னைக் காத்துக்கொள்ள முடியாமல் வருந்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டது.

இனி அவளுடைய துயரத்தைப் பங்கிட வரும் அனைவருமே அவள் கணவனுடைய செயலை இடித்தும், இழித்தும் பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. கற்புக்கடம் பூண்ட கண்ணகி, அத்தகைய பழிச்சொல் தன் கணவனுக்கு வாராமல் இருக்க என்ன பாடுபட்டாளோ, நாம் அறியோம்! அவளால் முடிந்த வரை தன்னையும் தன் கணவனையும் காத்தாள். இறுதி வரை அவன் துயர் போக்க அவனோடு வாழ்ந்த பெருமாட்டி, இறுதியாக அவன் இறந்தபொழுதுங்கூட ஒரே ஒரு வருத்தத்தைத் தான் மிகுதியாக அடைகின்றாள். மூன்றாவதாக உள்ள தகை சான்ற சொல் போய்விடுகின்ற நிலைமை மதுரை மாநகரில் எழுந்தது.

''பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த, ஒரு தனிக் குடிகளோடு உயர்ந்து ஓங்கு செல்வத்தானாகிய'' கோவலன், இன்று இம்மதுரையில் கள்வன் என்ற பெயர் சூட்டப்பட்டுக் கொல்லப்பட்டான். பிறந்தவர் இறந்து தீரவேண்டும் என்ற உண்மையை அறியாதவள் அல்லள் கண்ணகி. எனவே, கணவன் இறந்த துயரத்தைக் காட்டிலும் அதிகமாக, 'அவன் கள்வன்' என்று சொல்லப்பட்டதனால் துயர் அடைந்தாள். உடனே கதிரவனை நோக்கி, ''ஐயா! உலகத்திலுள்ள பொருள்களை எல்லாம் உயரத்திலிருந்து கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருக்கிறாயே! என்னுடைய கணவன் கள்வனா?'' என்ற பொருளில்

பேசினாள். "அவன் கள்வன் அல்லன். அவனைக் கள்வன் என்று சொல்லிய இம்மதுரை நகரம் தீயால் அழிக்கப் படும்!" என்று கதிரவன் விடை பகர்ந்தான்.

கோவலனைக் கள்வன் என்று தவறாகப் பழி சூட்டிய அதே மதுரை நகரில் ஐந்து நூற்றாண்டுகள் கழித்து மங்கையர்க்கரசியார் என்ற ஒரு பெருமாட்டியார் தோன்றினார். அவருடைய கணவன் சரித்திரப் புகழ் வாய்ந்த 'நின்ற சீர் நெடுமாறன்' என்ற பாண்டியன். அவன் சமண சமயத்திலே புகுந்து விட்டான். தமிழ் நாட்டு வீரங்குறையாத மங்கையர்க்குத் தனி அரசியார், கணவன் தவறான வழியில் புகுந்தான் என்பதற்காக மனம் உடைந்து விடாமல், அவன் வழிக்குத் தாமும் சென்று விடாமல், மெல்ல மெல்ல அவனைத் தம் வழிக்குக் கொண்டு வந்த வரலாற்றைத் தமிழ் உலகம் நன்கு அறியும்.

பெண்களை மதிக்காமல், அவர்களுக்கு மோட்சம் இல்லை என்று சொல்லுகின்ற வேற்று நாட்டாரிடையே, மங்கையர்க்கரசியார், கண்ணகியைப் போலவே,

> "தன் காத்துத் தன் கொண்டான் பேணித் தகைசான்ற
> சொல் காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற குறளுக்கு இலக்கியமாய் வாழ்ந்தார்.

இக்குறள் கண்ட வாழ்வை அவ்வக்காலத்தில் தமிழ் நாட்டு மகளிர் பலரும் மேற்கொள்ளுதலினால்தான், எத்தனையோ இனங்கள் இன்று இல்லாமல் அழிந்து விட்டாலும், இத்தமிழ் இனம் மட்டும் அழியாமல், நிலை பெற்று நின்று வலுவோடு வாழ்ந்து வருகிறது.

# 19. உலகத்தார் உள்ளத்தில்!

பழங்கால அரசர்களுடைய கதைகளைப் படிக்கும் பொழுது சில வேடிக்கையான சந்தேகங்கள் தோன்றுவது உண்டு. ஒவ்வோர் அரசனைப் பற்றிச் சொல்லும் பொழுதும், அவன் மூவுலகத்தையும் ஒரு குடைக்கீழ் ஆண்டவன் என்று சொல்லப்படும். சக்கரவர்த்தி என்ற பெயரை அவன் தரித்துக் கொண்டிருப்பான். என்றாலும், அவனுடைய ராஜ்யத்தின் நூறாவது மைலில் மற்றொரு சக்கரவர்த்தி ஆட்சி செய்வதும் உண்டு. அவனும் திரிலோக சக்கரவர்த்தியாகவே சொல்லப்படுவான். நூறு சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஒரு பகுதியில் இரண்டு சக்கரவர்த்திகள்— இரண்டு பேரும் திரிலோக சக்கரவர்த்தி என்ற பெயருடன் இருப்பது சற்று விந்தைதான்.

மிகப் பெரிய காவியங்கள் எழுதினவர்கள் கூட இதைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. ''எய் என எழு பகை எங்கும் இல்லாமல்'' மூவுலகத்தையும் ஒரு குடைக் கீழ் ஆண்டதாகத் தசரசன் பேசப்படுகிறான். ஆனால், தசரதனுடைய தலைநகருக்கு ஒரு சில காத தூரத்துக்குள்ளாகவே மிதிலையைத் தலைநகராகக் கொண்டு ஜனகன் ஆட்சி செய்திருக்கிறான். இருவரும் மூவுலகச் சக்கரவர்த்திகளே! இத்தகைய ஒரு வினோதத்தை அற்றை நாளில் யாரும் கவனித்ததாகவோ, இதற்குக் கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை!

இவ்வாறு கவிதை கூறுவதைக் கண்ட பலரும், மிகுந்த வன்மையையும், அகன்ற நிலப் பரப்பையும் எடுத்துக் காட்டுகின்ற உபசார வழக்காக இதனை ஏற்றுக் கொண்டார்களே தவிர, விஞ்ஞான ரீதியில், பூகோள ரீதியில், சரித்திர ரீதியில் இது உண்மையா என்று யாரும் ஆராய முற்படவில்லை. இவ்வாறு உயர்வு நவிற்சி அணியில் சொல்வது தமிழ் நாட்டில் மட்டும், தமிழர் மட்டும் செய்கின்ற தவறு என்று யாரும் கருத வேண்டா. உலகத்திலுள்ள எந்த இலக்கியத்தை எடுத்துக் கொண் டாலும் அது இவ்வாறு பேசுவதைக் காணலாம். ஹோமரினுடைய பெருங்காப்பியமாகிய 'ஒ தேசிய'த்தி லிருந்து நம் காலத்துக் கவிஞராகிய பாரதியார் பாடிய 'பாஞ்சாலி சபதம்' வரையில், இவ்வியல்பைக் காண்டல் கூடும்.

இங்ஙனம் உயர்வு நவிற்சி அணியில் பாடுவது காப்பியங்களுக்கும் கவிதைக்கும் உரிய இயல்பே அன்றி, திருக்குறள் போன்ற நீதி நூலுக்கு இயல்பு அன்று. ஆனால், சில குறள்களைப் படிக்கும்பொழுது நம்மையும் அறியாமல், 'இது முடியுமா?' என்று கேட்கின்றோம். உண்மையை ஆராய்ந்து பார்த்தால், குறள் உண்மையை உள்ளவாறு எடுத்துச் சொல்கின்றதே தவிர, உயர்வு நவிற்சி அணியை அதிகம் கையாளவில்லை என்பது நன்கு விளங்கும்.

'வாய்மை' என்றதோர் அதிகாரத்தை வள்ளுவர் பாடுகின்றார். பொய் பேசாது, உண்மை பேசுதலையே, நினைத்தலையே, வாய்மை என்று கூறுகிறோம். ஆனால் வாய்மையின் சிறப்பைக் கூறவந்த வள்ளுவர், ஏனைய பண்பாடுகளுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பை இதற்குத் தந்தார். வாய்மை பேசுகின்ற ஒருவனை உலகம் முழுவதும் போற்றும் என்று சொல்கிறார். இவ்வாறு சொல்லிவிட்டால் எத்தனையோ தடை விடைகளுக்கு இது காரணமாகலாம். வாயினால் சொல்கின்ற அளவில்

வாய்மை இருக்குமானால் போதுமா? உள்ளத்தைப் பற்றிக் கவலையில்லையா? பொய் சொல்ல வேண்டுமென்று நினைக்கின்றவர்கள் கூடப் பல சமயங்களில் அது இயலாத காரணத்தால் வாய்மையைப் பேசி விடுகின்றார்கள்! உண்மை பேசுதலைப் பற்றி மட்டும் வள்ளுவர் குறிப்பிட்டிருப்பாரேயானால் குற்றமற்ற ஒரு மனநிலையை அவர் குறிப்பிட்டிருக்க முடியாது ஆகவே, மிகவும் கவனத்தோடு, உள்ளத்திலே பொய்ம்மை இல்லாமல் வாழக் கூடுமேயானால், அங்ஙனம் வாழ்கின்ற ஒருவன் உலகத்திலுள்ளவர்களுடைய உள்ளத்தில் எல்லாம் வாழ்கின்றான் என்னும் கருத்துப்பட,

''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்''

என்று பாடுகிறார்.

இத்தகைய ஒரு குறளை இந்நூல் பாடுவதற்கு, உலகம் தோன்றிய நாளிலிருந்து ஒரே உதாரணம், அரிச்சந்திரனுடைய வரலாறு ஒன்றுதான். ஆனால், அந்த அரிச்சந்திரன்கூட, உலகத்தார் அனைவராலும் அறிந்து கொள்ளப்பட்டான் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், காசியில் சென்று, அவன் மனைவியை விற்று, அப்பால் தன்னையும் விற்றுக்கொண்டு, இடுகாடு காக்கின்றவனாய் நின்ற நிலையில், அவனை யாரும் அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை. எனவே, உலகத்திலுள்ளவர்கள் அனைவரும் அவனை அறிந்து கொள்ள முடியவில்லை. அப்படியால், குறள் கூறியது ஓரளவுக்கு உயர்வு நவிற்சி அணிதானோ என்றுகூடச் சிலர் நினைக்கலாம். இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்த குறள், மிகவும் கவனத்தோடு பேசுகிறது. உலகத்தில் உள்ளவர் அனைவரும் அவனை அறிந்து கொள்வார்கள் என்று சொல்லாமல், 'உலகத்திலுள்ளவர்களுடைய உள்ளத்திலெல்லாம் வாய்மை பேசும் அப்பெரியவன் குடியிருக்கிறான்' என்று மட்டும் சொல்லிச் செல்கின்றது.

இவ்வருங்குறள் தோன்றியது தமிழ் நாட்டிலேதான் என்றாலும், 'இக்குறள் கண்ட வாழ்வை நம் காலத்து வாழ்ந்த ஒரு பெருமகனார் வாழ்ந்தார்; அதனால் இக் குறளை மெய்ப்பித்து விட்டார்!' என்றால் இதில் வியப் படைவதற்கு ஒன்றும் இல்லை.

*1948-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 30-ஆந்தேதி மாலை, பலகோடி மக்கள் நிறைந்துள்ள இப்பரந்த இந்திய நாட்டில் எத்தனையோ மக்கள் பிறந்திருக்கவும் கூடும், இறந்திருக்கவும் கூடும். ஆனாலும், ஒரு மனிதர் இறந்த தற்காக ஊர், நாடு, உலகம் ஆகிய அனைத்துமே கவலைப் பட்டது. அந்த மனிதர் இறக்கும் பொழுது, செப்பால் அடித்த சல்லிகூட அவருடையது என்று சொல்லிக் கொள்வதற்கு இல்லை. மக்கள் உள்ளங்கலந்த அன்பால் வழங்கிய 'மகாத்மா' என்ற பட்டத்தைத் தவிர, அரசாங்கம் கௌரவித்துத் தந்த பட்டமோ, ஆட்சிப் பீடத்திற்குரிய அதிகாரமோ, ஒன்றும் அவரிடம் இல்லை. அதுதான் போகட்டும் என்றால், அவரைச் சிறந்த கல்விமான் என்றோ, அன்றி உலகத்தை வியப்பில் ஆழ்த்தும் விஞ்ஞானப் புதுமையைக் கண்ட அறிஞர் என்றோ, சொல்லிக் கொள்வதற்குக்கூட இல்லை. சுருங்கச் சொன்னால், பட்டம், பதவி, கல்விச் சிறப்பு முதலிய வற்றுள் யாதொன்றும் இல்லாத ஒரு சாதாரணப் பிரஜை என்றுதான் அவரைச் சொல்ல வேண்டும்*

இந்திய நாட்டின் இப்படிப்பட்ட ஒரு சாதாரண பிரஜை இறந்து விட்டதற்காக, உலகத்திலுள்ள எல்லா அரசாங்கங்களும் (சோவியத் அரசாங்கம நீங்கலாக), எல்லாச் சமயத் தலைவர்களும் வணக்கம் செலுத்தி னார்கள். பணம் படைத்த அமெரிக்காவின் ஜனாதிபதி டுருமெனும், இறந்து போனவர் இறப்பதற்கு இரண் டாண்டுகள் முன் வரையில் யாருடன் போர் நிகழ்த்தி னாரோ, அந்த இங்கிலாந்து மன்னரும், பிரான்சு தேசத்து ஜனாதிபதியும், காண்டர்பரி மதத்தலைவர்

ஆர்ச்சு பிஷப்பும், போப்பாண்டவரும், யூதர்கள் தலைவ ராகிய மதகுருவும் உட்பட அனைவரும் இந்தத் தனி மனிதர்— அரை நிர்வாண தரித்திர நாராயணர்— இறந்த தற்குத் தம்முடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொண் டனர். ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் தன்னுடைய நடைமுறை அலுவல்களை நிறுத்தி இந்தத் தனி மனிதருக்கு வணக்கம் செலுத்தியது. ஏன்? ஐக்கிய நாடுகளின் கொடியும் இறக்கிச் சரி பாதியில் பறக்கவிடப்பட்டது. அதாவது, மனித சமுதாயம் ஒரு மாணிக்கத்தை இழந்த தற்காகக் கொடியை இறக்கி வணக்கம் செய்தது.

'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்,' என்ற குறள் வாக்கு மெய்யானமையைக் கண்டோம். அன்று மட்டும் அன்றி, இன்றுங்கூட, இன்று மட்டும் அன்றி, என்றுமே இவ்வாக்கியம் மெய்யாகவே இருத்தலைக் காண்டல் கூடும்.

அமெரிக்காவின் வெளிநாட்டு அமைச்சராய் இருந்த ஜெனரல் ஜார்ஜ் ஸி. மார்ஷல் இதனை மிகத் தெளிவுபட எடுத்துக் கூறியுள்ளார். "மகாத்துமா காந்தி மனித சமுதாயத்தின் மனச் சான்றாய் வாழ்ந்தார்!" என்று அவர் கூறின பொழுது குறளின் இரண்டாவது அடியின் பொருளை ஐயத்திற்கு இடமின்றி எடுத்து விளக்கி விட்டார்.

சொத்து, சுதந்தரம், உடைமை முதலியவற்றுள் யாதொன்றும் இல்லாத ஒரு தனி மனிதர் இறந்துவிட்ட காரணத்தால், மனித சமுதாயம் ஒரு பெரு நஷ்டத்தை அடைந்ததாகக் கருதிற்று என்றால், அவர்கள் உள்ளத்துள் எவ்வளவு தூரம் இந்தத் தனி மனிதர் குடி புகுந்திருக்க வேண்டுமென்பது சொல்லத் தேவையில்லை.

இன்று உலகத்தில் மக்களின் உள்ளத்துள் வாழ்கின்ற பெருமக்கள் பலரும் தாங்கள் செய்த அருங்காரியங் களினால் மக்களின் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்

டார்கள் என்பது உண்மை என்றாலும், இந்தத் தனி மனிதர் மட்டும் இந்த ஒரு குறளை அப்படியே வாழ்ந்து காட்டி, அதனால் உலகத்தார் உள்ளத்துள் இடம் பிடித்துக் கொண்டார். பல்வேறு நல்ல நெறிகளைப் போதித்து, வாழ்விலும் கையாண்ட பெரியோர் அனைவரும் தாம் போதித்த நன்னெறிகள் பலவற்றுள், வாய்மையும் ஒன்றாகக் கொண்டார்கள். ஆனால்,

" பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்றும்,

" சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு"

என்றும் கூறிய திருக்குறள் ஒன்றுதான் வாய்மைக்கு இவ்வளவு பெரிய மதிப்பைத் தந்தது.

அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்தவர்களும், திருக்குறளைக் கற்றவர்களும், பலப் பலர் உண்டு. ஆனால், ஒரு மோகன்தாஸ்தான், அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்துவிட்டு, 'நாமும் ஏன் அங்ஙனம் வாழக்கூடாது?' என்று நினைத்தார்! இந்தக் குறளை அவர் கற்றாரோ இல்லையோ, நாம் அறியோம்! என்றாலும், இக்குறள் கூறிய வாழ்வைக் கடைசி வரை வாழ்ந்து காட்டிய பெருமை அந்த ஒரு மனிதருக்கே உண்டு. எனவே, அன்றும், இன்றும், என்றும், அவர் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இருக்கக்கூடிய பெருமையைப் பெற்றார். இந்த ஒரு குறள் அவருடைய வாழ்க்கையின் சாற்றைப் பிழிந்து காட்டுகின்றது.

" உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்."

# 20. கண்ணுக்கு அணிகலம்

கண்ணுக்கு அணிகலமாவது யாது? 'சந்தேகமென்ன? நல்ல அழகிய கரிய மைதான்,' என்று பலரும் விடை கூறுவர். இன்னும் சொல்லப் போனால் படக் காட்சிகளில் வரும் நங்கையர் கண்கள் எத்தனையோ விதமாகச் செயற்கை அழகு ஊட்டப்பட்டுள்ளன. அவை எல்லாம் கண்ணுக்கு அழகு செய்கின்றன என்று கருதித்தானே இவ்வாறு செய்துள்ளார்கள்? எனவே, அவர்களும் அவ்வாறு நீட்டி, குறைத்து, மைதீட்டி, அழகு செய்வதையே கண்ணுக்கு அணிகலம் என்று கருதுகிறார்கள்.

ஓவியக் கலையில் மிகவும் புகழ் வாய்ந்த தமிழ் நாட்டின் பழைய ஓவியங்களை எடுத்துக்கொண்டால், கண்ணை எவ்வாறு அவர்கள் கருதினார்கள் என்பது நன்கு விளங்கும். இந்த ஓவியம் தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகள் முன்னர்த் தோன்றிய கவிதைக் கலையிலுங் கூடக் கண் பல படியாக வருணிக்கப் பட்டுள்ளது. உலகத்தை ஈன்ற அன்னையாகிய தேவிக்கு அங்கயற்கண்ணி (மீனாட்சி) என்றே ஒரு பெயரைச் சூட்டியுள்ளார்கள். அதாவது, கயல் மீன் போன்ற கண்ணினை உடையாள் என்ற பொருளில் இச்சொல் அமைக்கப் பட்டுள்ளது. ஆதலின், தேவியைக் கற்பனை செய்யும் பொழுது அவளுடைய கண்ணை எவ்வாறு இவர்கள் கண்டார்கள் என்பதை இது விளக்கி நிற்கின்றது.

'அஜந்தா' முதலிய இடங்களில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும், சித்தன்ன வாசலில் (புதுக்கோட்டை அருகே) உள்ள ஓவியமும், இலங்கையில் 'சிகிரியா'வில் உள்ள ஓவியங்களும் தமிழ் நாட்டு ஓவியக் கலைக்கு எடுத்துக் காட்டாய் உள்ளவை. ஆணையோ பெண்ணையோ இவ்வோவியங்களில் வரையும் பொழுது இந்நாட்டு ஓவியர்கள் ஒரு முக்கியமான குறிப்பைப் பெற வைத்தார்கள். அந்த ஓவியத்திலுள்ள உருவத்தின் முகப் பகுதியில் பெரும் பகுதி அடைத்துக் கொண்டிருக்கும் உறுப்பு, கண்களேயாகும். நீண்டு— அதாவது காதுகள் வரை நீண்டு சென்றும், கடல்போல அகன்றும் இருக்கும் முறையில் இக்கண்கள் அமைக்கப்பெற்றன.

"கண்ணில் சிறந்த உறுப்பு இல்லை," என்று ஒரு பழமொழியும் தோன்றிற்று என்றால், இந்நாட்டவர் கண்களுக்கு ஏன் இத்துணைச் சிறப்புத் தந்தனர் என்ற கேள்வி நம்மையும் அறியாமல் தோன்றுகிறது. முகத்திற்கு அழகு செய்கின்றது என்பது உண்மையாயினும், அந்த ஒரே காரணத்திற்காக இவர்கள் கண்ணுக்கு அதிக மதிப்புத் தந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. அழகுக்கும் அப்பாற்பட்ட ஓர் அழகை, அதாவது புற அழகுக்கு அப்பாற்பட்டுள்ள அக அழகை, இவர்கள் கண்டதனால்தான் போலும் இங்ஙனம் கண்ணுக்குப் பெரு மதிப்புத் தந்துள்ளார்கள் என்று கூற வேண்டும்.

"அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்," என்ற குறள், உள்ளத்தில் உண்டான உணர்ச்சிகளை முகமே எடுத்துக்காட்டும் என்று கூறுகிறது. இதற்கு உவமை கூற வந்த குறள் கண்ணாடியானது உள்ளே இருக்கின்ற பொருளை ஒளிவு மறைவின்றி எடுத்துக் காட்டுவது போல, முகமும் காட்டும் என்று கூறுகிறது. அப்படியானால், முகம் என்று சொல்லும் பொழுது கண், மூக்கு, செவிகள் அடங்கிய முழுப் பகுதியையுமே இங்குக் குறிக்கின்றாரா ஆசிரியர் என்பதைச்

சிந்தித்துப் பார்க்கவேண்டும். எல்லா வகை உறுப்புக் களும் நிறைந்து, அவை அவை அளவுடன் இருப்பினுங் கூடக் கண்ணில்லாவிட்டால், முகம் அழகு பெற்றது என்று கூறுவதற்கில்லை. ஏனைய உறுப்புக்களால் அழகு பெற் றிருப்பினும் கண்ணில்லாத பொழுது முகம் களை இழந்து காணப்படுவதைக் காணலாம். சிற்பக் கலையிலுங்கூட இவ்வுண்மையை அறியலாம்.

எவ்வளவு சிறந்த சிற்பமாயினும், கண் திறக்கப் படாவிட்டால், அச்சிற்பம் முழுத் தன்மையற்றதாகவே கருதப்படும். கை கால் முதலிய ஏனைய உறுப்புக்கள் சிதைந்து விட்டாலுங்கூடச் சிற்பத்தின் அழகு குறையாமல் இருப்பதையும் ஏனைய உறுப்புக்கள் அனைத்தும் இருந்து, கண் மட்டும் சிதைந்த வழி, சிற்பம் அழகு இழந்து நிற்பதையும் காண்கின்றோம். எனவே, 'எண் சாண் உடம்பிற்கும் கண்ணே பிரதானம்,' என்று சொல்வதில் தவறில்லை என்றே தோன்றுகிறது.

விலங்கினங்களிலிருந்து மனிதன் வேறாகக் கருதப் படுவதற்கு முக்கியமான பல காரணங்களுள் அவன் மனமும் ஒன்று. அறிவு முதலியவற்றால் அவன் உயர் வுடையவன் என்று கருதப்பட்டாலும், அதனைக் காட்டிலும் சிறப்பாக மனத்தைப் பெற்றுள்ளமையால், சிறந்தவன் என்று கருதப்படுகிறான். அறிவின் பயனாக ஆராய்ச்சி தோன்றுவது போல, மனத்தில் கருணை அல்லது அன்பு என்பது தோன்ற வேண்டும்.

உள்ளத்தில் தோன்றும் கருணை பரந்து விரிந்து உலகிலுள்ள ஏனைய உயிர்கள் மாட்டுச் செல்கிறது. அவ்வாறு செல்லும் கருணையை ஒப்பு உயர்வு அற்ற ஒரு சிறந்த பொருளாக அனைவரும் கருதுகின்றனர். அன்பின் முதிர்ச்சியே அருள் என்று சொல்லப்படும். தொடர்பு உடையவர்களாகிய உறவினர் மாட்டுச் செல்வதே அன்பு எனப்படும். இது சாதாரண மக்களிடமும் காணப்படு

கின்ற ஒரு பண்பாகும். இதன் முதிர்ந்த நிலை அருள் என்று சொல்லப்படும். தொடர்பு உடையவர்கள் அல்லாமல், இன்னார் இனியார் என்று பாராமல், அனைவரிடமும் செல்கின்ற ஒன்றை அருள் என்று கூறு கின்றோம். அன்புதான் நன்கு வளர்ச்சி அடைந்து அருளாகப் பரிணமிக்கின்றது என்ற உண்மையைக் குறள் ''அருள் என்னும் அன்பு ஈன் குழவி'' என்று அழகாகக் கூறுகிறது.

எனவே, மனிதன் தன்னிடம் இயல்பாக அமைந்துள்ள அன்பை (மனிதத் தன்மையின் அடையாளம் இது) மேலும் மேலும் வளர்த்து, அருளாகப் (தெய்வத் தன்மையின் அடையாளம் இது) பரிணமிக்குமாறு செய்வதே மக்கள் வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டிய தலையாய கடமையாகும். ஒரு மனிதன் இங்ஙனம் தன்பாலுள்ள அன்பை வளர்க்கின்றானா இல்லையா என்பதை எவ்வாறு அறிவது? அன்புடையவன் என்று ஒருவன் தன்னை வாய் நிறையக் கூறிக் கொள்ளலாமேனும், உண்மையில் அவன் அன்பற்ற மரமாகவே இருத்தல் கூடும். எனவேதான் உள்ளத்திலுள்ள அன்பை, அதன் முதிர்ச்சியாகிய அருளை, அறிந்து கொள்வதற்கு ஏற்ற கருவியாகக் கண்ணைப் பயன்படுத்தினார்கள்.

கண்ணோட்டம் என்பது வள்ளுவருடைய கருத்துப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய இன்றியமை யாத குணங்களுள் ஒன்றாகும். அரசர்களுக்குக் கூறும் இலக்கணத்துள் இது பேசப்பட்டாலும், மனித சமுதாயம் முழுவதற்கும் பொதுவானது என்பதை ஒவ்வொரு குறளிலும் எடுத்துக்காட்டுகிறார்.

சோழ நாட்டில் கஞ்சனூர் என்ற ஊரில் வாசு தேவாசாரியார் என்ற வைணவப் பெரியாருக்கு மகனாய்ப் பிறந்தவர் 'அரதத்தர்' என்ற பெரியார். வடமொழியில் மிகச் சிறந்த புலமையுடைய இவர், எல்லா உயிர்களையும்

இறைவனுடைய வடிவங்களாகவே காணும் இயல்பைப் பெற்றிருந்தார்; தந்தையார் வழிவந்த வைணவ வழிபாட்டை விட்டு, சிவ வழிபாட்டை மேற்கொண்டு, 'அரதத்த சிவாசாரியார்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். ஒரு முறை இவர் சிவ பூசை செய்துகொண்டு இருக்கையில் நாய் ஒன்று நீர் வேட்கை மிகுதியால் இவர் பக்கத்திலே வந்து நின்று விட்டது. நாயின் நீர் வேட்கையை அதனுடைய தொங்கிய நாவிலிருந்தும், விருப்பத்தை விளக்கும் கண்களிலிருந்தும் கண்டு கொண்ட இப்பெரியார், உடனே ஒரு சிறிதும் ஆராயாமல், சிவபெரு மானுக்கு அபிஷேகத்திற்கு என்று வைத்திருந்த நீரை எடுத்து அந்த நாய் அருந்துமாறு வைத்துவிட்டார். ஒரு முறை பல அந்தணர்களோடு இருந்து உணவு உண்ணப் புகும் பொழுது தொழு நோயுடைய புலையர் ஒருவர் பசியால் வருந்துவதைக் கண்ட அரதத்தர், தாம் உண்ணு வதற்கு முன் அவருக்குத் தம்முடைய உணவைத் தந்து விட்டார். இவை இரண்டு காரியங்களாலும் அரதத்தர் ஒரு குறளுக்கு முற்றிலும் இலக்காய் விடுகின்றார்.

> '' கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃது இன்றேல்
> புண் என்று உணரப் படும்''

என்ற குறளை வாழ்ந்து காட்டிய பெரியார் பலரும் உள்ளனர் இத்தமிழ் நாட்டில்.

இனி இத்தமிழ் நாட்டில் 'சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என்ற சேர மன்னன் ஒருவன் இருந்தான். அவன் கண்ணோட்டத்திலும் சிறந்து விளங்கினான். ஒரு முறை அவனைக் காண 'மோசி கீரனார்' என்ற புலவர் வந்தார். அந்நிலையில் அரசன் வெளியே சென்றிருந்தான்; அவனுடைய முரசம் வைக்கப் படுகின்ற முரசு கட்டில் காலியாய் இருந்தது. முரசு கட்டிலில், முரசத்தைத் தவிர வேறு ஒருவருடைய கை அல்லது கால் படுமேயானால், அதற்குத் தண்டனை உடனே அந்தக் கையும் காலும் வெட்டப்படுவதுதான்.

இந்த உண்மையை அறியாத மோசிகீரனார் மெத்தை விரித்திருந்த அந்தக் கட்டிலைக் கண்டவுடன் களைப்பு மேலிட்டவராய் அதன்மேல் படுத்து உறங்கிவிட்டார். வெளியே சென்றிருந்த அரசன் அரண்மனையின் உள் நுழைந்தான்; புலவர், முரசு கட்டிலில் உறங்குவதைக் கண்டான். முரசு கட்டிலில் ஏறியவர்களைக் கொன்று விடவேண்டும் என்ற சட்டத்தை ஒரு வினாடி மன்னன் மறந்துவிட்டான்; களைத்து வந்த ஒரு புலவர் பெருமகனார் தனது முரசுக் கட்டிலில் உறங்குவது தன் பாக்கியம் என்று கருதி, உடனே மயில் தோகை விசிறியை எடுத்துக் கொண்டு வந்து புலவருக்கு விசிறத் தொடங்கி விட்டான்; விழித்து எழுந்த புலவர், அரசன் செயலைக் கண்டார். ''ஆராயாமல் இப்படுக்கையில் ஏறிய என்னை இரண்டாக வெட்டித் தள்ளுவதை விட்டுவிட்டு உன்னுடைய பெரிய தோள்களால் குளிர்ச்சி பொருந்த வீசினாயே! இக்கண்ணோட்டம் எனக்கு மட்டும் காட்டப் பட்டதாக நான் கருதவில்லை. அதற்குப் பதிலாக நான் கற்ற தமிழுக்கே இதனை நீ காட்டினாய் என்று கருது கிறேன்!'' என்ற கருத்தில் பாடினார்.

இத்தகைய வரலாறுகளை நினைந்துதான் போலும் குறள்,

> ''பண் என்னாம் பாடற்கு இயைபு இன்றேல்? கண் என்னா
> கண்ணோட்டம் இல்லாத கண்?''

என்றும் பாடிச் செல்கிறது.

# 21. பயன் மரம்

உடையவர்கள், இல்லாதவர்கள் என்ற வேற்றுமை உலகத்தில் என்றுமே உண்டு. ஆனால், உடையவர்கள் என்பவர்கள் கேவலம் செல்வத்தை மட்டும் உடையவர் களாய் இருந்து விடாமல், நல்ல பண்பாட்டையும் மன நிலையையும் உடையவர்களாய் இருப்பதே சிறப்பாகும். ஆனால் இவ்வியல்பு அனைவருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய ஒன்றன்று. செல்வத்தைப் பெற்றிருப்பவருள் பலர், அதன் பயன் யாது என்பதை நினைப்பதே இல்லை. சேம நிதியில் (பாங்கு) பொருளை வைத்திருப்பதற்கும் தனிப்பட்டவர் வைத்திருப்பதற்கும் வேறுபாடு அதிகம் இல்லை.

சேம நிதியில் உள்ள பொருள் சேம நிதிக்குச் சொந்தமானது அன்று. பலருக்கும் சொந்தமான பொருள், பாதுகாவல் கருதியும், வேண்டுமான பொழுது எடுத்துக் கொள்ளக் கூடிய வசதி கருதியுமே சேம நிதியில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இல்லாமல், பொருளை அந்த நிதியில் போட்டவுன் அங்கு உள்ளவர்கள் அதனைத் தம்முடைய பொருளாகக் கருதிப் பயன்படுத்தத் தொடங்கி விடுவார்களேயானால், சேம நிதியின் நிலையும், அதில் பணம் போட்டவர்களின் நிலையும் என்ன ஆகும் என்பது சொல்லத் தேவையில்லை. ஆனால், இக்காலத்தில் பல சேம நிதிகள் பிறருடைய பொருளை எல்லாம் தம்முடைய

பொருளாகக் கருதி, அப்பொருளைப் பயன்படுத்துகின்றன. எனவே, தனிப்பட்ட செல்வர் பலரும் தம்மிடம் உள்ள செல்வம் தம்முடைய சொந்த உபயோகத்திற்காகவே தரப்பட்டதாகக் கருதி அதனைப் பயன்படுத்துகின்றனர்.

இவை இரண்டுமே தவறான செயல்கள் என்று சொல்லத் தேவையில்லை. செல்வத்தை, அதிலும் பெருஞ் செல்வத்தைப் பெற்றதன் பயன் ஒன்றே ஒன்றுதான். அதாவது, அதனைப் பாதுகாத்து, வழங்கி, அதனால் பெறும் இன்பத்தை அனுபவிக்க வேண்டுவதேயாகும். இதைக் கருதிதான் புறநானூறு "செல்வத்துப் பயனே ஈதல்; துய்ப்பேம் எனினே தப்புந பலவே," என்று சொல்லிச் செல்கிறது. செல்வத்தின் பயன் அதனை வழங்குவதால் பெறும் இன்ப அனுபவமேயாகும். தானே அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கின்றவன்கூட என்ன செய்கிறான்? பணத்தை அப்படியே தின்று அனுபவிக்க முடியாது அல்லவா? எனவே, பணம் அனுபவப் பொருளை, அது எதுவாக இருப்பினும், பெற ஓர் அடையாளப் பொருளாய் அமைந்து விட்டது.

பணத்தைக் கொடுத்து அனுபவப் பொருளை வாங்கி அனுபவிப்பதனால் மகிழ்ச்சி தோன்றுகிறது. பணம் படைத்ததன் பயன் ஒரு வகையில் அதுதான் என்று கூடக் கூறிவிடலாம். ஆனால், அதை விட அதிகப்படியான அனுபவம் மற்றொன்று உண்டு. பொருளை வாங்கி அனுபவிக்கும் பொழுது, அனுபவிப்பவன் மட்டுமே மகிழ்ச்சி அடைகிறான். ஆனால், பொருளைப் பிறருக்கு வாரி வழங்கும்போது உண்டாகின்ற இன்பத்தில் இரண்டு பங்கு இருத்தலைக் காணலாம். முதலாவது, பொருளைத் தருதலினால் தான் பெறும் இன்பம்; இரண்டாவது, அப் பொருளைப் பெற்றவன் அடைகின்ற இன்பம். இவை இரண்டையும் அல்லாமல் மூன்றாவதாக ஓர் இன்பமும் இங்கே உண்டு என்பதை ஒரு சிலரே அறிவர். கொடுத்துப்

பழக்கமுடையவர்கள் மட்டுமே அம் மூன்றாவது இன்பத்தை அறிய முடியும்.

அதாவது, பொருளைப் பெறுகின்றவர் முகம் மலருவதைக் கண்டு, கொடுக்கின்றவர் மறுபடியும் மகிழ்ச்சி அடைகின்றார். எனவே, கொடுக்கும் பொழுது இன்பம். கொடுக்கப்பட்டவர் பெறும் இன்பம், அந்த இன்பத்தைக் கண்டு கொடுப்பவர் பெறும் இன்பம் என இன்பம் மூன்று வகைப்படுதலைக் காணலாம். கேவலம் இன்று இருந்து நாளை அழியும் பொருளைக் கொடுத்து மூன்று இன்பத்தைப் பெறுவது எவ்வளவு சிறப்புடையது. வியாபார முறையைப் பார்த்தாலுங் கூட ஒன்றைக் கொடுத்து மூன்றைப் பெறுவது மிகவும் இலாபகரமான காரியந்தானே? அப்படி இருக்க, மனிதர்கள் ஏன் இந்த எளிய காரியத்தைப் புரிந்து கொள்வதில்லை என்று கேட்கிறார் வள்ளுவர்.

> '' ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல்? தாம் உடைமை
> வைத்து இழக்கும் வன்க ணவர் ?''

என்ற குறளில், ஒன்றைக் கொடுத்து மூன்றைப் பெறாத வினோதமான மனிதர்களைக் கண்டு வியப்படைகின்றார் வள்ளுவர். எவ்வளவுதான் வள்ளுவர் போன்ற பெரியவர்கள் இதுபற்றிப் பாடி இருந்தாலும், ஈதல் என்பது அவ்வளவு எளிமையான காரியமன்று. இன்றேல், பெரிய அடியாராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுங்கூட, ''கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பார் இலை'' என்று பாடி இருப்பாரா?

கொடுத்தலாகிய இயல்பு பிறவியிலேயே அமைய வேண்டிய ஒன்றாகும். அடுத்தபடியாக உள்ள 'கொடுக்கும் இயல்பு' ஓரளவு பழக்கத்தால் வருவதாகும். முதலாவது உள்ள பிறவி இயல்பைக் கொடை என்றும், வள்ளன்மை என்றும் கூறுகிறோம். ஆனால், பழக்கம் பற்றியும், தேவை பற்றியும் கொடுக்கப்படுவதை, 'ஒப்புரவறிதல்'

என்று கூறுகிறார் வள்ளுவர். ஒப்புரவறிதல் என்ற சொல்லுக்கு "இல்லையென இரந்து வந்தவர்கள் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றல் இல்லையானாலும், தம்மளவிற்கும், தம் வருவாய்க்கும் ஏற்பத் தக்கார்க்குத் தக்கவற்றை அறிந்து கொடுத்தல்" என்று பொருள் கூறுகிறார் மணக்குடவர்.

பாரியைப் போலவும், சீதக்காதியைப் போலவும் வரையாது வழங்கும் இயல்பு இல்லையானாலும், உலகியலுக்கு ஏற்ப அறிந்து தன் நிலைமையையும் சீர்தூக்கி ஒருவன் வழங்க வேண்டும் என்பதைத்தான் ஒப்புரவு என்ற அதிகாரம் பேசுகிறது. ஒப்புரவு அறிகின்ற ஒருவனிடமுள்ள செல்வம், ஊர் நடுவே உள்ள குளத்தில் நீர் நிரம்பியது போல ஆகும் என்றும், அனைவர்க்கும் பயன்படக்கூடிய நல்ல பழமரம் அனைவர்க்கும் பொதுவான ஊர்ப் பொதுவிடத்தில் பழுத்தது போல ஆகும் என்றும் உவமைகளுடன் குறள் இதனை விளக்கஞ் செய்கிறது.

ஒப்புரவு அறிந்து தன்மாட்டுள்ளதைப் பகிர்ந்து தருதல் பலவகைப்படும். உள்ளத்தில் ஒரு பங்கைத் தருவதிலிருந்து, தரும் அளவை மிகுதிப்படுத்திக் கொண்டே சென்று, ஏறத்தாழ முழுவதையுமே தந்துவிடுகின்ற பகுதி வரை, தருதல் என்பது பலவகைப்படும். சிலர் தம்மாட்டு உள்ள பொருளை, அதுவும் தமக்கு தேவையில்லாததாய் இருப்பின் அதனைத் தருவர். ஆனால், தமக்கு மிகவும் தேவையாக உள்ள பொருளைத் தருதல், தம்மிடம் இல்லாவிடினும் தேடிச் சென்று சம்பாதித்துத் தருதல் ஆகிய இரண்டும் ஒப்புரவு அறிகின்றவர்களிலுங்கூடத் தலையானவர்கட்கே கூடும்.

இத்தகைய இயல்பு உடையவர்களைப் பெருந்தகைகள் என்கிறது குறள். இவர்களிடம் செல்வம் இருக்குமேயானால், அனைவர்க்கும் அது பயன்படும். எந்த அளவு பயன்படும் என்று கூற வந்த குறள், ஓர் அழகிய

உவமையை வகுக்கின்றது. கிராமங்களிலே மிகவும் வயதான வேப்பமரம் நிற்பதைச் சிலர் கண்டிருக்கலாம்; அம்மரத்தின் அடிப்பகுதி எல்லாம் வெட்டும் குத்துமாக இருத்தலையும் காணலாம்; மேலே கிளைகள் ஒடிக்கப் பட்டு இருக்கும். வேர்ப்பகுதி பலவிடங்களில் தோண்டப் பட்டு இருக்கும். இதன் காரணம் யாது? பழமையான அந்த வேப்பமரம் தப்பாமல் மருந்துக்குப் பயன்படக் கூடிய ஒன்று.

அதனுடைய கிளை, இலை, அடிமரம், பட்டை, வேர் ஆகிய அனைத்துமே மருந்துக்குப் பயன்படுதலால், ஒவ்வொரு பகுதியையும் வெட்டிக் குத்தி மக்கள் பயன் படுத்திக் கொள்கின்றார்கள். ஒப்புரவு செய்கின்ற பெரு மக்களுள்ளும் இந்த மருந்து மரத்தின் இயல்பினைப் பெற்றவர்களும் உண்டு.

திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள காயற்பட்டினத்தில் சீதக்காதி என்ற ஒரு முகமதியப் பெருஞ் செல்வர் இருந் தார். அவர் பெருங்கல்வி நிறைந்த பெரும்புலவராயும் இருந்தார்; செல்வம் பெற்றதன் பயன் ஈதல் என்பதை அறிந்ததோடு, காது பெற்றதன் பயன் இனிய தமிழைக் காதாரக் கேட்பதேயாகும் என்பதையும் நன்கு அறிந்திருந் தார். தமிழ்ப் புலவர்களை வரவேற்று உபசரிப்பதில் அவருக்கு நிகர் ஒருவரும் இல்லை. புலவர்கட்கு மட்டும் பரிசில் தந்தாரோ என்று யாரும் நினைக்கவேண்டா. ''ஊரிலே பஞ்சம் வந்து நெல்லும், பொன்னும் சம எடையாக விற்றபோது, அன்னதானத்துக்கு மார்தட்டிய துரை சீதக்காதி வரோதயனே!'' என்று படிக்காசுப் புலவரால் பாராட்டப்பெற்றவர். எனவே, வறுமையால் வாடிய மக்கள் அனைவர்க்கும் வேற்றுமையின்றி வாரி வழங்கிய பெறுமை சீதக்காதிக்குரியது.

இவ்வாறு சாதி சமய வேறுபாடும் இன்றி அனைவருக் கும் வழங்கிய சீதக்காதி, ஒரு நாள் விண்ணுலகு சென்று

விட்டார். இதனை அறியாத ஒரு புலவர் அவரைக் காண வருகையில், 'சீதக்காதி மரித்துவிட்டார்' என்பதைக் கேள்விப்பட்டுச் சமாதிக் குழிக்கு ஓடினார். அப்பொழுது தான் வள்ளலைக் குழிக்குள் வைத்து மூடிக் கொண்டிருந்தார்கள். புலவருக்குத் துக்கம் தாங்கவில்லை. சீதக்காதி இறந்ததால் புலவர்கட்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் குறிக்க ஒரு பாடல் பாடினார். அதில், ''தமிழ் நாவலரை ஓட்டாண்டியாக்கி, அவர்கள் வாயில் ஒருபிடி மண் போட்டான்; அவனும் ஒளித்தான் சமாதிக் குழி புகுந்தே!'' என்று பாடினார்.

அவர் நொந்து பாடியவுடன் சீதக்காதியின் கை ஒன்று வெளியே நீண்டதாம். அக்கையில் விலையுயர்ந்த மோதிரம் ஒன்று இருக்கவே, அதனை எடுத்துப் புலவருக்கு வழங்கிவிட்டார்கள். இதனால் 'செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி' என்ற பழமொழியும் தோன்றலாயிற்று.

> ''மருந்து ஆதித் தப்பா மரத்து அற்றால் செல்வம்
> பெருந்தகை யான்கண் படின்''

என்ற குறள் வாழ்வை அப்படியே வாழ்ந்து காட்டிய பெருமை சீதக்காதிக்கு உண்டு.

# 22. சென்ற இடம் எல்லாம் சிறப்பு

சென்ற இடம் எல்லாம் சிறப்புப் பெறுபவர் யாவர்? செல்வம் உடையவர்கள் என்று கூசாமல் விடை கூறி விடலாம். பொருட்செல்வம் உடையவர்கள் எங்கே சென்றாலும் பலர் சூழச் செல்வதைக் காணலாம். புகை வண்டி நிலையங்களில் சில சமயங்களில் வண்டி புறப் பட்டுச் சென்ற பிறகு, கீழே ரோஜா இதழ்கள் இறைந்து கிடக்கக் காணலாம். யாரோ பிரமுகரை வழி அனுப்ப வந்தவர்கள் போட்ட மாலைகளிலிருந்து உதிர்ந்த மலர் களே அவை. நெருங்கிச் சென்று விசாரித்தால் பிரமுகர் யார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

பல சமயங்களில் அந்தப் பிரமுகர் பெயரைக்கூட நாம் கேள்விப்பட்டிருக்க மாட்டோம். கல்வியில் பெரியவ ராக அவர் இருப்பினும், மக்களுக்கு நலன் பயக்கும் பணிகளில் பெரியவராக அவர் இருப்பினும், நம் போன்றவர் அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டு ஆனால், இவை இரண்டு துறைகளிலும் பெரியவராக இருப்ப வரைப் பிறர் சாதாரணமாக அறிந்திருப்பினும், இவ்வாறு கௌரவப்படுத்தும் வழக்கம் நம் நாட்டில் குறைவு. அவர்களைப் புகை வண்டி நிலையத்தில் வந்து சந்தித்து வழியனுப்பும் அளவிற்கு யாரும் முன் வருவதில்லை.

இன்றைய விஞ்ஞான உலகில் மிகப் பெரியவராய் இருப்பவர்களுள் ஒருவரும், கணித உலக மேதைகளுள்

ஒருவரும் சென்னை எழும்பூர் நிலையத்தில் புகை வண்டிப் பிரயாணத்திற்குக் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களை யாரென்று அறிந்து கொள்ளக் கூட ஒருவரும் அங்கில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் பலர் புடை சூழ ஒருவர் வந்தார். அவர் உடையிலிருந்தே 'பெரிய இடம்' என்பது நன்கு தெரிந்தது. அனைவரும் அப்பெரிய இடத்தைச் சேர்ந்த பிரமுகரை வண்டிக்குள் ஏற்றிவிட்டனர் ஒருவர் அவருடைய படுக்கையைத் தட்டி விரித்தார். பெரிய இடத்தார் 'உஸ், உஸ்' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே இங்கும் அங்கும் திரும்பிப் பார்த்தார். உடனே, உடன் வந்தவர் ஓடோடிச் சென்று பனிக்கட்டியுடன் கூடிய குளிர்ந்த பானம் ஒன்றை வாங்கி வந்தார் இந்த விஞ்ஞானப் பெருமக்கள் இருவரும் இக்காட்சியைக் கண்டு மலைத்து நின்று விட்டனர். இவர்கள் இருக்கும் வண்டிக்குள் ஏற முடியாதபடி பிரமுகரை வழியனுப்ப வந்த கூட்டம் வழி அடைத்துக் கொண்டிருந்தது.

இறுதியாகப் பிரமுகர் யார் என்று விசாரித்த பொழுது, பெருஞ்செல்வர் என்ற மெய்ம்மை தெரிய வந்தது. பெரும் பொருள் படைத்தவர் என்பது தவிர அவரிடம் வேறு சிறப்பு ஒன்றும் இல்லை கல்வி வாசனையே இல்லாதவர் என்றாலும், பலர் அவர் பின்னே செல்வதில் குறைவில்லை.

எந்த மொழி பேசுபவராய் இருப்பினும், எந்த நாட்டவராய் இருப்பினும், பலரும் ஒருவரை மதிக்க வேண்டுமாயின், அந்த ஒருவரிடம் தனிப்பட்ட ஒரு சிறப்பு இருத்தல் வேண்டும் தனிப்பட்ட சிறப்பு எதுவாக இருத்தல் கூடும்? அனைவரும் இட மொழி வேறுபாடு அற்று அந்தச் சிறப்பை அறிய வேண்டுமாயின், அது கால தேச வர்த்தமானம் கடந்ததாய், எல்லா நாட்டினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இருத்தல் வேண்டும். அத்தகைய ஒரு பொருள் யாது? கல்வியே என்று சொல்லத் தேவை இல்லை.

மேலே காட்டிய உதாரணத்தில் கல்வியால் பெரிய விஞ்ஞானிகளைப் பற்றிக் கவலைப்படாமல், பொருட் செல்வம் உடையவர்களையே மக்கள் கூட்டம் சுற்றி நிற்பதைக் கண்டோம். அவ்வாறானால், கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறுவது பொருத்த மானதா என்ற வினாத்தோன்றும். பொருட்செல்வரை அவருடைய ஊரில் உள்ளவர் மட்டுமே மதிப்பர்; அதுவும் அவரிடம் ஏதேனும் ஒரு பயனைக் கருதியே சுற்றி வருவர். அவர் ஒன்றுமே தாராத உலோபியாயினும் சுற்றிவரும் கூட்டத்திற்குப் பஞ்சம் இராது. மூடியுள்ள தேன் குடத்தி லிருந்து தேனைச் சுவைக்க முடியாவிடினும், எறும்புகள் அதைச் சுற்றி வருவதுபோல இக்கூட்டம் சுற்றி வரும்; அதில் வியப்பில்லை.

ஆனால், சுற்றி வருவதும் இச்சகம் பேசுவதும் வேறு; உண்மையில் மதிப்பது என்பது வேறு; கற்றறிந்தவர்களை வேறு ஊதியம் ஒன்றையும் கருதாமல் உண்மையிலேயே உலகத்தார் மதிப்பர்; அவர்மாட்டு அன்பு செய்வர்.

ஸ்ரீவைகுண்டத்தில் இன்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன்னர்க் குமரகுருபரர் என்ற பெரியவர் தோன்றினார்; இளமையிலேயே சிறந்த கல்வியும் பரந்த கேள்வி ஞானமும் பெற்று இனிய கவிதைகள் புனைவதில் வல்லவராய் விளங்கினார்; மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த திருமலை நாயக்க மன்னனிடம் தம் வித்தகப் புலமையை வெளிப்படுத்திப் பெரும் பரிசில் பெற்று விளங்கினார்; திருக்குறளின் கருத்துக்களை எளிய வெண்பாக்களில் 'நீதி நெறி விளக்கம்' என்ற நூலாகப் பாடினார்; மதுரையில் கோயில் கொண்டிருக்கும் அன்னை மீனாட்சிமேல் 'மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்' என்ற நூலைப் பாடி அரங்கேற்றினார்; மன்னனிடம் பெற்ற பரிசில்களோடும் விருதுகளோடும் தருமபுரத்தை வந்து அடைந்தார்.

மாசில்லாமணித் தேசிகர் என்ற அருட்செல்வர் தருமபுர மடத்தில் தலைமைப் பதவியில் அப்பொழுது இருந்து வந்தார்.

பெற்ற விருதுகளோடும் புலமைச் செருக்கோடும் மாசில்லாமணியாரை வந்து கண்டார் குமரகுருபரர். நல்ல பக்குவ நிலையில் இருந்தும், வழி காட்டுவார் இன்மையால், முகை உடைந்து மணம் பரப்பாத மலரைப் போல இருந்த குமரகுருபரரை எவ்வாறாயினும் பயனுடையவராகச் செய்ய விரும்பினார் அருளுடைத் தலைவர். பெரிய புராணத்தில் உள்ள 'ஐந்து பேர் அறிவும்' என்ற பாடலுக்கு அனுபவப் பொருள் கூறுமாறு அவர் குமரகுருபரரைக் கேட்டாராம்.

இதுவரை அறிவால் பெறும் பொருள் ஒன்றையே கண்டு அதனையே பெரிதென மதித்து வந்த குமரகுருபரர் திடுக்கிட்டார்; அறிவால் அடையும் கல்வியை அல்லாமல் உணர்வால் பெறும் கல்வியும் உண்டோ என்று வியப்புற்றார்; தம்முடைய கல்வி முழுத்தன்மை பெற்ற தன்று என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தார். 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி; மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு,' என்று குறள் கூறுவது உண்மைதான். ஆனால், அறிவு மட்டும் ஊறினால் போதுமா? மனிதன் முழுத்தன்மை அடைந்து விட முடியுமா? அறிவின் பெருக்கம் தலையின் வீக்கமாகும். அது மட்டும் பெருத்தால் மனிதன் சரியானபடி நிற்க முடியாமல் நிலை குலைய நேரிடும். இன்று அறிவை மட்டும் வளர்த்துக்கொண்டு உலகம் படும் பாட்டைக் கண்டு கொண்டுதானே இருக்கிறோம்!

எனவே, தம் குறைபாட்டை நன்கு அறிந்தார் குமரகுருபரர்; உடனே மாசில்லாமணித் தேசிகரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தாம் பெற்ற பரிசில்களை யெல்லாம் காணிக்கையாக வைத்து விட்டார்.

அப்பொருளைக் கொண்டு தனியே மடம் ஒன்று அமைத்துச் சமயத்தைப் பரப்புமாறு சீடருக்குக் கட்டளை இட்டார் தலைவர்.

அன்றியும், தமிழ் வழங்கும் நாட்டில் மட்டும் அல்லாமல், பிறமொழி வழங்கும் நாட்டிலும் சென்று, இத்தமிழ் நாட்டின் பெருமையைத் தம் சீடர் எடுத்துக் கூற வேண்டும் என்று விரும்பினார் தருமையாதீனத் தலைவர்.

அறிவுக் கல்வியும், உணர்வுக் கல்வியும் ஒன்று கூடிய வழியே பெருநன்மை உண்டாக முடியும். இவை இரண்டையும் நிரம்பப் பெற்றிருந்த குமரகுருபரர், நேரே காசிக்குச் சென்றார். முகம்மதிய மன்னர் ஆட்சி செய்து கொண்டிருந்த அந்நாட்டில், கலைமகளின் அருளால் விரைவில் அவர்களுடைய மொழியைக் கற்றறிந்தார்; அத்தேவியின் அருளால் சிங்கம் ஒன்றைப் பெற்று, அந்த 'ஒரு சிங்க முதுகின்மேல்' ஏறிச் சென்று மன்னவனைக் கண்டார்; அவனுடைய மொழியிலேயே பேசி அவனை மகிழ்வித்தார்.

தமிழ் நாட்டு இளந்துறவியாரது கல்வி ஒழுக்கம் ஆகியவற்றைக் கண்டு மகிழ்ந்த மன்னன் அவர் விரும்பின பரிசிலைத் தர இசைந்தான்.

தமிழும் சைவமும் பரப்பவே காசிக்குச் சென்ற அப் பெரியார், தாம் ஒரு மடம் கட்ட விரும்புவதாகவும், அதற்கு இடம் வேண்டும் எனவும் கூறினார்; இரண்டு பருந்துகள் வட்டமிடும் பொழுது அவற்றின் இடைப்பட்ட இடம் தமக்கு வேண்டும் என்று கேட்டார். மன்னனும் அவ்வாறு தருவதாக இசைந்தான்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. மன்னனுடைய அரண்மனையைச் சுற்றி இரண்டு பருந்துகள் வட்டம் இட்டனவாம். தன் சொல்லைக் காக்க விரும்பிய மன்னன்,

உடனே அவ்விடத்தைக் காலி செய்து குமரகுருபரருக்கு அளித்து விட்டதாக வரலாறு கூறுகிறது.

ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்து வளர்ந்த குமரகுருபரர் காசிக்குச் சென்று, தமிழே அறியாத மன்னனால், சைவ சமயத்திற்குப் புறம்பான முகம்மதிய மதத்தைச் சேர்ந்த ஒரு மன்னனால் மதிக்கப்பட்டார் எனில், அதற்கு யாது காரணம்?

இதோ குறள் விடையை அழகாகக் கூறுகிறது.

''யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு?''

'கற்ற ஒருவனுக்கு எங்கே சென்றாலும் அது அவனுடைய நாடாகவும் ஊராகவும் அமைந்துவிடுமே! அவ்வாறு இருக்கவும், ஏன் மனிதன் கல்வியை விரும்பிக் கற்க வில்லை?' என்று கேட்கிறார் வள்ளுவர்.

காசிக்குச் சென்று முகம்மதிய மன்னனிடம் பரிசில் பெற்ற குமரகுருபரரும், அமெரிக்கா சென்று இந்நாட்டுப் பண்பாட்டைப் பரப்பிய இந்திய நாட்டின் இணையிலாத் துறவியாராகிய விவேகானந்தரும் இக்குறள் கண்ட வாழ்வின் உதாரணங்கள் அல்லரோ?

# 23. வழியிலும் தூய்மை !

'ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும்,' என்று ஒரு பழமொழி இந் நாட்டில் வழங்குகிறது. எந்தப் புண்ணியவான் இந்தப் பழமொழியை உண்டாக்கினானோ தெரியவில்லை! அவன் யாராய் இருந்தாலும், தமிழ் நாட்டில் பிறந்து தமிழ்ப் பண்பாட்டை அறிந்தவனாக மட்டும் இருக்க முடியாது. குறள் பிறந்த தமிழ் நாட்டில் இத்தகைய ஒரு பழமொழி தோன்ற முடியாது. இன்னும் சொல்லப் போனால், 'ஒரு பொய் கூறாவிட்டால் ஆயிரம் கல்யாணம் நின்று போய் விடும் என்றாலும், பொய் கூறாதே!' என்பதே இந் நாட்டுப் பழமொழியாக இருந்திருத்தல் கூடும்.

எவ்வளவு சிறந்த பயன் கிட்டுவதாயினும் சரி, வழி தவறானதாய் இருப்பின் அப்பயனை அடைய முயற்சி செய்ய வேண்டா என்பதே இந்நாட்டவர் கண்ட உண்மை. ஆனால், வாழ்க்கைப் போராட்டத்தில் எவ்வித மாயினும் முன்னேறி வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது மிகுந்துள்ளது. இந்நாட்டவர் பிற நாட்டவருடன் தொடர்பு கொண்டதனால் பெற்ற முதற்பயனாகும் இது.

மேலை நாட்டாரே வெற்றியைப் பெரிதாகப் பாராட்டினர்; வாழ்க்கையின் தலையாய நோக்கமாக வெற்றியை மதித்தனர். நம்மவர், நல்ல வாழ்வு வாழ்

வதையே, பிறருக்குப் பயன்படும் வாழ்வு வாழ்வதையே பெரிதாக மதித்தனர். வாழ்க்கையில் வெற்றி பெறுவதைக் காட்டிலும் அமைதியுடன் வாழ்வதையே, சிறப்பாக நம்மவர் மதித்தனர்.

'கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்; கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்,' என்றெல்லாம் சொல்லி, இறுதியில், 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது!' என்று கூறினார்கள். எனவே, வெற்றியைக் காட்டிலும் சிறப்புடையதாகக் கருதப்பட்டது மன அமைதியேயாகும்.

எடுத்த காரியம் யாவினும் வெற்றி பெறுவதை வேண்டா என்று கூறவில்லை; ஆனால், அவ்வெற்றியில் துன்பக் கலப்பும், தீமைக் கலப்பும் இருத்தல் கூடாது என்று கூறினர். தவறான வழியில் சென்று பெறும் வெற்றி நிலைத்திராது; இருக்கின்றவரை இன்பமும் தாராது.

மேல் நாடுகளில் எவ்வாறாயினும் வெற்றி பெற வேண்டும் என்று கருதிய ஒரு கூட்டத்தார், 'பயனை அடையக் கூடுமானால் எல்லா வழியும் சிறந்ததுதான்' (*End justifies the means*) என்று கூறினர். ஆன்ம விஷயங்கட்கு ஏற்பட்ட இந்தப் பழமொழி, நாளாவட்டத்தில் எல்லா விஷயங்கட்கும் பயன்படலாயிற்று. ஒரு சிலர், எந்த வழியையாவது கடைபிடித்து வெற்றி பெற்று விட்டால், அதனைக் காண்கின்ற மற்றவர் மெள்ள மனம் மாறத் தொடங்குகின்றனர்.

சிறிது காலம் வரை மனத்தைச் சமாதானம் செய்து வைத்திருப்பினும் வெற்றி பெறுபவர்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் ஒரு சபலம் தட்டுகிறது. நேர்மையான வழியில் சென்றால் வெற்றி அவ்வளவு சுலபமாகவும், விரைவாகவும், நிறைந்த அளவிலும் கிடைப்பதில்லை.

எனவே, விரைவில் நிறைந்த அளவில் வெற்றி பெறு பவரைக் கண்டவுடன் மனத்தில் சபலம் தட்டுவது இயற்கைதான்.

வலுவான நெஞ்சுரம் உடையவர் மட்டுமே இதனை எதிர்த்துப் போராட முடியும். வெற்றியை எதிர்த்துப் போராடுதல் எவ்வளவு கடினமானது என்று கூறத் தேவையில்லை. அதிலும், வெற்றி எளிதாகக் கிடைக்கிறது; 'கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் வந்து விட்டது; இதோ கிடைக்கப் போகிறது!' என்று கூறக் கூடிய நிலையில், அந்த வெற்றியை உதறித் தள்ளுவது அருமை யினும் அருமை. அவ்வாறு வெற்றியை உதறித் தள்ளுவது ஒரு மகாத்மாவுக்குத்தான் முடியுமே தவிர, சாதாரண மனிதருக்கு இயலாத காரியமே.

ஏன் வெற்றியை உதறித் தள்ள வேண்டும்? வெற்றி கிடைக்கும் வழி தூய்மையானதாக இல்லாமையே காரணம்! எந்தக் காரியத்தை மேற்கொண்டாலும், அது எவ்வளவு சிறப்புடையதாயினும் சரி, அந்தக் காரியத்தைச் செய்யும்பொழுது தூய்மையான வழியை மேற்கொள்ளு கிறோமா என்பதே வினா. சிறந்த வழி மூலம் பெறும் ஊதியம் சிறியதாக இருப்பினும், அதுவே போதுமானது என்று பெரியோர் கூறினர்.

'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்,' என்று குறள் கூறுவதும் இதையேதான். பிறர் அழும்படியாகப் பெற்றவை அனைத்தும், பெற்றவர்களை அழவைத்து விட்டுத் தாமும் போய்விடும். வெற்றியைப் பெறுவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமாகும் அதற்கு மேற்கொள்ளும் வழியின் தூய்மையைப் பாதுகாப்பதும். இது கருதியே குறள் 'வினைத்தூய்மை' என்னும் ஓர் அதிகாரமே வகுக்கின்றது.

வெற்றியைக் கருதித் தவறான செயல்களைச் செய்யக் கூடாது என்று கூறும் பொழுது ஒரு சிலருக்குச் சந்தேகம்

வரக்கூடும். வாழ்க்கையில் வெற்றியைக் கருதி இவ்வாறு செய்தல் தவறாக இருக்கலாம். ஆனால், வாழ்க்கையின் அடிப்படைக்கே ஆபத்து வரும்பொழுதோ? அதாவது, 'எல்லையற்ற வறுமையால் துடிக்கின்றேன்; யான் மட்டுமல்லேன்; என் தாயும், மனைவியும், மிகச் சிறிய குழந்தையும் பசியால் துடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு எவ்வாறு இருக்க முடியும்? எனவே, வாழ்க்கைப் போராட்டத்தில் உயிர்களைக் காப்பாற்றும் ஒரு பெரிய செயலின் பொருட்டாக, இந்தத் தவறான காரியத்தைச் செய்ய நேரிட்டது!' என்று கூறினால் வள்ளுவர் என்ன விடை கூறுவார் தெரியுமா? "ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை," என்ற குறளில், 'தாயின் பசியையே காண்பவனா யினும் சரி, பெரியோர் பழித்துக் கூறும் செயல்களைச் செய்யாதே!' என்று கட்டளையிடுகிறார்.

எவ்வாறாயினும் காரியத்தைச் சாதித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அலைகின்ற இற்றை நாள் உலகில், யார்தான் 'வினைத்தூய்மை' வேண்டும் என்று நினைக்கப் போகிறார்கள்?

இந்த நாளிலும் அவ்வாறு நினைந்து செயல் புரிகின்ற வர்கள் இல்லாமல் இல்லை.

தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகப் போரை நடத்தி அனுபவம் பெற்ற மகாத்துமா, இந்தியாவிலும் அதனை நடத்த முடிவு செய்தார். கத்தியின்றி இரத்த மின்றித் தொடங்கப் பெற்ற இப்போராட்டம் உலகத் திற்கு ஒரு புதுமையாய் அமைந்தது. ஆயுத பலமுடைய அரசாங்கத்தை ஆன்ம பலம் ஒன்றைத் தவிர, வேறு பெரும்பான்மையோர் பலமுங்கூட இல்லாத ஒரு சிலர் எதிர்த்துப் போராடிய வரலாறு இது.

உலக வரலாற்றிலேயே இத்தகைய ஒரு சிறப்பை இதற்கு முன்னர்க் கண்டதும் இல்லை, கேட்டதும்

இல்லை. தனிப்பட்ட மனிதர்கள் தம் ஆன்ம சத்தியின் துணை கொண்டு அரசர்களையும், அதிகார வெறியையும் எதிர்த்தது உண்டு. பெரும்பாலும் இப்போராட்டங்களில் தனிப்பட்டவர்களுடைய கொள்கையும், குறிக்கோள்களும் வெற்றி அடையும். ஆனால், அந்த வெற்றி அடைவதற்குள்ளாகப் பெரும்பாலும் அவர்கள் தங்கள் உயிரை விட்டதாகவே வரலாறு கூறக் கேட்கிறோம். அடிகளார் இவ்விரண்டு வகையிலும் ஒரு புதுமையை உண்டாக்கினார். தனிப்பட்டவர்கள் நடத்தும் போராட்டமாக இல்லாமல், ஒரு பெரிய நாட்டையே இப்போராட்டத்திற்கு உளப்படுத்தினார். "சுத்தி எடுத்து வெற்றி பெறும் கொள்கையை இந்தியா கடைப்பிடிப்பதானால், ஒருவேளை வினாடி நேர வெற்றியைப் பெறுதலும் கூடும். ஆனாலும், அங்ஙனம் வெற்றி பெறும் இந்தியா என்னுடைய கனவு நாடாக இருத்தற்கில்லை," என்று அடிகள் கூறியுள்ளார்.

1922-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், 1-ஆம் தேதி அப்பொழுது வைசிராயாய் இருந்த லார்டு ரீடிங்துரைக்கு, 'பர்தோலியில்' தாம் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கப் போவதை முன்னறிவிப்புச் செய்துவிட்டு அடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார்.

பர்தோலியிலிருந்து எண்ணூறு மைல்களுக்கு அப்பால் உள்ள 'சௌரி சௌரா' என்ற நகரத்தில் பிப்பிரவரி 8-ஆம் தேதியன்று அரசாங்க அனுமதியுடன் ஓர் ஊர்வலம் நடைபெற்றது. என்றாலும், ஊர்வலம் நடைபெறும்பொழுது சில ஊர்காவல் அதிகாரிகள் (போலீஸ்) குழப்பம் செய்தனர். உடனே கூட்டம் சேர்ந்தது. கூட்டத்தைக் கலைக்கக் காவலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். காவலர் தம்மிடமிருந்த குண்டுகள் காலியானவுடன் போலீஸ் தாணாவுக்குள் சென்று பதுங்கிக் கொண்டனர். அவர்கள் செயலில் ஆத்திரம் கொண்ட மக்கள் கூட்டம், தாணாவுக்கு நெருப்பு வைத்து

விட்டது; நெருப்புக்கு அஞ்சி வெளி ஓடி வந்த ஊர் காவலர்களை எல்லாம் கொன்றுவிட்டது.

22 ஊர் காவலர்களை இங்ஙனம் கொன்றதால் அடிகளார் உடனே சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி விட்டார். இந்தியா முழுவதிலும் இக்கொள்கை காட்டுத் தீப்போலப் பரவி, மக்கள் உணர்ச்சி பெறும் காலத்தில் அடிகள் இதனை நிறுத்தியதைப் பற்றிப் பலர் வருந்திக் குறை கூறினர். அவர் அனைவருக்கும் அடிகள் கூறிய விடை ஒன்றே ஒன்றுதான். ''தீயவழியில் சென்று சிறந்த பயனைப் பெருவதாயினும் அப்பயன் விரும்பத் தகுந்த தன்று,'' என்பதே அவ்விடை.

அடிகள் தாம் மேற்கொள்ளும் வழி தூய்மையாக இருக்க வேண்டும் என்பதை எவ்வளவு தூரம் வலியுறுத்தினார் என்பதை 'லூயி பிஷர்' என்ற ஆங்கிலேயர் தாம் எழுதிய 'காந்தி' என்ற நூலில் (பக்கம் 104) அழகாக எடுத்துக் கூறுகிறார். ''மேற்கொள்ளும் வழியிலும் தூய்மை வேண்டும்'' என்று அடிகள் பெரிதும் வற்புறுத்தினார். அதன் பயனாக ஒரு பரந்த நோக்கமும், எல்லையற்ற பொறுமையும், சிறந்த நடுவு நிலைமையும் அவருக்குக் கிடைத்தன. வழி செம்மையாய் இருக்கின்ற வரையில் எதிர்காலத்தில் உறுதியாகப் பயன் விளையும் என்ற எண்ணத்தில் அவர் காத்துக் கொண்டிருக்கத் தயாராய் இருந்தார்.

'லூயி பிஷர்' காந்தியடிகளின் வாழ்வின் சாரத்தை இங்கே பேசியுள்ளார். இதே கருத்தை இரண்டு குறள்கள் அழகாக எடுத்துப் பேசுகின்றன.

''ஈன்றாள் பசி காண்பான் ஆயினும், செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை''

'' அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்
பின்பயக்கும் நற்பா லவை.''

இக்குறள்கள் கண்ட வாழ்வின் அடிப்படையிலேதான் இன்று நம் நாடு விடுதலை பெற்று வாழ்கிறது.

# 24. சொல்லேர் உழவர்

"என்ன! உங்கள் குழந்தையா வெளியில் விளையாடிக் கொண்டிருப்பது!" என்று ஒருவர் கேட்கிறார். உள்ளே இருப்பவர் பதறிப் போய் 'ஆமாம்! ஆமாம்!' என்று இழுத்தாற்போலக் கூறுகிறார். 'குழந்தை நல்ல சூட்டிகையாக இருக்கிறான்!' என்கிறார் வந்தவர். குழந்தையைப் பெற்றவர் உடனே, 'அவனுக்கு இரண்டு நாளாக உடல் நலமில்லை,' என்று கூறுகிறார். உடல் நலமில்லை என்று கூறியது அப்பட்டப் பொய்! ஏன் பொய் கூற வேண்டும்? அதுவும் குழந்தைக்கு உடல் நலம் இல்லை என்று ஒரு பொய் கூறவும் வேண்டுமா?

நம்முடைய வீடுகளில் வயது முதிர்ந்த பாட்டிமார்களும், தாய்மார்களும் இன்னுஞ்சில சமயங்களில் தந்தைமார்களுங்கூடச் செய்கின்ற செயல்தான் இது. ஆனால், குழந்தைக்கு உடல் நலமில்லை என்று கூறுகின்றவரும், இதனைப் பொய் என்று தெரிந்தே கூறுகிறார். அதனைக் கேட்டுக் கொள்பவரும் சொல்லப்பட்டது பொய் என்பதை நன்கு அறிவார். இருவரும் பொய் என்று அறிந்த ஒன்றை ஏன் கூற வேண்டும்? அதுதான் இதிலுள்ள சிறப்பு!

'குழந்தை சூட்டிகை' என்று கூறினவுடன் குழந்தைக்குத் தீமை விளைக்கும் முறையில் ஏதோ ஒன்று சொல்லப்பட்டதாகவே பெற்றோர் நினைக்கின்றனர்.

இவ்வாறு நினைப்பதும் நியாயமானது என்றே அனுபவத்திலும் சில சமயங்களில் தெரிகின்றது. சிலர் வாய் திறந்து பேசினால் அதனுடைய பயனை உடனே அறிய முடியும். அதிலும் இவர்கள் நல்லது கூறினால் நடப்பது இயலாதது ஆயினும், அல்லது கூறினால் உடனே நடைபெற்றுவிடக் காணலாம்.

பிறர் வாழ்வைக் கண்டு பொறாதவர் பலர் உண்டு. என்றாலும், அப்பொறாமை மனத்துடன் பல்லிலும் (சொல்லிலும்) விஷம் உடைய சிலர் உண்டு. இவர்கள் வாய் திறந்து ஒன்றைக் கூறுவார்களாயின், அது பெரும்பாலும் நடைபெற்றுவிடும். ஆனால், இத்தகையவர்கள் நல்லது கூறுவதும் இல்லை; கூறினால், அது நடப்பதும் இல்லை. இதன் எதிராக எப்பொழுதுமே இவர்கள் அல்லாததைத்தான் கூறுவார்கள். அதுவும் தப்பாமல் நடைபெறுவது உண்டு.

'சொல்லில் விஷம் உடைய இவர்கள் பல்லில் விஷம் உடைய பாம்பிலும் கொடியவர்கள். எவ்வாறு எனில், பாம்பு, கடித்தால் ஒழிய ஊறு செய்யாது. இவர்களோ, பேச்சாலேயே ஊறு செய்து விடுவார்கள். பாம்பு துன்பஞ் செய்யும் பகைவரையே கடிக்கும். இவர்கள் வேறுபாடு இன்றி அனைவருக்கும் தீங்கு செய்வர். இவர்களைவிடக் கொடியவரும் சிலர் உண்டு. இவர்கள் வாய் திறந்து பேசாமல் கண்ணால் பார்த்த மாத்திரத்திலேயே தீங்கு செய்து விடுவார்கள். இதனையே 'கண்ணேறு படுதல்' என்று நம் முன்னோர் கூறினர்.

வாயால் கூறியும், கண்ணால் கண்டும் பிறருக்கு ஊறு செய்யும் இதில், என்ன மாதிரியான தத்துவம் அடங்கியுள்ளது என்று கூறுவதற்கு இல்லை. விஞ்ஞான முறையில் இதனை ஆராய்ந்து கண்டால் ஒருவேளை அர்த்தமற்ற மூடநம்பிக்கை என்றுகூடச் சொல்லுவார்கள். ஆனால், நம்முடைய காரண காரிய ஆராய்ச்சிக்குள் இது அடங்குவ

தில்லை என்ற காரணத்தால் இதனைப் பொய் என்றோ, தவறு என்றோ கூறிவிட முடியாது. காரணகாரிய முறையில் ஆராய்ந்து இதனை விளக்குவது இயலாமல் போயினும் வாழ்க்கையில் இது நடைபெறுவதை அன்றாடம் கண்டு கொண்டுதான் இருக்கின்றோம்.

தாம் விரும்பாமலுங்கூட இத்தகையவர் பிறருக்குக் கேடு செய்து விடுவர். பிறரைப் பார்க்கும் பொழுதும் 'குழந்தை சூட்டிகை' என்று கூறும் பொழுதும் இவர் களில் பலர் கேடு விளைவிக்க வேண்டும் என்று நினைப்பதே இல்லை. அவர்களையும் மீறியே அக்கேடு நடைபெற்று விடுகின்றது. தங்களால் இத்தகைய கேடு விளைகின்றது என்பதை அறிந்தால் ஒருவேளை அவர்கள் மனம் மாறினாலும் மாறிவிடுவர். ஏனெனில், கேடு விளைவிக்க வேண்டும் என்பது அவர்கள் கருத்து அன்று.

இவர்களிலும் வேறான ஒரு கூட்டம் உண்டு. இக் கூட்டத்தார் பிறருக்குக் கேடு செய்வதை வேண்டுமென்றே நினைந்து ஆராய்ந்து முயன்று செய்வர். இத்தகைய மன நிலையைக் கம்பநாடன் அழகாகக் குறிக்கின்றான்; கைகேயியைப் பற்றிக் கூறும்பொழுது "தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால் அளந்தாளை" என்று கூறும் பொழுது பிறருக்குத் தீங்கு செய்யும் இனத்தாரில் இரண்டாவது இனத்தைக் குறிப்பிடுகின்றான். ஆம்! இவர்கள் பிறருக்குத் தீமையை நினைந்து வேண்டுமென்றே செய்பவர்கள்.

இந்த இரண்டாவது இனத்தில் ஒரு சிறப்பான சிறு கூட்டம் உண்டு. இவர்கள் நன்கு கற்று அறிந்தவர்கள். தங்கள் நுண்ணறிவால் பெற்ற கல்வியை, பண்பாடு இன்மையின், தவறான வழிகளுக்கே செலவழிப்பர். கல்வி இவர்களே முயன்று பெற்ற செல்வம். ஆனால், நாக்கில் விஷம் பிறவியிலேயே இவர்கட்குக் கிடைத்துள்ள பேறு. பிறருக்குத் தீமை செய்யக்கூடாது என்ற

உண்மையைத் தாம் பெற்ற கல்வியால் அறிந்திருத்தல் வேண்டும் இவர்கள்.

ஆனால், அதனை அறியாது இருத்தல் மட்டும் அன்று. அதன் எதிராகத் தம்முடைய சத்தியை நன்கு அறிந்து பிறருக்குத் தீமை விளைவிக்க அந்தச் சத்தியைப் பெரிதும் பயன்படுத்துவர். தாங்கள் வாய் திறந்து கூறினால் அது பலித்துவிடுகின்றது என்பதை அறிந்த இவர்கள் வேண்டுமென்றே இவ்வாறு கூறிப் பிறருக்குத் தீமை புரிகின்றார்கள். திருவள்ளுவர் காலத்திலும் இத்தகைய 'பெரியவர்கள்' இருந்திருப்பார்கள் போலும்! எனவே, அவர் இத்தகைய புண்ணியவான்களுடன் பகை கொள்ள வேண்டா என்று கூறுகிறார்.

பல்லவப் பேரரசர்களுக்குள் மிக்க தமிழ்ப்பற்றும், தமிழறிவும் உடையவன் 'தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன்' என்பவன். சரித்திரப் பிரசித்தி பெற்றதாகிய தொள்ளாற்றில் நடைபெற்ற போரில் வாகை சூடிப் பல்லவப் பேரரசை அதன் இறுதிக் காலத்தில் மீட்டும் தழைக்கச் செய்த பெருமை இவனுடையது ஆகும். என்றாலும் இப்பெருமகன் சிறந்த தமிழ்க் கவிதையை அனுபவிப்பதில் எல்லை மீறிய பற்று உடையவனாய் இருந்தான். எந்த ஒன்றிலுமே பற்று எல்லை மீறி விட்டால், அது சிறந்த தமிழ்ப் பற்றாகவே இருப்பினுங் கூடத் தீமையே செய்யும் என்ற உண்மையை மன்னன் மறந்து விட்டான்.

நந்திவர்மன் தந்தைக்கு ஒரு காதற்கிழத்தி உண்டு என்றும், அவள் மூலம் மற்றொரு மகன் தோன்றினான் என்றும் செவி வழிக் கதை பேசுகிறது. காதற்கிழத்தி மகனாதலால் அந்த இளையவன் அரசுத் திருவைப் பெறுதற்குரிய தகுதியற்றவன் ஆகிவிட்டான். என்றாலும் என்ன? ஆசை யாரையும் விடுவது இல்லை அன்றோ? நந்திவர்மன் தம்பியும் இதற்கு எங்ஙனம் விலக்காக

முடியும்? ஒருவேளை தமையனுடைய நற்பண்புகளில் ஈடுபட்டு, அவனே பல்லவ நாட்டை ஆளுவதற்குரிய தகுதி பெற்றவன் என்று நம்பி இவன் இருந்திருப்பினும், உடன் இருந்தவர்கள் சும்மா இருந்திருக்கப் போவதில்லை. பல்லவப் பட்டத்தைப் பெறவேண்டும் என்னும் எண்ணத்தை இளையவன் மனத்தில் விதைத்து விட்டார்கள். எவ்வாறாயினும், கூர்த்த மதியுடையவ னாகிய இளையவன், தன்னுடைய சத்தியின் அளவை நன்கு அறிந்திருந்தான். எனவே, முட்டாள்தனமாகத் தமையன் மேல் படையெடுக்க அவன் துணியவில்லை.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும், துணைவலியும் தூக்கிச் செயல்," என்ற குறளை நன்கு அறிந்திருந்தவன் ஆதலின், படை கொண்டு போரிட்டு நந்தியை வெல்ல முடியாது என்ற பேருண்மையை நன்கு அறிந்திருந்தான் இளநந்தி. படைகொண்டு போரிட முடியாது என்பதை அறிந்தவுடன், வேறு வழிகளில் வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணத்தால் தூண்டப் பெற்று, வேறு வழிகளை ஆராயத் தொடங்கினான்.

இந்நிலையில் அவனுடன் இருந்த நண்பர் சிலர் எளிமையான வழி ஒன்றை அவனுக்கு எடுத்துக் கூறினர். தெள்ளாற்றெறிந்த நந்தி, கவிதை என்றால் ஊண் உறக்கம் இன்றி, எதனையும் பொருட்படுத்தாமல் அனுபவிக்கும் விருப்பம் உடையவன். அப்படியானால் ஏன் அந்தக் கவிதையின் மூலமே அவனைக் கொல்லக்கூடாது என்று கேட்டனர். தமிழ்க் கவிதையின் மூலம் ஒருவரைக் கொல்லவும் முடியும் என்பதை அதற்கு முன்னர்க் கேள்விப் படாத இளநந்தி, அதுபற்றித் தீர விசாரித்தான்.

நச்சு எழுத்துக்கள் என்று சொல்லப்படும் சில எழுத்துக்களைக் கவிதையின் இடையே புகுத்தி, ஒருவர் மேல் சில பாடல்களை இயற்ற வேண்டும். அதன் பின்னர்,

யார்மேல் அந்தப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளனவோ அவர்கள் அந்தப் பாடல்களைக் கேட்குமாறு செய்ய வேண்டும். பாடல்களைக் கேட்ட அவர்கள், கேட்டு முடிந்தவுடன் இறந்துவிடுவார்கள். இவ்வாறு ஒருவரைக் கொல்லும் நோக்கத்துடன் பாடப்படும் பாடல்களை அரம் வைத்துப் பாடுதல் அல்லது அரம் பாடுதல் என்று கூறுவார்கள்.

தெள்ளாற்றெறிந்த நந்தியின் கவிதை ஆர்வத்தை வழியாகக் கொண்டு அவனைக் கொல்ல முடிவு செய்து விட்டான் இளநந்தி. உடனே ஒரு புலவனைப் பிடித்து, 'நந்திக் கலம்பகம்' என்ற சுவை பொருந்திய நூல் ஒன்றைப் பாடுமாறு செய்தான். தன்னுடைய காதற் பரத்தை ஒருத்திக்கு இவ்வழகிய பாடல்களுள் சில வற்றைக் கற்றுக் கொடுத்துப் பாடுமாறு செய்தான். ஒரு நாள் இரவு நகர் சோதனைக்கு மாறுவேடத்துடன் வந்த தெள்ளாற்றெறிந்த நந்தி, இப்பாடல்களைக் கேட்க நேரிட்டது. பாட்டின் சுவையில் தன்னை மறந்த நந்தி மறுநாள் அவளை அழைத்து ஏனைய பாடல்களையும் பாடுமாறு ஏவினான்.

அப்பாடல்கள் தோன்றிய வரலாற்றை எடுத்துக் கூறி, அவள், அவன் எதிரே ஏனைய பாடல்களைப பாட மறுத்துவிட்டாள். மன்னன் விட்ட பாடு இல்லை; தம்பியை அழைத்து எவ்வாறாயினும் மீதிப் பாடல்களைப் பாடவேண்டும் என்று வற்புறுத்தினான்.

அவன் ஆணையின் வண்ணம் அரண்மனையிலிருந்து இடுகாடு வரையில் நூறு பச்சை மட்டைப் பந்தல்கள் போடப்பட்டன. ஒவ்வொரு பந்தலின் அடியிலும் அரசன் நின்று ஒரு பாடலைக் கேட்டான். உடனே அப்பச்சை மட்டைப் பந்தல் தீப்பற்றி எரிந்தது. என்றாலும், மனம் தளராத மன்னன் இறுதிவரையில் தமிழ்க் கவிதையை அனுபவித்து உயிரையும் விடச்

சித்தமாய்விட்டான். நூறாவது பந்தல் இடுகாட்டில் சிதையின்மேல் இடப்பட்டது. அதன்மேல் ஏறி அமர்ந் தான் நந்திவர்மன். நூறாவது பாடலும் பாடப்பெற்றது.

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம்;
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி;
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்;
கற்பகம் அடைந்தஉன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்;
செந்தழல் அடைந்ததுன் தேகம்;
யானும் என் கவியும் எவ்விடம் புகுவேம்
எந்தையே நந்திநா யகனே!"

இப்பாடலையும் கேட்டுவிட்டு நந்திவர்மன் உயிரை விட்டான் என்று செவி வழிக் கதை பேசுகிறது. இத்தகைய வரலாறு ஒன்றை மனத்துட் கொண்டும், முன்பு சொல்லப் பட்ட 'நாவில் விஷம்' உடைய ஒரு சிலரை மனத்தில் கொண்டும் குறள்,

"வில் ஏர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல் ஏர் உழவர் பகை!"

என்று கூறுகிறது.

அதாவது, 'வில்லை ஏராக உடைய வீரர்களின் பகையைக் கொண்டாலும் கொள்ளலாம்; ஆனால், சொல்லை ஏராக உடைய கரிநாக்கு உடையவர்களுடன் பகை கொள்ளாதே!' என்ற பொருளில் குறள் கூறும் வாழ்வைத் தெள்ளாற்று எறிந்த நந்திவர்மன் வாழ்ந்து, தமிழ்மக்கள் உள்ளத்தில் அழியாப் புகழைப் பெற்று விட்டான்.

# 25. வித்தில்லாத விளைச்சல்!

"என்ன ஐயா, வீட்டில் விருந்து மிகவும் தடபுடல் போல இருக்கிறதே!" என்று கேட்கின்றோம். கேட்கப் பட்டவர்கள், அசட்டுச் சிரிப்புடன், "ஆமாம்! மதிப்பிற் குரிய ஒருவர் மிக நீண்ட காலம் கழித்து விருந்தினராக வந்திருக்கிறார். ஆகவே, கொஞ்சம் அதிகப்படியான சமையல்," என்று சொல்லுகிறார். யாருக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு விருந்து தயாரிக்கிறார் என்று பார்த்தால், 99 சதவிகிதம் இவருடைய உறவினருக்காக அல்லது 'காக்காய் பிடிக்கப்பட' வேண்டிய ஒருவருக்காக இருக்கும்.

உறவினராக இருப்பவர்களுள்ளும் பல ரகங்கள் உண்டு. ஒரு சில உறவினருக்கு நம்முடைய வீட்டில் அன்றாடம் நடைபெறுகின்ற சமையலில் ஒரு பகுதியே விருந்து உணவாகக் கிடைக்கும். இன்னும் ஒரு வகை உறவினருக்கு அதுவும் கிடைக்காமல் போகலாம். மூன்றாம் இனத்தாருக்கு மிக அதிகப்படியான விருந்து உபசாரம் நடைபெறும். இதனுடைய காரணத்தை அறிய அதிக தூரம் செல்ல வேண்டுவதில்லை. விருந்தை ஏற்றுக்கொள்ளுகின்றவர்களுடைய தகுதி, செல்வ நிலை இவற்றைப் பொறுத்தே விருந்தின் தரமும் நிர்ணயிக்கப் படுகிறது.

இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், இவ்வளவு சிரமப்பட்டு நம்மால் விருந்துபசாரம் செய்யப்படுகிறவர் இந்த விருந்தை ஏற்றுக்கொள்ளும் உடல்நிலையோ, மன நிலையோ இல்லாதவராய் இருக்கின்றார். அதாவது, பெரிய மனிதர்களுக்குரிய சிறப்பு நோயான 'டிஸ்பெப்ஸியா' போன்ற நோய்களாலும் பாதிக்கப்பட்ட உடலை உடையவராய், எப்பொழுதும் கவலை தோய்ந்த மனத்தை உடையவராய் இருப்பதோடு, தம்முடைய வீட்டிற்கு வருகின்ற அதே நேரத்தில் வேறு எங்காவது ஓர் இடத்தில் சிற்றுண்டி என்று சொல்லப்படுகின்ற பேருணவை உண்டுவிட்டு வந்திருப்பார். எனவே, நம்முடைய விருந்தை உண்பதற்கு வாய்ப்பு, ஒருசிறிதும் அவரிடம் இல்லாமற் போய்விடும்.

இதைவிட வருந்தத் தகுந்த நிலை என்னவென்றால், எல்லை மீறிய சிரமம் எடுத்துக் கொண்டு நாம் தயாரித்த உணவை அவர் உட்கொள்ளாமல் ஒதுக்குவதைப் பார்த்து மனம் வருந்தி, "ஐயா, உங்களுக்காகவே இவ்வரிய விருந்தை தயாரித்தேன். நீங்கள் இதனை ஏற்றுக் கொள்ளாமல் விட்டு விடுவது வருத்தமாய் இருக்கிறது!" என்று எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகி அவரிடம் பேசுகிறோம். அதுபற்றி ஒரு சிறிதும் கவலைப் படாமல் அப்பெரிய மனிதர், "வருகின்ற வழியில் பத்மபூஷணம் பரதர் மிகவும் உபத்திரவப்படுத்தினார். சாப்பிடாமல் அனுப்ப மறுத்துவிட்டார். ஆகையினால், அவருடைய வீட்டில் கொஞ்சம் கையை நனைத்துவிட்டு வந்தேன்," என்று விடை கூறுகிறார். சிரமப்பட்டு விருந்து தயாரித்த நம்முடைய மனநிலை எப்படி இருக்கும் என்பது சொல்லத் தேவையில்லை.

இத்தனை தொல்லைகளும் ஏன் விளைகின்றன? விருந்தினர் அல்லாதவர்களை விருந்தினர் என்று நினைத்துக் கொண்டு நாமும் அல்லற்படுகிறோம், அவர் களையும் அல்லற்படுத்துகிறோம். பின்னர்க் கிடைக்கப்

போகின்ற இலாபத்தைக் கருதிச் செய்யப்படுகின்ற உபசரணைகள் அனைத்தும், விருந்து என்ற பெயரில் அடங்கா! முன்னர் வராதவர்களாய், மீட்டும் எக் காலத்தும் நமக்குத் திருப்பித் தராதவர்களாய், வேறு எத்தகைய பிரதி உபகாரத்தையும் நம்மால் எதிர்பார்க்கப் படாதவர்களாய் உள்ளவர்களே விருந்தினர்கள் என்ற சொல்லுக்குப் பொருளாவார்கள்.

இத்தகைய விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதில் நம்முடைய நாடு தனிப் பெருமை உடையது. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் திருக்குறள், 'விருந்தோம்பல்' என்றே ஓர் அதிகாரத்தை பேசுகின்றது. எனவே, சமுதாய வாழ்வு சிறக்க வேண்டுமேயானால், ஒரு தனிப்பட்ட மனிதன் சமுதாயத்தில் சிறந்த உறுப்பாக வேண்டுமேயானால், அவன் விருந்தோம்பலை ஒரு தலையாய கடமையாக மேற்கொள்ள வேண்டும்.

இன்றுங்கூட ''அடையா நெடுங்கதவும், அஞ்சல் என்ற சொல்லும்'' உடைய பல பெரியவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இத்தமிழ் நாட்டில் ''கொடுத்துக் கெட்ட வர்கள் இல்லை,'' என்ற பழமொழியே ஏற்பட்டுள்ளது என்றால், விருந்தோம்பலின் பெருமையை யார் அளவிட்டுக் கூறமுடியும்? உண்மையைச் சொல்லப் போனால், கொடுத்தமையினாலே, கணக்கில்லாமல் கொடுத்தமை யினாலே, தம் செல்வ நிலை கெட்டு வறுமை அடைந்த குடும்பங்களும் உண்டு. என்றாலும், அந்த வறுமையுற்ற நிலைமையிலுங்கூட அவர்கள் கொடுக்கின்ற மனப் பான்மையை, விருந்து உபசரிக்கின்ற மனப்பான்மையை, மறப்பார்களோ?

'' எந்தை நல்கூர்ந்தான் இரப்போர்க்கு ஈந்து என்று அவன்
மைந்தர் தம் ஈகை மறுப்பரோ''

அதாவது, 'எம் தந்தை வந்தவர்கட்கெல்லாம் வேண்டு மளவு கொடுத்தமையால் வறுமை அடைந்து விட்டான்!'

என்று அவனுடைய மைந்தர்கள் ஒரு நாளும் தம்முடைய ஈகைத் தன்மையிலிருந்து மாறப் போவதில்லை என்பதே இதன் பொருள்.

விருந்தோம்பல் என்பது பரம்பரையாக வருகின்ற ஒப்பற்ற தமிழ்ப் பண்பாடு என்று கூறினால், அதில் தவறு இல்லை. விருந்தோம்பல் என்ற பண்பாட்டிற்கும், செல்வ நிலைக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. பல சமயங்களில் செல்வ நிலை குறையக் குறைய இப்பண்பாடு மிகுந்து கொண்டு செல்வத்தைக் காணலாம். அவ்வாறானால், கட்டுரையின் தொடக்கத்தில் ஒரு விருந்துச் சமையலைப் பற்றிக் குறிப்பிட்டோமே, அது விருந்தோம்பலில் அடங்காதா என்ற வினாத் தோன்றலாம். உண்மையில், அது விருந்தோம்பல் அன்று. ஒன்று, கடமை என்று சொல்ல வேண்டும்; அன்றேல், அதனை வேறு ஏதாவது பெயர் கொடுத்து வழங்க வேண்டும்.

கற்றோர் இதயம் களிக்கும் முறையில் இராமாயணத்தைப் பாடிய கம்பநாடனை வைத்து உபசரித்த பெருமை வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலுக்கே உரியது. அப்பெரு வள்ளல் எத்தகையவர்களை வரவேற்று உபசரித்தான் என்பதைக் கம்பநாடனே பாடுகின்றான். அந்த உபசரிப்பின் பெருமையைக் கூற வந்த கம்பன், சேதுபந்தனப் படலத்தில் அழகிய ஓரிடத்தில் சடையனின் விருந்தோம்பும் பெருமையை எடுத்துக் கூறுகிறான்.

சேதுபந்தனம் செய்வதற்காக வேண்டிய கற்களை எல்லாம் மிகப் பெரிய மலைகளிலிருந்து பெயர்த்து, விரைந்து எடுத்து எல்லாக் குரங்குகளும் எறிகின்றனவாம். பல குரங்குகள் பல திசைகளிலிருந்தும் பற்பல வேகத்துடன் எறிகின்ற பல்வேறுபட்ட அளவுடைய கற்களை எல்லாம் நளன் என்று சொல்லப்படும் கல் தச்சன் மிகவும் இலாகவமாக வாங்கி அந்த அணைக்குப் பயன்படுத்துகிறானாம். இக்கருத்தைச் சொல்ல வந்த புலவன், சடைய

னுடைய விருந்தோம்பலுக்கும் இதனையே நிலைக்களம் ஆக்குகின்றான்.

'மேக மண்டலத்தைத் தொட்டுக்கொண்டு இருக்கின்ற மலைகளைப் பெரிய குரங்குகள், மிகவும் ஆத்திரத்தோடு எடுத்து எறிய, நளன் என்னும் தச்சன் மிகவும் இலாகவமாக அக்கற்களைத் தாங்கி விட்டான். எது போல எனில், சடையப்ப வள்ளல் ஒருவனே திருவெண்ணெய் நல்லூரிலே தஞ்சம் என்று வந்தவர்களை எல்லாம் தாங்குகின்ற தன்மையைப் போல,' என்னும் கருத்தில்,

"மஞ்சினில் திகழ்தரு மலையை மாக் குரங்கு
எஞ்சுறக் கடித்து எடுத்து எறியவே நளன்
விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சம் என்றோர்களைத் தாங்கும் தன்மைபோல்"

என்று பாடுகின்றான்.

இப்பாடலில் உள்ள சிறப்பை அறிய வேண்டும். குரங்குகளால் எடுத்து எறியப்பட்ட மலைகள், மேகஞ் சூழ்ந்த மலைகள் என்று புலவன் சொல்லுகிறான். இதற்கு உவமையாக உள்ளவர்கள் சடையனிடத்தில் விருந்து உண்ண வருகின்றவர்கள். அதாவது, சடையனிடம் பசியினால் உந்தப்பட்டு வருகின்றவர். மலையைப் போன்ற கௌரவம் உடைய பெரியவர்களும், மலையடிவாரத்தைப் போன்ற சாதாரண நிலையிலுள்ள சோற்றுத் துருத்திகளும் ஆவர். அந்தப் பெரிய மலைகளைக் குரங்குகள் எடுத்து எறிகின்றன என்று சொல்வதுபோல இந்தப் பெரியவர்களைப் பசி என்ற குரங்கும் வறுமை என்ற குரங்கும் இடம் விட்டு விரட்டுகின்றன.

சாதாரணமாகக் கட்டடவேலை செய்கின்ற இடத்தில் நின்று பார்த்தால், ஓர் உண்மை விளங்கும். கற்களை எடுத்து வீசுவார் ஒருவர். அவற்றை மிக இலாகவமாக மற்றொரு பெண் வாங்கி வைப்பாள். அந்த இலாகவம் இல்லாவிட்டால், எறியப்பட்ட கற்கள் வாங்குபவரின்

கையைச் சிதைத்துவிடும். அதேபோல, சடையனிடம் வருகின்றவர்களின் தேவை அறிந்து அவன் உபசரிக்கின்றானாம். இரண்டு கல்லை வாங்கும் பொழுது கையை ஓரளவு தளர்த்தியும், நான்கு கற்களை வாங்கும் பொழுது ஓரளவு அதிகப்படியாகத் தளர்த்தியும் வாங்குகின்ற சாமர்த்தியம் போலச் சடையனும் வருபவருடைய தரம் அறிந்து உபசரிக்கின்றான் என்ற கருத்தைப் புலவன் உவமையிலேயே வைத்து உணர்த்திவிடுகின்றான்.

விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பத்துக் குறள்களுக்கும் இலக்காகச் சடையப்பன் வாழ்ந்தான் என்று கூறுவதில் தவறில்லை. எனினும்,

‘வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ ? விருந்து ஓம்பி
மிச்சில் மிசைவான் புலம் !’

என்ற குறளுக்குச் சிறப்பாக இவ்வள்ளலின் வாழ்க்கை எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது. எவ்வாறெனில் ஒருமுறை சடையப்ப வள்ளலின் வீட்டிற்கு வெட்டிக் கொணரப்பட்ட கரும்புகளுள் எல்லாம் ஒவ்வொரு முத்து இருந்ததாம். எனவே, விருந்தோம்புபவன் நிலத்தில் விதை இடாமலும் விளையும் என்ற குறள் உண்மை ஆதலைக் காண்கிறோம்.

# 26. எல்லா உயிரும் தொழும்

யாரை எல்லா உயிரும் தொழும்? குறள் ஒரு சில இலக்கணங்களை வகுத்து, இத்தகைய பண்பாடு உடையவர்களை உலகிலுள்ள எல்லா உயிர்களும் தொழும் என்று பேசுகிறது. இந்த அடியை மட்டும் எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், அழகான இரண்டு பொருள்கள் கிடைக்கக் காணலாம். யாரோ ஒருவரை, எல்லா உயிரும் தொழும் என்றும் பொருள் கொள்ளலாம். இதன் எதிராக, அந்த ஒருவர் எல்லா உயிரையும் வணங்குகின்றார் என்ற பொருளும் கூடக் கிடைக்கலாம் அல்லவா? பெரியவர்களின் சிறப்பு என்னவென்றால், அவர்கள் தங்களைப் பெரியவர்கள் என்று அறிந்து கொள்வதே இல்லை. எனவேதான் பிற உயிர்களை எல்லாம் வணங்கத் தயாராக இருக்கின்றார்கள்.

''பணியுமாம் என்றும் பெருமை,'' என்ற குறளுக்கு ஏற்ப வாழ்வை நடத்துகின்றவர்கள் ஆதலின், என்றைக்குமே தங்களை மிகச் சிறியவர்களாகவும், உலகிலுள்ள ஏனையோர் அனைவரையும் மிகப் பெரியவர்களாகவும் கருதிக்கொள்கின்ற பண்பாடு இவர்களிடம் உண்டு.

கிருஷ்ண சைதன்யர் ஒரு நாள் நடந்து செல்லுகையில் ஒரு மீன்கொத்திப் பறவையைக் கண்டாராம். வேகமாய்ப் பறந்துகொண்டிருந்த அம் மீன்கொத்தி, எவ்வளவு உயரத்தில் எவ்வளவு வேகமாகப் பறந்தாலும், கீழே

தண்ணீரை அடுத்து நீந்துகின்ற மீனின்மேல் கண் வைத்துக் கொண்டே செல்கிறது. ஒரு மீன் கண்ணில் தென்பட்டவுடன் தன் வேகத்தையும் போக்கையும் நிறுத்தி ஆகாயத்தின் நடுவில் அப்படியே சிறகை அடித்துக் கொண்டு சற்று நேரம் நின்றுவிடுகிறது. இதைக் கண்ட சைதன்யர் உடனே கீழே விழுந்து அப்பறவையை வணங்கினாராம்.

ஏன் என்று கேட்கப்பட்ட பொழுது, அப்பெரியவர் தந்த விடை நாம் அறிந்துகொள்ள வேண்டுவதொன்று. "வேகமாகச் செல்லுகின்ற மீன்கொத்தி எங்கே பறந்தாலும் தன் கவனம் முழுவதையும் கீழே நீரில் நீந்திச் செல்கின்ற சிறிய மீன்களின் மேலேயே செலுத்துகின்றது. அதே போல எவ்வளவு ஆழமாக இவ்வுலகப் பற்றில் ஈடுபட்டிருந்தாலும் ஆண்டவனிடம் எப்படி மனத்தைப் பதித்து வைக்க வேண்டும் என்பதை எனக்கு இந்தப் பறவை எடுத்துக் காட்டுகின்றது. அந்த அளவு ஒரு சிறந்த பாடத்தைக் கற்றுத் தந்தமையின் மீன்கொத்திக்கும் என் வணக்கம் உரியதாகும்!" என்று கூறினாராம். "எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு," என்ற குறளின் கருத்தை ஓரளவு அடியொற்றிச் செய்யப்பட்டதேயாகும் சைதன்யப் பிரபுவின் இச்செயல்.

உலகிலுள்ள மிகத் தாழ்ந்த உயிரிலிருந்து மிக உயர்ந்த மனிதன் வரை எல்லா உயிர்களிடத்திலும் நன்மை தீமை, உயர்வு தாழ்வு ஆகிய இரண்டு பண்புகளும் கலந்தேதான் இருக்கும். எனவே, ஒன்றை நல்லது அல்லது கெட்டது என்று முடிவு செய்வதற்கு எந்த அடிப்படையைக் கொண்டு முடிவு செய்யலாம் என்ற வினாத் தோன்றுமல்லவா? இதற்கு விடை கூற வந்த குறள், 'குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி, மிக்க கொளல்,' என்று கூறியது; அதாவது ஒருவனிடத்திலுள்ள நன்மை தீமை என்ற இரண்டையுமே எடுத்துக் கொண்டு

ஆராய்ந்து, அவற்றுள் எது மிகுதியாக இருக்கிறதோ அதையே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பேசுகிறது.

இந்த முறையில் ஆராய்ந்தால் எந்த ஒருவரையும் முழுவதும் நல்லவர் என்றோ, தீயவர் என்றோ கூறிவிட முடியாது. எவ்வளவு நல்லவரிடமும் ஒரு சில தீய பண்புகள் இருக்கலாம்; எத்துணைத் தீயவரிடமும் ஒரு சில நற்பண்புகள் இருக்கலாம். எனவே, ஒருவரை நல்லவர், தீயவர் என்று முடிவு கூறு முன்னர் இக்குறளின்படி ஆராய்ந்து, எது மிகுதியாக உள்ளதோ அதைக்கொண்டே முடிவு செய்ய வேண்டும்.

மனிதர்களிடம் உள்ள இப்பண்பாட்டை நன்கு அறிந்து கொண்டால் அனைவரிடமும் நன்கு பழக முடியும். எத்துணைக் கருத்து வேறுபாடு உடையவர் களிடமுங்கூட நன்கு பழக முடியும். உலகில் எவரையும் பகைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படாது. பிறரைப் பகைக்காமல் அன்பு செய்யும் பண்பாடு யாரிடம் எவ்வாறு ஏற்படும்? உலகில் உள்ள மக்கள் அனைவரும் குறைவு நிறைவு என்ற இரண்டுங் கலந்தவர்கள்தாம் என்ற உண்மையை அறிந்து விடுதல் மட்டும் போதாது. அவ்வாறு அறியப் பட்டவுடன் தீயவர்களிடம் வெறுப்புத் தோன்றுவது இயல்புதான். வெறுப்புத் தோன்றாமல் அவர்களையும் மன்னிக்கும் இயல்பு கிடைத்தற்கரிய ஒன்று.

மன்னிப்பதோடு நின்று விடாமல், அவன் அறியாமல் செய்கிறான் என்று உணர்ந்து அவனிடம் அன்பு செய்ய வேண்டுமாயின், அது மனிதர்களுள் சிறந்த மகாத்துமாக் களுக்கே முடியும். இப்பண்பைப் பெற, நிறைந்த அளவு மனோதிடம் வேண்டும். மனோதிடம் எப்பொழுது கிடைக்கும்? அச்சம் என்பதை முற்றிலும் மனத்திலிருந்தே அகற்றி விட்டால் அப்பொழுது அந்த மனோதிடம் கிட்டும். அச்சத்தை எப்பொழுது அகற்ற முடியும்?

'கொல்லாமை' என்று குறள் கூறும் வாழ்வை மேற் கொள்ளும் பொழுதுதான் இது இயலும்.

கொல்லாமை என்று கூறினவுடன் ஏதோ பிற உயிர்களைக் கொல்லாமல் தாவர உணவு உண்பது என்று நம்மில் பலரும் நினைக்கின்றோம். மகாத்துமா காந்தி 'நான் வயலன்ஸ்' (Non-Violence) என்ற சொல்லில் எவ்வளவு பொருளைக் கருதினாரோ அவ்வளவு பொருளும் இந்தக் 'கொல்லாமை' என்ற சொல்லில் இருக்கிறது. ''அறவினை யாது எனின் கொல்லாமை'' என்று கூறுகிறது குறள். கொல்லாமையே அறவினை என்றால் அது எவ்வளவு ஆழ்ந்த பொருளுடையதாக இருக்கும் என்று கூறத் தேவை இல்லை. 'கொல்லா நலத்தது நோன்மை' என்றும் அந்நூல் கூறுகிறது என்றால், 'கொல்லாமை' என்ற சொல்லின் பொருள் ஆழத்தை நன்கு அறிய வேண்டும். 'புலால் மறுத்தல்' என்ற ஓர் அதிகாரத்தால் கொல்லாமையின் சாதாரணப் பொருளைக் கூறிவிட்டது குறள். எனவே, 'கொல்லாமை' என்ற அதிகாரம் முற்றிலும் சத்தியாக்கிரகி மேற்கொள்ள வேண்டிய ஒன்றையே குறிக்கிறது.

கொல்லாமை மேற்கொள்பவன் போரிடும் வீரனைக் காட்டிலும் அதிக மனோதிடம் உடையவனாக இருத்தல் வேண்டும். தின்ன வரும் புலியினைக் கண்டு ஓடாமல் நிற்பதும், தடியை வீசிக் கொண்டு அடிக்க வருகின்ற காவலரின் எதிரே அச்சமின்றி நிற்பதும் கொல்லாமை மேற்கொண்ட ஒருவனாலேயே முடியும். இத்தகைய ஒரு வீரத்தைத்தான் அடிகளார் அனைவரிடமும் எதிர்பார்த்தார். ஆனால், அவரிடம் இருந்த அச்சமின்மை அளவிட்டறிய முடியாத அளவு நிறைந்திருந்தது. அந்த அளவு மனத்திட்பத்தைப் பிறரிடம் எதிர்பார்த்தல் இயலாத காரியம். தம்மைப் பொறுத்தவரை அவர் கடுமையான சில அளவு கோல்களைக் கொண்டிருந்தார். ஆனால், பிறரிடம் இத்தகைய கடுமையான மன நிலையை

அவர் எதிர்பார்க்கவில்லை. பணிவே வடிவாகப் பெற்றிருந்தமையின், மகாத்துமா அனைவரிடமும் அன்பு பாராட்டினார்.

அவர்களை மன்னிக்கவும், பரிவோடு அவர்கள் செய்யும் காரியங்களை ஆராயவும் அவர் சித்தமாய் இருந்தார். கடவுளிடம் நம்பிக்கை அற்றவர்கள் ஆசிரமத்தில் அடிகளுடன் விருந்தினராகத் தங்கியதுண்டு. அடிகள் ஒரு முறை ஜின்னாவை விருந்துக்கு அழைத்து, அவர் மனம் கோணாமல் உண்பதற்காகப் புலாலும் மதுவும் தந்தார்.

முற்றிலும் மாறுபட்ட துறைகளில் உள்ள பலரும் அடிகளாரின் உயிர் நண்பராய் இருந்தனர். அடிகளாரின் முக்கியச் செயலாளரான பியாரிலால் 1952-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 15-ஆந் தேதி 'ஹரிஜனில்' பின்வருமாறு எழுதினார்: "நுண்மையான வாணிக அறிவுடைய வியாபாரிகளான சேத் ஜம்னலால் பஜாஜ், ஜி. டி. பிர்லா போன்றவர்களும், ஆசார்ய கிருபளானி போன்ற நம்பிக்கை அற்றவர்களும், வித்தல்பாய் பட்டேல் போன்ற தேர்ந்த அரசியல் அறிஞர்களும், ஆன்ம விடுதலையடைந்த ஆச்சார்ய வினோபா போன்றவர்களும், இராஜாஜி போன்ற நுண்ணறிவுடைய அறிஞர்களும், வேடிக்கை நிறைந்த சரோஜினி நாயுடு போன்றவர்களும் அடிகளின் 'அந்தரங்க' நட்பினர் குழுவில் இருப்பவர்கள்."

இதனை எழுதிவிட்டு, "இத்துணை வேறுபாடு அமைந்த மக்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு மனிதர் ஆட்டிப் படைக்கிறார் என்றால், இதன் அடிப்படை எங்கேயுள்ளது?" என்று கேட்கிறார் அந்தச் செயலாளர். பின்னர் அவரே விடையும் தருகின்றார். எடுத்த காரியத்தை நடைமுறைக்கு ஏற்ப ஆராய்ந்து பணி புரிதலின், வியாபாரிகள் அவரை விரும்பினர். என்றும் புதுமை காணப் பழமையை உடைத்தெறியும் அவருடைய

மனநிலையைக் கண்டு கிருபளானியும் பண்டித நேருவும் அவர்பால் அடிமையாயினர். சமயவாதியாகவும் கர்ம வீரராகவும் நின்று பணி புரியும் அவருடைய செயல் திறம் மௌலானா ஆஸாத்தைக் கவர்ந்தது. ஆசார்ய விநோபாபாவே அடிகளைப் பழைய நாளைய அடியாராகவே மதித்தார்.

ஆம்! இத்துணை வேறுபாடு உடையவர்களும் ஒருவரை மதித்தார்கள்; மதித்தது மட்டுமா? கை கூப்பியுந் தொழுதார்கள். நண்பர்களாகிய அவர்கள் மட்டுமா? அடிகளை முதன்முதலில் விசாரித்துத் தண்டித்த நடுவணர் 'புரூம்பீல்டு' தண்டனையை அளிக்கு முன் அடிகளை வணங்கிவிட்டுக் கூறிய சொற்கள் நினைவில் இருத்த வேண்டுபவை: ''சட்டம் இன்னார் இனியார் என்று பார்ப்பதில்லை. என்றாலும், என் வாழ்நாளில் உங்களை ஒத்த ஒருவரை இதுவரை விசாரித்ததில்லை; இனியும் விசாரிக்கப் போவதில்லை. உங்களோடு அரசியலில் மாறுபடுகின்றவர்களும், உங்கள் உயர்ந்த குறிக்கோளையும் தூய அடியார் வாழ்க்கையையும் மறுப்பதற்கில்லை.''

இவ்வாறு நண்பர், நொதுமலர், பகைவர் ஆகிய அனைவரும் வணங்கும் நிலையைத்தான் குறள்,

> ''கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
> எல்லா உயிரும் தொழும்''

என்று கூறுகின்றது.

'புலாலை மறுத்தானை' என்ற தொடரால் உணவைப் பற்றிக் குறளாசிரியர் கூறிவிட்டார். அப்படியானால் 'கொல்லாமை' என்ற சொல்லின் பொருள் யாது? சத்தியாக்கிரகி மேற்கொண்ட (Non-violence) கொல்லாமையையே அச்சொல் குறிக்கின்றது.

அத்தகைய ஒரு சத்தியாக்கிரகியை எல்லா உயிரும் தொழுவதில் வியப்பில்லை. அதுவே குறள் கண்ட உண்மையும் ஆகும்.

# 27. நுனிக் கொம்பு

"இன்று இன்னாருடைய சொற்பொழிவாமே! சென்று வரலாமா?" என்று கேட்கிறார் ஒருவர். "அவரா! புண்ணியவான் தொடங்கிவிட்டால் எப்பொழுது முடிப்பதென்று அவருக்கே தெரியாதே! மணிக்கணக்கில் வளவளவென்று பேசிக்கொண்டே இருப்பார்!" என்று பதில் கிடைக்கக் காண்கிறோம். சொற்பொழிவைத் தொடங்கிவிட்டால், எப்பொழுது நிறுத்துவது என்று தெரியாமல் பேசிக்கொண்டே இருப்பவர்களும் உண்டு.

பலர் உண்மையிலேயே மிக நல்ல முறையில் சொற்பொழிவு செய்யினும், எப்பொழுது நிறுத்த வேண்டும் என்பதை அறியாமையால், பிறரால் எள்ளி நகையாடப்படுகின்றனர். சொற்பொழிவு செய்தல் எவ்வாறு ஒரு சிறந்த கலையோ, அதைவிடப் பெரிய கலை, நேரம் தெரிந்து அதனை நிறுத்திக் கொள்வது. சொற்பொழிவு செய்பவர்கள் எந்த அளவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிந்து கொள்ளாமல் மேலும் மேலும் பேசிக்கொண்டே செல்வார்களாயின், அதனால் விளையும் பயனைப் பற்றிக் கூற வேண்டுவதில்லை. கூட்டத்தில் உள்ளவர் அனைவரும் எழுந்து சென்று விடுவர்.

'எந்த அளவு வரையில் செல்லலாம்? எங்கே நிறுத்திக்கொள்ள வேண்டும்?' என்ற திட்டங்கள்

சொற்பொழிவில் மட்டும் அன்றி, வாழ்க்கையில் எல்லாப் பகுதிகளிலும், எல்லாத் துறைகளிலும் பெரிதும் வேண்டப் படும். அன்பு செய்வதிலுங்கூட ஓர் எல்லை உண்டு; அந்த எல்லையை மீறிச் செல்வதானால் தீமையே விளையும். ''என்ன! அன்பு செய்வதிற்கூட ஓர் எல்லை உண்டா? 'அன்பால் உலகம் வாழ்கிறது. அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்,' என்றெல்லாம் கூறிவிட்டு, இப்பொழுது அன்பையும் அளந்து செய்ய வேண்டும் என்று கூறுவது முறையா?'' என்று சிலர் வினவலாம்.

அன்பு செய்தல், பக்தி செய்தல் முதலிய எதிலுமே அளவு மீறிச் செல்கின்றவர் உண்டு. அவர்கள் மிகப் பெரியவர்கள். சாதாரண மக்களுக்கு உரிய சட்டம் அவர்களைக் கட்டுப்படுத்துவது இல்லை. அதேபோல அவர்கள் வாழ்க்கையை ஒட்டிப் பிறர் வாழ்வை அமைத்துக்கொள்ள முடியாது; வேண்டுவதும் இல்லை. நம்மைப் போன்ற சாதாரண மக்களைப் பொருத்த மட்டில் எதிலுமே ஓர் எல்லை வேண்டும். இந்த எல்லையை மீறும் பொழுது தவறாமல் தொல்லை உண்டாகும்.

எல்லை மீறிச் செல்கின்றவர் யாவராயினும் தொல்லையை அனுபவிக்கத்தான் வேண்டும். அவர்கள் பெரியவர்களாயினும், சிறியவர்களாயினும் இயற்கையின் இந்தச் சட்டத்திலிருந்து விடுதலை பெற முடியாது! 'வீராவரும் புவிக்கெலாம் வேதமேயன இராமனை'ப் பெற்றவன்தான் தசரதன். வயது முதிர்ந்த காலத்தில் பெற்ற பிள்ளைகளாகலின், ஓரளவு அதிகப்படியான அன்பு செய்தலும் முறைதான். என்றாலும், அதிக அன்பு செய்வதிலும் ஓர் அளவில்லாமல் சென்றுவிட்டான் தசரதன். சக்கரவர்த்தியாய் இருக்கின்ற ஒருவனுக்கு இரண்டு வகைக் கடமைகள் உண்டு. ஒன்று, அவன் தன்னுடைய நலம் தீங்குகளைப் பாராட்டாமல் தன்னால் ஆளப்படுகின்ற மக்களின் நலம் ஒன்றையே கருதி வாழ்வ

தாகும். இரண்டாவது, தன்னுடைய குடும்பத்தாரிடம் தந்தை என்ற முறையில். அல்லது குடும்பத் தலைவர் என்ற முறையில் அன்பு பாராட்டுவதாகும். இவ்விரண்டு வகைக் கடமைகளுள் ஏதாவது ஒன்றை மிகுதியாகச் செய்யத் தொடங்கினால் மற்றையதொன்று துன்பம் அடைய நேரிடும். ஆதலாலேதான் இவை இரண்டையும் மன்னனாய் இருப்பவன் அளவறிந்து செய்ய வேண்டும் என்று நீதி நூல்கள் கூறுகின்றன.

''நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி,'' என்று விசுவாமித்திரன் கேட்ட பொழுதே தசரதன் ''கண்ணிலான் பெற்று இழந்தான் என உழந்தான் கடுந்துயரம்.'' பின்னர்க் கைகேயி சூழ்வினையால் இராமன் கானகம் செல்ல நேர்ந்தது. தசரதன் அக்கொடுமையை எவ்வாற்றானும் தடுக்க முடியாதவன் ஆகிவிட்டான். இன்னும் சொல்லப் போனால், இராமன் முதலியவர்கள் கானகம் சென்றதை அவன் அறியக்கூட இல்லை. மயக்கம் தெளிந்த நிலையில் ஒரு சிலர், ''தேர் வந்து விட்டது,'' என்று கூறினார்கள். அணித்தே நின்ற வசிட்டனை, ''இராமன் வந்தானோ?'' என்று வினவினான் மன்னன். விடை கூற மனமில்லாத வசிட்டன் வெளியே சென்றுவிட்டான். உடனிருந்த சுமந்திரனை நோக்கிக் குறிப்பாகப் பார்த்தான் தசரதன். சுமந்திரன், ''வேய் உயிர் கானம் தன்னில் போயினான்,'' என்றான்; என்ற போழ்தே ஆவி நீத்தான் தசரதன்

சக்கரவர்த்தியாகிய தசரதன் அருமை மைந்தனாகிய இராமனிடத்தில் அன்பு வைப்பது முறை என்றாலும், ஓரளவு அதிகமான அன்பு வைப்பதும் தவறில்லை என்றாலும், எல்லை மீறிய அன்பு வைப்பதானது நுனி மரத்தில் ஏறினவன் அதற்கு மேலும் ஏற முயல்வதையே ஒக்கும் தசரதனைப் பற்றிக் கூற வந்த கம்பநாடன், ''மைந்தனை அலாது உயிர் வேறு இலாத மன்னன்'' என்று சொல்கிறான் எனவே, மைந்தர் பாட்டுக் கொண்ட அன்பேயாயினும் எல்லை மீறினால் தீமை பயக்கும் என்பதை நன்கு அறிகின்றோம்.

எந்த ஒரு செயலிலும் எல்லை மீற வேண்டிய தொல்லை ஏன் ஏற்படுகிறது? இதன் காரணத்தை அறிய மனித மனத்தின் விந்தையைக் கொஞ்சம் ஆராய வேண்டும். மிக்க ஆர்வத்தோடு ஒரு விஷயத்தைத் தொடங்குகின்றவர் பல சமயங்களில் அந்த ஆர்வம் காரணமாக எங்கே நிறுத்துவது என்று தெரியாமல் தவிக்கின்றார். முதலில் கூறிய சொற்பொழிவாளரும் எப்பொழுது எங்கே சொற்பொழிவை நிறுத்த வேண்டும் என்பதை அறிந்து கொள்ளாமல், மக்களுக்கு வெறுப்புத் தட்டுகிற வரையில் சென்று விடுகின்றார். தசரதனும் எந்த அளவில் மகன் மாட்டுக்கொண்ட அன்பை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரியாமல் உயிரையே இழந்து விடுகின்றான்.

சாதாரண மக்கள் ஒரு புறம் இருக்க, இந்த உண்மையை மறந்து அதனால் உயிரையும் விட்ட மன்னர் பலர் உண்டு உலக வரலாற்றில். உலகம் போற்றும் ஒப்பற்ற பெரு வீரனாகிய நெப்போலியன் ரஷ்யாவின் மேல் படையெடுத்துச் சென்றான். மாஸ்கோ நகரம் அடைகின்ற வரையில் ஒப்பற்ற வெற்றிகளைப் பெற்றான். ‘நுனி மரத்துக்கு வந்து விட்டோம்! இனியும் மேலே ஏறத் தொடங்கினால் உயிருக்கு ஆபத்து விளையும்!' என்ற உண்மையை மறந்ததனால் சரித்திரப் பிரசித்தி பெற்ற நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்பு, உலக முழுவதும் எள்ளி நகையாடுகின்ற கேலிக்கூத்தாய் முடிந்தது நம் காலத்தில் உலகை ஆட்டிப் படைத்த ஹிட்லருங்கூட குறள் கண்ட இந்த விதிக்கு விலக்கல்லன். நுனி மரம் வரை ஏறியதோடு அமையாமல் அதற்கு மேலும் ஏற முயன்றதால், ஹிட்லர் அடைந்த படு நாசத்தைச் சரித்திரம் எடுத்துக் கூறும்.

நேர்மைக்கும் நெஞ்சு உரத்துக்கும் புகழ் வாய்ந்த தமிழ்ப்புலவர் கூட்டத்தில் நக்கீரர் என்ற பெயருடன் ஒருவர் அல்லாமல் பலர் இருந்திருக்கின்றனர். அவருள் ஒரு நக்கீரன் மிக்க நெஞ்சு உரம் வாய்ந்தவனாய், தான்

உண்மை என்று கருதும் ஒன்றுக்காகப் போராடும் இயல்புடையவனாய் இருந்திருக்கிறான். அவன் காலத்தில் மதுரையை ஆட்சி செய்த பாண்டிய மன்னன் ஒருவனுக்கு ஓர் ஐயம் தோன்றியது. அம்மன்னன் மறுநாள் சங்கப் புலவர்களை அழைத்து, ''புலவர்களே, என் மனத்திலுள்ள ஐயத்தையும் அதனைப் போக்குதற்குரிய விடையையும் தருபவர் எவராயினும், அவருக்கு உரியதாகும் ஆயிரம் பொன் கொண்ட இந்த முடிச்சு!'' என்று ஒரு பொன் முடிச்சைத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் தொங்க விட்டு விட்டான்.

ஆலவாயின் அவிர்சடைக் கடவுளுக்கு வழிபாடு செய்யும் தருமி என்னும் அந்தணச் சிறுவன், வறுமையால் வாடி இறைவனை வேண்டினான். அவன் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பிய இறைவன், ''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!'' என்று தொடங்கும் ஒரு பாடலை எழுதித் தருமியினிடம் தந்தான். தருமி மகிழ்ச்சியோடு அதனை எடுத்துச் சென்று மன்னனிடம் காட்டினான். அரசனது ஐயத்தைப் போக்கும் பொருள் அப்பாடலில் இருந்தமையின், மன்னன், ''நீ சென்று அப்பொன் முடிச்சை எடுத்துச் செல்க,'' என்று கட்டளை இட்டு விட்டான்.

தருமி பொன் முடிச்சை அவிழ்க்கச் செல்லும் நேரத்தில், ''ஏழைச் சிறுவனே, பொன் முடிச்சைத் தொடாதே!'' என்ற இடிக்குரல் கேட்டு அஞ்சிவிட்டான். நக்கீரன், ''பிழை நிறைந்த இப்பாடலை உனக்குப் பாடித் தந்த புலவனை அழைத்து வா!'' என்று ஏவினான். இறைவன் புலவன் வேடத்தில் வந்து நக்கீரனுடன் வாதாடிய வரலாற்றைத் தமிழ் உலகம் நன்கு அறியும்.

ஆனால், இவ்வரலாற்றிலே நக்கீரனுடைய அஞ்சா நெஞ்சத்தைக் கண்டு அவனுக்கு அஞ்சலி செலுத்து கின்றவர்கள் ஒன்றை மறந்து விடுகின்றார்கள். 'தலைவியின் கூந்தல் இயற்கை மணமுடையது' என்று பாடல் சொல்லிற்று. நக்கீரன் அதனை மறுத்துப் 'பெண்

களின் கூந்தல் செயற்கையால் மணமடைகின்றதே தவிர, இயற்கை மணமுடையதன்று,' என்று கூறினான். வந்த புலவன், 'தெய்வ மகளிரின் கூந்தல் எத்தகையது?' என்று கேட்டான். ஆராயாத நக்கீரன், ''அவர்கள் கூந்தலும் அத்தகையதுதான்!'' என்று கூறிவிட்டான். மூன்றாவதாக ''நீ வழிபடும் ஞானப் பூங்கோதையின் கூந்தல் எத்தகையது?'' என்று வினவினான் வந்த புலவன். நுனிக் கொம்பு வரை ஏறிவிட்ட நக்கீரன், நிறுத்திக் கொள்ள வேண்டிய எல்லையை மறந்து விட்டான்; அகங்கார மிகுதியால் கேள்வியைக் கூடப் புரிந்து கொள்ளவில்லை. ''ஞானப் பூங்கோதையின் கூந்தலும் செயற்கை மணமுடையதுதான்!'' என்று விடை கூறினான். ஞானப் பூங்கோதை என்ற சொல்லின் பொருளை, அதாவது ஞானமாகிய கூந்தல் என்பதைக்கூட மறந்து விட்டான் நக்கீரன்.

அவன் கண்ணால் கண்ட உலகப் பெண்களின் கூந்தலைப் பற்றிச் செயற்கை மணமுடையது என்று கூறுவது ஒருவேளை பொருத்தமுடையதாக இருக்கலாம். ஆனால், கண் காணாத தேவ மகளிரைப் பற்றிப் பேசியது பொருத்தமற்றது. அதைவிடக் கேவலமானது, ஞானப் பூங்கோதை என்ற சொல்லின் பொருளைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் அதுவும் செயற்கை மணமுடையது என்று கூறியது. எனவே, அகந்தை காரணமாக நுனி மரம் வரையில் ஏறிவிட்ட நக்கீரன், எங்கே நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதை அறியாமல், உயிருக்கு இறுதியைத் தேடிக் கொண்டான். நம்மில் பலரும் செய்கின்ற இத் தவற்றையே குறள்,

> ''நுனிக் கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின்,
> உயிர்க்கு இறுதி ஆகி விடும்'

என்று கூறுகிறது.

இங்ஙனம் வாழக் கூடாது என்று குறள் கூறியிருப்பவும், நக்கீரன், நெப்போலியன், ஹிட்லர் ஆகியோர் இவ்வாழ்க்கையை மேற்கொண்டு குறள் கூறிய பயனையே அடைந்தனர்.

கங்கை

Printed by Elangovan Printers, Madras-600014.